April 2018

9ம் ஆண்டில்

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



சித்திரைச் சிறப்பிதழ்


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# இதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**April 2018**

சுவடி — 8
ஓலை — 2

## வணக்கம் பல

இயற்கையானது தனது வழியில் பருவமாற்றத்தை ஏற்படுத்தியவாறு கால மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொண்டே வருகிறது. மழை முடிந்து வசந்தம் வந்தது. இதோ... வசந்தம் முடிந்து கோடைக்காலமும் துவங்கி விட்டது. உலக நாடுகள் பலவற்றின் புத்தாண்டு இக்காலக்கட்டத்தில் துவங்குகின்றன. உலகின் மூத்த தொல்குடிகளான தமிழ், சீன, கிரேக்க இனங்கள் கோடையின் துவக்கத்தை ஒட்டிப் பிறக்கின்ற காலகட்டமே சித்திரை. இதுவே தமிழர்களின் தொன்றுதொட்ட பயணத்தில் மிகவும் முக்கியமான காலகட்டமாக இருந்து வருகிறது.

உலகத் தமிழினம் சித்திரைப் பெருவிழாவாக தங்கள் தொன்மையைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில், குறிப்பாக இந்த தசாப்தத்தில் நடக்கின்ற நிகழ்வுகள், தமிழின்மீதும், தமிழகத்தின்மீதும், தமிழர்மீதும், நிகழ்த்தப்படுகின்ற கொடுமைகள், எதிர்காலத்தில் கடும்பாதக விளைவுகளை ஏற்படுத்தவிருக்கின்றன. உலகெங்கும் பரவலான மதவாத, இனவாத சக்திகள், தமிழினத்தின், தமிழ்நிலத்தின் அடையாளங்களை அழித்துவிட முயற்சித்து வருகின்றன. அச்செயல்களுக்கு எதிராகக் காத்திரமான முன்னெடுப்புகளுக்கு தமிழர்கள் தற்போது தயாராக வேண்டியிருக்கிறது.

அடையாளங்களைத் தொலைத்த பல இனங்கள் அடிச்சுவடே இல்லாமல் அழிந்து போனதை வரலாறு நெடுகக் காணமுடிகிறது. அந்த வரலாறே இன்றைய சமூகத்துக்குப் பெரும் படிப்பினையாக இருந்து வருகிறது. அந்தப் படிப்பினையைத் படிக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழினத்தை மீண்டும் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது காலம்! எனவே தமிழினம் தன்னைத் தற்காத்துக் கொள்ளவும், தகவமைத்துக் கொள்ளவும் பிறக்கின்ற இந்தச் சித்திரைத் திருநாளில் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்! அந்த உறுதிமொழியில்தான் எதிர்கால சந்ததியினரின் இருப்பு உறுதி செய்யப்படவிருக்கிறது.

புதிதாகத் தமிழுக்கும் தமிழர் வாழ்வுக்கும் ஆற்றப்பட வேண்டிய சேவைகள் ஒருபுறம் இருக்கிறது என்கிற கடமையுணர்வும், காலங்காலமாய் தமிழர் வாழ்வு தக்க வைத்திருக்கும் விழுமியங்களை எதுவும் விழுங்கிவிடாமல் காத்திட வேண்டிய பொறுப்புணர்வும் இன்றையத் தமிழர்களின் இலக்காக இருக்க வேண்டும். உலகத் தமிழர்கள் அனைவருக்கும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...

நினைத்து முடித்தவன்
மலிந்த வல்லரசு
மதமில்லா வள்ளுவம்
அழிவில்லா மொழி
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
பிரவகிக்கும் பிரச்சனை
மருத்துவத் தமிழ்
மாற்றம்! நிரந்தரம்!



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# நினைத்து

## ஸ்டீவன் ஹாக்கிங்: காலத்தின் வரலாற்றாசிரியர் !

இங்கிலாந்தை நாட்டைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீஃபன் ஹாக்கிங் உடல் நலக் குறைவால் இன்று காலமானார். நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஸ்டீஃபன் ஹாக்கிங் மரணச் செய்தியை அவரது மூன்று மகன்களும் கூட்டாக இன்று அறிவித்தனர்.

மிகச் சிறந்த விஞ்ஞானி, தலைசிறந்த மனிதர், இவரது கண்டுபிடிப்புகள் இன்னும் பல ஆண்டுகளுக்கு மக்கள் மனதில் இருக்கும் என்று அவரது மகன்கள் லூசி, ராபர்ட், டிம் ஆகியோர் கூறியுள்ளனர்.






1942ம் ஆண்டு ஜனவரி 8ம் தேதி இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டில் ஸ்டீஃபன் ஹாக்கிங் பிறந்தார். சாதாரண பிள்ளைகளைப் போலவே வளர்ந்த ஹாக்கிங் 21 வயதாக இருக்கும் போது நரம்பியக்க நோயால் பாதிக்கப்பட்டார். படிப்படியாக அனைத்து உறுப்புகளும் செயலிழந்து போன நிலையிலும், அவரது தன்னம்பிக்கை மட்டும் அதீதமாக வேலை செய்தது.

செயலிழக்கும் ஒவ்வொரு உடல் உறுப்புக்கும் மாற்று வழியை தனது கண்டுபிடிப்பாலேயே தயாரித்து பயன்படுத்தினார். இதுபோன்றதொரு கொடிய நோய் தாக்கி 50 ஆண்டுகளுக்கும் மேல் வாழ்ந்து மருத்துவர்களுக்கே அதிர்ச்சியை அளித்தார் ஹாக்கிங்.

1985ம் ஆண்டு நோய் இவரை கடுமையாக தாக்க மூச்சு விடக் கூட இயலாத நிலையில், டியூப் பொறுத்தப் பட்டது. இதனால் எலக்ட்ரானிக் வாய்ஸ் இயந்திரத்தின் உதவியால்தான் இவர்

# முடித்தவவ்

மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் நிலை ஏற்பட்டது. எந்த நிலையிலும் ஹாக்கிங் தனது விஞ்ஞானப் பணியை நிறுத்தவில்லை. தொடர்ந்து பணியாற்றினார். கடுமையாக பணியாற்றிக் கொண்டே இருந்தார்.

தனது தோற்றத்தைப் பற்றி எப்போதும் அவர் கவலைப்பட்டதே இல்லை. வழக்கம் போல தொலைக்காட்சிகளில் தோன்றி தனது அறிவியல் கண்டுபிடிப்புகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார். எளிய நடையில் அவர் எழுதிய பல அறிவியல் புத்தகங்கள் ஏராளமான இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்தது.

1965ம் ஆண்டு இளமை பருவத்தில் ஜேன் வில்டி என்பவரை காதல் திருமணம் செய்து கொண்ட ஹாக்கிங், பிறகு உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் தனக்கு உதவிகளை செய்து வந்த செவிலியர் பால் ஈர்ப்பு கொண்டு அவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். அனைத்தையும் தாண்டி ஒரு புனிதமான திருமணமாக இது அமைந்தது.


ஸ்கைப் மூலம் உலகில் உள்ள தனது நண்பர்கள், விஞ்ஞானிகள் பல பலரோடு தொடர்பு கொண்டிருந்தார். முதலில் இருந்ததை விட, தொழில்நுட்ப உதவியோடு சமீபத்தில் தனது கருத்துக்களை இரண்டு மடங்கு அதிகமாக வெளிப்படுத்தியவர் ஹாக்கிங்.




கோட்பாடு இயற்பியலாளர், எழுத்தாளர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியர் என பன்முக ஆளுமை கொண்டவர். இயற்பியல் ஆராய்ச்சியைப் போலவே எழுத்துலகிலும் இவர் கொடிகட்டிப் பறந்தார். அண்டவியல், குவாண்டம் ஈர்ப்பு உள்ளிட்டவை இவரது ஆய்வுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

பேசவோ, எழுதவோ முடியாத நிலையிலும்

அதிநவீன சக்கர நாற்காலி மூலம் அவரது செயல்பாட்டை மேற்கொண்டு வந்தார். பேசும் திறனை இழந்த போது ஸ்பீச் சின்தைசர் என்ற செயலியை கண்டுபிடித்தார். நரம்பியக்க நோயால் பாதிக்கப்பட்ட போது, ஸ்டீஃபன் இன்னும் 2 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்வார் என்று மருத்துவர்கள் கூறியிருந்தனர். ஆனால் அவர்களது கணிப்பை பொய்யாக்கினார் ஹாக்கிங்.



1963 முதல் செயலிழப்பை சந்தித்து வந்தாலும், தனது உடலில் செயல்படும் ஒரே ஒரு உறுப்பான கன்னத்தை அசைப்பதன் மூலம் தனது கருத்துக்களை கூறி வந்த ஹாக்கின்ஸ், சில குறியீடுகளை உதடுகளையும், புருவத்தையும் அசைத்து வெளிப் படுத்தினார்.

அவரது மூளையோடு கணினியை இணைத்து அவர் பேச நினைப்பதை கணினி திரையில் எழுத்து வடிவில் கொண்டு வரும் அளவுக்கு அவரது மாணவர்கள் ஒரு கணினியுடன் கூடிய நாற்காலியை உருவாக்கினர்.




விண்வெளிக்குச் செல்லாத விஞ்ஞானி ஸ்டீஃபன், மாற்றியமைக்கப்பட்ட விமானத்தில் அண்டார்டிகா மீது பறந்தவர். தனது பெயரை தவறான விஷயங்களுக்கு பயன்படுத்தாத வகையில், ஸ்டீஃபன் ஹாக்கிங் தனது பெயருக்கு காப்புரிமை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியராகவும், சிறந்த எழுத்தாளராகவும் அவர் விளங்கினார். அண்டவியல், அணுக்கட்டமைப்பு தொடர்பான ‘எ பிரிஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம்‘ என்ற தலைப்பில் ஹாக்கிங் 1988—ஆம் ஆண்டு எழுதிய புத்தகம் மிகவும் பிரபலமானது. அவரது இந்த சிறந்த படைப்பு, ‘காலம்: ஒரு வரலாற்றுச் சுருக்கம்‘ என்ற பெயரில் தமிழிலும், வேறு பல மொழிகளில், மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. விற்பனையில் இப்புத்தகம் கின்னஸ் சாதனை படைத்தது. சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் இயற்பியலையும், அண்டவியலையும் எளிமையாக விளக்கியதே இப்புத்தகத்தின் வெற்றி ரகசியம்.

‘தி யுனிவர்ஸ் இன் நட்ஷெல்’, ‘பிளாக் ஹோல்ஸ் அண்ட் பேபி யுனிவர்ஸ்’ என்பது உள்ளிட்ட பல்வேறு புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார். இயற்பியல் மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் அனைத்தும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றன.

## இந்தியர்களுக்கு புகழாரம்

கடந்த 2001—ஆம் ஆண்டு ஸ்டீஃபன் ஹாக்கிங் முதல்முறையாக இந்தியாவுக்கு வந்தார். அப்போது 16 நாள்கள் நமது நாட்டில் தங்கியிருந்த அவர், மும்பையில் நடைபெற்ற சர்வதேச இயற்பியல் கருத்தரங்கம் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளில்




பங்கேற்றுப் பேசினார். தில்லியில் அப்போதைய குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனைச் சந்தித்த ஹாக்கிங், 'இந்தியர்கள் கணிதத்திலும், இயற்பியலிலும் சிறந்தவர்கள்' என்று அவரிடம் தெரிவித்தார்.

கடந்த 2009—ஆம் ஆண்டு அமெரிக்காவின் மிக உயரிய 'பிரசிடென்ஷியல்' பதக்கத்தை ஹாக்கிங்குக்கு அணிவித்து கௌரவித்த அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா.

## விருதுகள், திரைப்படம்

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் விருது, அடிப்படை இயற்பியல் விருது, அமெரிக்காவின் மிக உயரிய பிரசிடென்ஷியல் பதக்கம் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள ஹாக்கிங், நோபல் பரிசை அடைவதற்கு முன்பு காலம் அவரை அழைத்துக் கொண்டது. ஐன்ஸ்டீனின் பிறந்த தினத்தில் ஹாக்கிங் மறைந்துள்ளார். கடந்த 2014—ஆம் ஆண்டு ஹாக்கிங் வாழ்க்கையை மையமாகக் கொண்டு 'தி தியரி ஆஃப் எவ்ரிதிங்' என்ற திரைப்படம் வெளியானது. இந்தத் திரைப்படத்தில் ஹாக்கிங்காக நடித்த எட்வர்ட் ரெட்மைனிக்கு ஆஸ்கர் விருது அளிக்கப்பட்டது.

'வேடிக்கையானவர்களாக இல்லாவிடில் வாழ்க்கை நரகமாகிவிடும்' என்று கூறும் ஸ்டீஃபன் ஹாக்கிங்கின் அறிவியலை கடந்த அவரது அரசியல் புரிதல் தெளிவானது. மாற்று திறனாளிகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார் அவர்.

ஸ்டீஃபன் ஹாக்கிங் 1966—ம் ஆண்டு செய்த பி.எச்டி. ஆய்வேடு, இணையத்தில் இலவசமாக வெளியிடப்பட்ட சில நாள்களில் சுமார் 20 லட்சம் முறை பார்க்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.




'விரிவடையும் பேரண்டத்தின் பண்புகள்' என்ற தலைப்பிலான இந்த ஆய்வு 133 பக்கம் கொண்டது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் டிரினிடி ஹால் கல்லூரியில் தமது 24—வது வயதில் இந்த ஆய்வினைச் செய்தார் ஹாக்கிங்.

இதுவரை கட்டணம் செலுத்தி மட்டுமே படிக்க முடியும் என்றிருந்த இந்த ஆய்வேட்டினை, கடந்த அக்டோபர் மாதம் முதல் இலவசமாகப் படிக்கும் வகையில் தங்கள் இணைய தளத்தில் வெளியிட்டது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்.

உடனே கேம்பிரிட்ஜ் தளத்தினை பெருமளவில் மொய்க்கத் தொடங்கினார்கள் இயற்பியல் ஆர்வலர்கள். அதிகம் பேர் இந்த ஆய்வேட்டினை ஒரே நேரத்தில் படிக்க வந்த காரணத்தால் கேம்பிரிட்ஜ் இணைய தளமே திணறி செயலிழக்கும் நிலைக்குப் போனது. இந்த ஆய்வு இலவசமாக வெளியான சில நாள்களில் உலகம் முழுவதிலும் இருந்து 8 லட்சம் பேர் மொத்தம் 20 லட்சம் முறை இந்த ஆய்வேட்டை இணையத்தில் புரட்டிப் பார்த்துள்ளனர். இது தவிர, 5 லட்சம் பேர் இதைத் தரவிறக்கம் செய்ய முயற்சித்துள்ளனர்.

"எங்கள் பல்கலைக்கழகத்தின் 'அப்பல்லோ தொகுப்பில்' உள்ள கட்டுரைகளிலேயே அதிகம்



படிக்கப்பட்டது இந்த ஆய்வேடுதான்," என்று கூறியுள்ளார் இப்பல்கலைக்கழகத்தின் அறிவுசார் தகவல் தொடர்புத் துறைக்கான துணைத் தலைவர் டாக்டர் ஸ்மித்.

ஹாக்கிங் சிறுவனாக இருந்தபோதே அவர் ஷூ லேஸைக் கட்டுவதற்கு மிகவும் கடினப்படுவதைப் பார்த்த அவர் தந்தை, மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். பல மருத்துவச் சிகிச்சைகளுக்குப் பிறகு, அவருக்கு நரம்பியல் இயக்க நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது, அவர் முழு உடல் இயக்கமுமே செயலற்றுப் போனது. அப்போது ஹாக்கிங் மருத்துவர்களிடம் கேட்கிறார், செயலற்றுப்போனது எனது உடல் இயக்கம் மட்டுந்தானா? மூளை இயக்கமுமா? மூளைக்கு ஒரு சிக்கலும் இல்லை என்கின்றனர் மருத்துவர்கள். இதைக் கேட்டதும் மகிழ்கிறார் ஹாக்கிங்! என் அறிவுத் தேடலுக்கு உடல் இயக்கம் வேண்டாமே, மூளை இயக்கம் போதுமே. அப்படியானால், நான் எவ்வளவு கொடுத்து வைத்த மனிதன் என மகிழ்கிறார். உடல் இயக்க ஊனத்திலும் அறிவைப் பற்றி யோசித்தாரே, அவர்தான் ஹாக்கிங்.





புதுப் புதுக் கதைகளை, கவிதைகளை, நகைச்சுவைத் துணுக்குகளை அவ்வப்போது சொல்லி அறிவியலை மர்மக் கதைபோல் கொண்டு சென்றதுதான் ஹாக்கிங்கின் வெற்றி.

## முதல் மைல்கல்

நவீன இயற்பியலின் திருப்புமுனை எங்கு நிகழ்ந்தது தெரியுமா? 1973 இறுதியில் ஹாக்கிங்கின் மூளையின் சுவர்களில் நிகழ்ந்தது! அணுவுலகின் உள்ளே ஆட்சிசெய்யும் குவாண்டம் கோட்பாட்டைக் கருந்துளை களுக்கு ஹாக்கிங் பொருத்திப் பார்க்க முயன்றபோது அந்தத் திருப்புமுனை நிகழ்ந்தது.

நீண்ட நெடிய நேரம் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டு கணக்குகள் போட்டுப்பார்த்த பிறகு, ஹாக்கிங் கண்டுபிடித்த ஒரு விஷயம் அவரையே குழப்பத்தில் ஆழ்த்தியது. கருந்துளைகள் உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை என்று அவர் கண்டறிந்தார். அவற்றிலிருந்தும் ஒருகட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசிய ஆரம்பித்து இறுதியில், வெகு நீண்ட யுகங்களுக்குப் பிறகு, கருந்துளை வெடித்து மறைந்துவிடும் என்று ஹாக்கிங் கண்டறிந்தார்.

ஒளி உட்பட எதுவுமே தப்பிக்க முடியாது என்று கருதப்பட்ட கருந்துளைக் குள்ளிருந்து அணுத்துகள்கள் தப்பிக்கின்றன என்பதை ஹாக்கிங் உட்பட யாருமே முதலில் நம்பவில்லை. "உண்மையில், நான் இந்த விஷயத்தைத் தேடிக்கொண்டிருக்கவில்லை. தற்செயலாகத்தான்




இதை நான் கண்டறிந்தேன்” என்று ஒரு நேர்காணலில் ஹாக்கிங் கூறினார்.

தனது கணிப்பை ‘நேச்சர்’ இதழில் ‘கருந்துளை வெடிப்புகள்?’ என்ற தலைப்பில் 1974—ல் கட்டுரையாக எழுதினார் ஹாக்கிங். இயற்கையைப் பற்றிய ஒருங்கிணைந்த ஒற்றைக் கோட்பாட்டை நோக்கிய, அதாவது ஒன்றுக்கொன்று முரண்படும் சார்பியல் கோட்பாட்டையும் குவாண்டம் கோட்பாட்டையும் இணைக்கும் முயற்சியை நோக்கிய பயணத்தில் முதல் மைல்கல் என்று அறிவிய லாளர்களால் இந்தக் கட்டுரை புகழப்படுகிறது.

‘ஹாக்கிங் கதிர்வீச்சு’ என்று பெயரிடப்பட்ட இந்தக் கண்டுபிடிப்பு, கருந்துளைகளைப் பற்றிய கருத்தாக்கங்களைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டது. ‘அழிவுசக்திகள்’ என்ற அடையாளத்தைக் கொண்டிருந்த கருந்துளை களுக்கு ‘படைப்புசக்திகள்’ என்ற அடையாளத்தை, அல்லது ‘மறுசுழற்சியாளர்கள்’ என்ற அடையாளத்தை ஹாக்கிங்கின் கண்டுபிடிப்பு வழங்கியது.

“கருந்துளைக்குள் யாராவது குதித்தால் என்ன ஆகும் என்று நீங்கள் கேட்கலாம். குதித்தவர் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்றே கருதுகிறேன். கருந்துளைக்குள் குதித்தவரின் உடலைக் கட்டமைத்திருந்த அணுக்களும் திரும்பி வராது. ஆனால், அவருடைய நிறையின் ஆற்றல் திரும்பக் கிடைக்கும். இது ஒட்டுமொத்த பிரபஞ்சத்துக்கும் பொருந்தும்” என்று 1978—ல் ஒரு நேர்காணலில் ஹாக்கிங் கூறினார்.

‘ஹாக்கிங் கதிர்வீச்சு’ குறித்த சூத்திரத்தைத் தனது கல்லறையில் பொறித்துவைக்க வேண்டும் என்று 2002—ல் ஹாக்கிங் கூறினார்.




வியக்கவைத்த உத்வேகம்

தனது அறிவு வாழ்க்கையில் மட்டுமல்ல, தனது பணி வாழ்க்கையிலும் சொந்த வாழ்க்கையிலும் தனது எல்லைகளை விரிவாக்கிக்கொண்டவர் ஹாக்கிங். அறிவியல் மாநாடுகளுக்காக இந்தப் பூமியைச் சுற்றிவந்தவர் அவர். அண்டார்க்டிகா உள்ளிட்ட அனைத்துக் கண்டங்களுக்கும் சென்றிருக்கிறார்; இரண்டு முறை திருமணம் செய்துகொண்டார்; மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன் ஆனார்; ‘த சிம்ப்ஸன்ஸ்’, ‘ஸ்டார் டிரெக்: த நெக்ஸ்ட் ஜெனரேஷன்’, ‘த பிக் பேங் தியரி’ உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களில் தோன்றியிருக்கிறார்.

சூடான காற்று நிரம்பிய பலூனில் பறந்து தனது 60—வது பிறந்தநாளைக் கொண்டாடினார். 2007—ல் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ‘போயிங் 727’ விமானத்தில் ‘பூஜ்ஜிய ஈர்ப்புவிசை’ பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை அனுபவித்தார். விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் கனவுடனும் இருந்தார். ஏன் இதுபோன்ற ஆபத்தான செயல்களில்



ஈடுபடுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஹாக்கிங் இப்படிப் பதிலளித்தார்: "உத்வேகத்தில் எந்த ஊனமும் இல்லாதபட்சத்தில் உடல் ஊனங்களால் முடங்கிப்போய்விடக் கூடாது என்று எல்லோருக்கும் காட்டுவதற்கு விரும்பினேன்."

அவரது ஆத்ம உத்வேகம் பலரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறது.

## பிரபஞ்ச முட்டுச்சந்து

ஈர்ப்புவிசை குறித்த ஐன்ஸ்டைனின் 'பொதுச்சார்பியல் கோட்பா'ட்டின் விளைவான கணிப்புதான் கருந்துளைகள். படுத்திருக்கும் நபரால் மெத்தையில் குழிவு ஏற்படுவதுபோல், நிறையும் ஆற்றலும் அண்டவெளியை (ஸ்பேஸ்) எப்படி 'வளை'க்கின்றன என்பதைப் பற்றி பொதுச்சார்பியல் கோட்பாடு விவரிக்கிறது. ஈர்ப்புப்புலம் (கிராவிட்டேஷனல் ஃபீல்டு) ஒன்றை ஒளிக்கதிர்கள் கடக்கும்போது வளையும், நடுவில் பள்ளமாக இருக்கும் மெத்தையின் மேல் கோலிக் குண்டுகளை உருட்டினால் படுத்திருக்கும் நபரைச் சுற்றி வளைவாக அந்த கோலிக்குண்டுகள் உருளும் அல்லவா, அதுபோல! ஒரு இடத்தில் மிக மிக அதிக அளவிலான நிறையோ ஆற்றலோ இருந்தால் சுற்றியுள்ள இடம் (அதாவது அண்டவெளி) முடிவே இல்லாமல் வளையும்; மாயாஜாலக்காரர் தன் மேல் ஒரு போர்வையைப் போர்த்திக்கொண்டு மாயமாக மறைவதைப் போல, குலைந்துகொண்டிருக்கும் மிகப் பெரிய விண்மீன் போன்ற, மிகமிக அடர்த்தியான பொருளானது தன்னைச் சுற்றியுள்ள இடத்தை வளைத்துக்கொண்டு காணாமல் போகும்.




அதாவது, முடிவற்ற அடர்த்தியைக் கொண்டு மிக நுண்ணியதாகத் தனக்குள்ளே குறுகி, 'ஒருமை' (சிங்குலாரிட்டி) என்ற நிலையை அடையும். ஒருவகையில் பிரபஞ்ச முட்டுச்சந்து, இயற்பியல் விதிகளெல்லாம் அங்கே அர்த்தமிழந்துபோகும். இதுதான் கருந்துளை. இந்தப் பிரபஞ்சத்தில் கோடிக்கணக்கான கருந்துளைகள் இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

விரிவடைந்துகொண்டிருக்கும் பிரபஞ்சத்தைப் படச் சுருள்போலப் பின்னோக்கி ஓட்டினால் மேற்கண்டதுபோல் ஒரு 'ஒருமைநிலை'யை நான் காணலாம் என்று 1966—ல் தனது முனைவர் பட்ட ஆய்வில் ஹாக்கிங் கூறினார். இடமும் காலமும் ஒரு தொடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இதன் முடிபு.

## சர்ச்சையில் விளைந்த திருப்புமுனை

ஹாக்கிங் ஏற்படுத்திய பிரத்யேகத் திருப்புமுனையானது இஸ்ரேலிய கோட்பாட்டு



இயற்பியலாளர் ஜேக்கப் பெக்கன்ஸ்டைனுடன் ஹாக்கிங் போட்ட சண்டையின் விளைவுதான்! கருந்துளைகளின் வெப்பத்தைப் பற்றிய விவாதம்தான் அது. கருந்துளைகள் 'வெப்ப ஆற்றல் சிதறல்' (என்ட்ரோப்பி) என்ற பண்பைக் கொண்டிருப்பதாக பெக்கன்ஸ்டைன் கூறியதை மறுத்த ஹாக்கிங் 'கருந்துளையிலிருந்து எதுவும் தப்ப முடியாது. ஆகவே, அதன் வெப்பநிலை பூஜ்ஜியமாகத்தான் இருக்க வேண்டும்' என்றார்.

இந்த விவாதத்துக்கு விடை காண்பதற்காக 'அணுவளவு கருந்துளை'களின் இயல்புகளை ஆராய்வதென ஹாக்கிங் முடிவுசெய்தார். இதற்காக, அணுவுலகின் புதிரான விதிகளின் தொகுப்பான குவாண்டம் கோட்பாட்டுடன் ஈர்ப்புவிசையை முடிச்சுப்போட வேண்டியிருந்தது. அதுவரை யாருமே வெற்றிகரமாக இந்த முடிச்சைப் போட்டிருக்கவில்லை. அவரது கணக்கீடுகள் ஒரு திசையைச் சுட்டிக்காட்டின. கருந்துளைகளிலிருந்து அணுத்துகள்களும் கதிர்வீச்சும் உமிழப்படுகின்றன என்பதுதான் அது. ஆக, பெக்கன்ஸ்டைன் சரி என்பதை ஹாக்கிங்கின் கண்டு பிடிப்பு உறுதிசெய்தது.

குவாண்டம் கோட்பாட்டின் இயல்பான அம்சமாக இருக்கும் 'ஒழுங்கின்மை' (ரேண்டம்னஸ்) குறித்து ஐன்ஸ்டைன் கூறியதை ஹாக்கிங் சற்று விரிவாக்கி இப்படிச் சொன்னார், "கடவுள் இந்தப் பிரபஞ்சத்துடன் பகடை உருட்டி மட்டும் விளையாடவில்லை, யாராலும் பகடைகளைப் பார்க்க முடியாத இடத்தில் சில சமயம் அவற்றை எறிகிறார்."

ஹாக்கிங்கின் கருத்து குவாண்டம் இயற்பியலின் அஸ்திவாரத்தையே அசைப்பதாக இருக்கிறது என்று இயற்பியலாளர்கள் கருதினார்கள். குவாண்டம் கோட்பாட்டைப் பொறுத்தவரை, 'தகவல்' என்பது எப்போதும் காப்பாற்றப்படக்கூடியது, மீட்டெடுக்கப்படக்கூடியது; எந்தத் தகவலும் தொலைந்துபோவதே இல்லை.




2004—ல் தனது தோல்வியை ஒப்புக்கொண்டார் ஹாக்கிங்! கருந்துளைக்குள் சென்ற தகவல்களெல்லாம் கருந்துளை வெடிக்கும்போது மீண்டும் வெளிவந்துவிடும். அவர் இப்படி ஒப்புக்கொண்டாலும் இந்தத் 'தகவல் முரண்' பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. கருந்துளைக்குள் தகவல்கள் எப்படிப் போகின்றன, எப்படி வெளிவருகின்றன என்பதை இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லை என்கிறார்கள் இயற்பியலாளர்கள்.

1974—ல் 'ஃபெல்லோ ஆஃப் ராயல் சொஸைட்டி'யாக ஹாக்கிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகின் மிகப் பழமையான அறிவியல் அமைப்பு 'ராயல் சொஸைட்டி'. 1982—ல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கணிதத்துக்கான 'லூக்காஸியன் இருக்கை'க்காக

ஹாக்கிங் நியமிக்கப்பட்டார். நியூட்டன் இருந்த பதவி அது. "இது நியூட்டனின் இருக்கை என்று சொல்வார்கள், ஆனால் நிலைமை நிச்சயம் இப்போது மாறிவிட்டது" என்று அடிக்கடி பொடிபோட்டுப் பேசுவதுண்டு ஹாக்கிங்.

## அவரது புத்தகத்தின் முதல் அதிகாரத்தின் முதல் பத்தி இது:

பெட்ரன்ட் ரசல் ஒரு கூட்டத்தில் விண்ணி யல் விதிகள் பற்றி விரிவாகப் பேசி முடிக்கிறார். அப்போது ஒரு மூதாட்டி ஐயா, நீங்கள் சொன்னதெல்லாம் வெறும் குப்பை. உண்மையில் உலகம் ஓர் ராட்சச ஆமையின் மேல் அமர்ந்திருக்கும் ஒரு தட்டை யான தட்டே என்கிறார். அப்படியானால், அந்த ஆமை எதன் மீதம்மா நிற்கிறது என்கிறார் ரசல். அதற்கு உடனே மூதாட்டி, ஆமையின் கீழ் ஆமை எனக் கடைசி வரை ஆமைகள்தான் என்கிறார். இதைப் படிக்கும் வாசகர் எவரும் மூதாட்டியின் வாதத்தை மனத்தில் கிண்டலடித்துச் சிரித்துக்கொண்டே நகர்வார், இல்லையா? ஹாக்கிங் சொல்கிறார், இதைப் படிக்கும் உங்களில் பலரும் மூதாட்டி சொன்னதைக் கேலிக்குரியதாகவே கருதுவீர்கள். சரி, உங்களுக்கு அறிவியலைப் பற்றி இதைவிடப் பெரிதாக என்ன தெரியும் எனக் கேட்டு, நம்மைத் திகைக்க வைக்கிறார்.

அப்படியே அறிவியல் என்னும் அதிசயத்தை அழகாக விவரிக்கத் தொடங்குகிறார். கருந்துளைகள் குறித்த கோட்பாடுகளுக்கு முக்கியப் பங்களிப்பு செய்த, தமிழராகிய சந்திரசேகருக்கு இந்தப் புத்தகத் தில் பெரிய இடம்கொடுத்துள்ளார் ஸ்டீவன் ஹாக்கிங். கருந்துளை எப்படிப்பட்டது எனச் சொல்லும்போது, அதற்குள் விழுந்தால் எவரும் தப்ப முடியாது. ஏன் ஒளிகூடத் தப்ப முடியாது என்கிறார்.

இந்தக் கருந் துளை யின் அதிபயங்கரத்தை விளக்குவதற்கு, நரக நுழைவாயில் குறித்து கவிஞர் தாந்தே வரிகளை எடுத்துக்காட்டுகிறார், 'நுழைகின்றீர் ஈண்டு நீவிர், நம்பிக்கை யாவும் துறந்து வாரீர்.' உங்களுக்கு விரைவில் இறப்பு உறுதி என மருத்துவர் தெரிவித்த பின்பும் அதிசயமாக உயிர்பிழைத்து வாழும் எவருக்கும் கடவுள் ஈடுபாடு வராமல் போகாது. அதிலும் ஹாக்கிங் வித்தியாச மானவர். தீவிர நாத்திகர். அவர் புத்தகம் முழுதுமே கடவுளைக் கிண்டலடித்துக் கொண்டே இருப்பார். ஒரிடத்தில் சொல்வார், கடவுள் என்று ஒருவர் இருந்தால் கூட, அவர் இயற்பியல் விதிகளுக்குக் கீழ்ப்படியும் கடவுளாகத் தான் இருக்க முடியும். யோசுவாக்காக சூரியன் நின்றது போன்ற கதைகளைப் புறந்தள் ளிவிட்டால், கடவுளுக்கு வேறு தலையெழுத்து இல்லை என கிறித்துவ இதிகாசக் கதையைக் கிண்டலடிக்கிறார்.




## கலீலியோ விலிருந்து ஐன்ஸ்டைனுக்கு...

'பிக் பாங்க்' எனப்படும் பெருவெடிப்பு பற்றி ஹாக்கிங் நிறைய எழுத ஆரம்பித்தார். ஒரு முறை வாடிகனில் சேசு சபையார் ஒழுங்கு செய்த அண்டவியல் மாநாட்டில் கலந்துகொண்டார். அண்டவியல் குறித்துப் போப்பாண்டவரிடம் பல அறிவியலர்களும் பேசுகின்றனர். இங்கு பெரு வெடிப்புக்குப் பிறகு, ஏற்பட்ட வளர்ச்சி பற்றி எல்லாம் பேசுவது சரிதான், ஆனால் பெருவெடிப்பு பற்றியே ஆய்வுசெய்யக் கூடாது, ஏனென்றால், அது கடவுள் செயல் என்றாராம் போப்பாண்டவர். ஹாக்கிங் பெரு வெடிப்பு நிலவரம் பற்றித் துணிச்சலுடன் விளக்குகிறார்.


பெரு வெடிப்பு பற்றி ஹாக்கிங் முன்வைத்த கருதுகோளில் ஆதிப் படைப்புக் கோட்பாட்டுக்கு எதிரான கருத்து மறைந்து கிடந்தது. "நல்வாய்ப்பாக, நான் நிகழ்த்திய உரையின் பொருள் பற்றி போப்பாண்டவருக்குப் புரியவில்லை. இல்லை என்றால், கலீலியோவுக்கு நேர்ந்த கதி எனக்கும் ஏற்பட்டிருக்குமோ" என நகைச்சுவையுடன் குறிப்பிடுகிறார் ஹாக்கிங். கலீலியோ இறந்து சரியாக 300 ஆண்டுகள் கழித்து நான் பிறந்தேன் என்பதும் அச்சத்துக்குக் காரணம் என நகைச்சுவை ததும்பக் கூறி, அவருக்கும் கலீலியோவுக்கும் உள்ள பொருத்தப்பாட்டைச் சொல்லிப் பெருமைப்படுகிறார் ஹாக்கிங்.

எனக்கு மரணம் குறித்த அச்சம் இல்லை. அதற்காக விரைவாக இறந்து போக வேண்டும் என்றில்லை. நான் முடிக்க வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன என்று ஒரு முறை கூறினார் ஸ்டீஃபன் ஹாக்கிங். அந்த அனைத்து பணிகளையும் முடித்துவிட்டாரா என்று தெரியவில்லை. 76 வயதில் இந்த பூவுலகை விட்டு சென்றிருக்கிறார் ஹாக்கிங்.

ஹாக்கிங், கலிலீயோ இறந்த நாளில் பிறந்து, ஐன்ஸ்டீன் பிறந்த நாளில் இறந்திருக்கிறார். வாழ்வு மட்டும் அல்ல ஹாக்கிங் இறப்பும் அறிவியல் சுற்றியே இருந்திருக்கிறது.


ஹாக்கிங் விரும்பும் பொருத்தப்பாடு அவருக்கு இறப்பிலும் அமையும் பேறு கிடைத்துவிட்டது. அறிவி யல் மாமேதை ஐன்ஸ்டைன் பிறந்த அதே நாளில் இந்த 'நம் காலத்தின் ஐன்ஸ்டைன்' மறைந்துவிட்டார்.

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



காவிரி மேலாண்மை வாரியம் அமைய வேண்டும் என்பதில் முதல்வர் பழனிச்சாமிக்கு உறுதி இருந்தால், பாஜக அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை அதிமுக ஆதரிக்க வேண்டும்‘

**மு.க.ஸ்டாலின்**



எப்படியெல்லாம் கோர்த்து விடறீங்க செயலு? அப்படியே உங்க அப்பாவை நினைவுப்படுத்துறீங்க)

பாஜகவிடம் இருந்து நாட்டை மீட்போம்:

**சோனியா காந்தி**

(என்ன பண்றது? உங்ககிட்டே இருந்து காப்பாத்தறதா நினைச்சது... சிங்கத்துக்கு பயந்து முதலை வாய்க்கு சிக்கிய கதையா போச்சு இந்திய மக்களோட நிலைமை!)



“அரசியலில் ரஜினி, கமல் இருவருக்கும் என் ஆதரவு!”

**நடிகர் பிரபு**(

(உங்களுக்கு இருக்கிற ஒரு ஓட்டையும் செல்லா ஓட்டா ஆக்கிடுவீங்க போலிருக்கே சின்னத்தம்பி?)



“தமிழ்நாட்டில் விவசாயமும் சினிமாவும் இறந்து கொண்டிருக்கின்றன”

**விவேக்**

(உழைப்பாளியும் ரசிகனும் கூட இங்கே இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சேர்த்து சொல்லுங்க!)



# மலிந்த

### சீனாவை அடக்கும் வாய்ப்பைத் தவறவிட்ட டிரம்ப்!

இந்த ஒரு வாய்ப்போடு டொனால்டு டிரம்பின் அதிபர் பதவிக் காலம் முடிந்துவிட வேண்டும் என்று கருதும் நம் போன்றவர்கள்கூட ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும், 'உண்மைகள்' என்று சிலவற்றை டிரம்ப் நினைப்பதும் — சில வேளைகளில் — உண்மைகளாகவே இருந்துவிடுகின்றன! அதில் ஒன்றுதான் சீனத்துடன்




அமெரிக்காவுக்கு வர்த்தக உறவில் பிரச்சினைகள் உள்ளன என்பது. அமெரிக்காவுக்கு உள்ள உலக வர்த்தகப் பற்றாக்குறையில் மூன்றில் இரண்டு மடங்கு சீனாவுடனானது தான்!




டிரம்பின் உள்ளுணர்வு சரியாக இருந்தாலும் தொழில் — வர்த்தகம் தொடர்பான தரவுகளில் பலவீனமாக இருக் கிறார். எந்த ஒரு பிரச்சினை குறித்தும் அவரிடம் கடைசியாகப் பேசுகிறவர் என்ன சொல்கிறாரோ அதுதான் சரி என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார். நிலக்கரி, உருக்கு, அலுமினியம் தொழில்களில் தோள்வலி மிக்க தொழிலாளர்கள்தான் அதிகம் ஈடுபடுகின்றனர் என்பதால், இத் தொழில்களைப் பாதுகாக்க நினைக்கிறார். கொள்கை வகுப்பில் குழப்பங்களை ஏற்படுத்தி, எல்லாவற்றையும் உலக அரங்கில் தீர்மானிக்கும் பொறுப்பை சீனாவிடம் ஒப்படைத்துவிட்டார். அந்நாட்டுடனான வர்த்தகப் பேச்சில் கூட அமெரிக்காவுக்கு நன்மை ஏற்படும் வகையில் பேசுவார் என்ற நம்பிக்கை ஏற்பட மறுக்கிறது.

சீனாவும் அமெரிக்காவும் கொழிக்கும் வகையிலேயே தடையற்ற வர்த்தகங்களை இரு நாடுகளும் தொடர முடியும் என்றாலும், சீனா நியாயமாக நடந்துகொள்ள மறுக்கிறது. இதை டிரம்பால் சரிசெய்துவிட முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்க மக்களுக்கு இல்லை. இதுதான் இப்போதைய சிக்கல்!




# வல்லரசு


## அமெரிக்காவின் இழப்புகள்

தாமஸ்.எல்.ஃப்ரீட்மேன்

எம்.ஐ.டி. பொருளாதார நிபுணரான டேவிட் ஆட்டர், சீன வர்த்தகத்தால் ஏற்பட்டுள்ள விளைவுகளை ஆராய்ந்திருக்கிறார். உலக வர்த்தக அமைப்பில் 2001—ல் சேர்ந்த சீனா, அமெரிக்காவின் தொழில்துறை உற்பத்தியாளர்களுக்கு அளித்த அதிர்ச்சிதான் முதல் பிரச்சினை என்கிறார் ஆட்டர். அமெரிக்கா உள்ளிட்ட உலக சந்தை சீனாவுக்குத் திறந்துவிடப்பட்டது. 2000 முதல் 2007 வரையிலான

அடுத்ததாக, அமெரிக்கப் பொருட்களை சீனச் சந்தை யில் விற்க முடியவில்லை. உலக சந்தையில் சேர்ந்ததால் சீனாவும் சீர்திருத்தம் அடைந்து, சந்தைகளைத் திறந்துவிடும் என்று பிற நாடுகள் எதிர்பார்த்தன. சீனா சீர்திருத் தம் அடைந்தது உண்மைதான். ஆனால், சந்தையின் கதவுகளைப்




காலத்தில் அந்நாட்டிலிருந்து மலிவான விலையில் பொருட்கள் கொண்டுவரப்பட்டு அமெரிக்காவில் குவிக்கப்பட்டன. அமெரிக்க உற்பத்தி நிறுவனங்கள் அப்போதே 40% அளவுக்கு வீழ்ச்சியடைந்தன. அது மட்டுமின்றி ஓஹையோ, மிச்சிகன், விஸ்கான்சின், பென்சில்வேனியா வில் சுமார் 10 லட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். வேலையிழப்பு மட்டுமின்றி, சமூகச் சிதைவு, திருமணங் கள் குறைவது, போதைப்பொருள் பயன்படுத்தல் அதிகரிப்பு ஆகியவையும் நிகழ்ந்தன. வேலை இழந்தவர்கள் அரசின் உதவித்தொகைக்குக் காத்திருக்கத் தொடங்கினர்.

பிற நாடுகளுக்கு இழுத்து மூடிவிட்டது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் கார்களின் மீது 25% இறக்குமதி வரி விதித்தது. சீன கார்களுக்கு அமெரிக்கா விதித்த வரியோ 2.5%. கார்களுக்கு மட்டுமல்ல, கார்களின் பாகங்களுக்கும் இப்படிக் கறாராக வரிகளை உயர்த்தியது சீனா. தன்னுடைய நிறுவனங்களுக்கு ஆபத்து வராமல், தடுப்புச் சுவரைப் போல பலவிதக் கட்டுப்பாடுகளை விதித்தது. அரசின் நிதியை வழங்கி அவற்றை வளர்த்தது, அவை போட்டிக்குத் தயாரானதும் சர்வதேசச் சந்தையில் விற்க அனுமதித்தது.

அதற்குப் பிறகே அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகளின் நிறுவனங்களுக்கு அனுமதி தரப்பட்டது.



டெட்ராய்ட் கார் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களுடைய கார்களை சீன மண்ணில் உருவாக்கி, பிறகுதான் அமெரிக்காவுக்கும் விற்கின்றன. இதன் மூலமும் வர்த்தகப் பற்று வரவில் அமெரிக்காவுக் குப் பெரிய இழப்பே.

## சீனாவின் கெடுபிடி

சீனாவில் தயாரிப்பில் ஈடுபடுவோருக்கு உதவ ஆப்பிள் போன்ற அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்றன. தரவுகளை எல்லாம் சீன 'சர்வர்'களில்தான் சேகரிக்க வேண்டும், சீன நிறுவனங்களைச் சேர்த்துக்கொண்டு செயல்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்ததுடன், அதை ஏற்கவும் வைத்திருக்கிறது சீனா. அமெரிக்காவிலோ அப்படி எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. சீனாவில் நிறுவனத்தைத் தொடங்கினாலும் அமெரிக்க நிறுவனங் கள் அதில் 50%—க்கும் மேல் பங்குதாரராக இருக்க முடியாது. ஆனால், அமெரிக்காவில் சீனாவின் ஐந்து பெரிய நிறுவனங்கள் 100% பங்குகளைத் தங்கள் வசமே வைத்துக் கொண்டுள்ளன.

சீனாவில், அமெரிக்க மின்சார பேட்டரி வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் சீன நிறுவனங்களைக் கூட்டாளியாக வைத்துக் கொள்வதுடன் தொழில் நுட்பத்தையும் கட்டாயம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்




படுகின்றன. இதை 'டெஸ்லா' நிறுவனத் தலைவர் ஏலான் மஸ்க் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மின்சார வாகனங்கள் தயாரிப்புதான் அடுத்த தலைமுறைக்கான வளரும் தொழில் துறை. அதையும், பிற நாடுகள் ஆதிக்கம் செலுத்தாமல் சீனா கட்டுப்படுத்திவிடும். அதி நவீன துறை களிலும் சீனா முதலீடுகளை அதிகப்படுத்திவருகிறது. அடித்தளக் கட்டமைப்புத் துறைகளிலும் மனிதவள ஆற்றலிலும்கூட பாராட்டத்தக்க வகையில் முதலீடு செய்துவருகிறது. சீனா கடைப்பிடிக்கும் விதிமுறைகளை மற்றவர்களால் புறக்கணிக்க முடியாது.

அமெரிக்கா நெருக்குகிறது என்பதால், அதனிடம் நிறைய வாங்க சீனா தயாராக இருக்கிறது. ஆனால், சீனாவுக்கு விற்கும் நிலையில் அமெரிக்கா இப்போது இல்லை. எண்ணெய், உணவு தானியங்கள், விமானங்கள் ஆகியவற்றை மட்டுமே அதிகம் விற்கும் நிலையில் அமெரிக்கா இருக்கிறது. இதற்கிடையே, ஜெட் விமானங்களைச் சோதனை முறையில் தயாரித்து வெள்ளோட்டம் விடும் நிலைக்கு சீனா வந்துவிட்டது.


## கோட்டைவிட்ட டிரம்ப்

புத்திசாலியான அமெரிக்க அதிபராக இருந்தால் என்ன செய்ய வேண்டும்? டிபிபி (டிரான்ஸ்—பசிபிக் பார்ட்னர்ஷிப் டிரேட் அக்கார்ட்) வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். அமெரிக்கா ஏற்றுமதிசெய்யும் பல்வேறு பொருட்கள் தொடர்பான 18,000 காப்பு வரிகளை நீக்குகிறது இந்த ஒப்பந்தம்.

இந்த அமைப்பில் நன்றாக இயங்கும் பொருளாதாரத்தைக் கொண்ட 12 பசிபிக் கடலோர நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. டிரம்ப்

இதில் கையெழுத்திடுவதற்குப் பதிலாக, ஒப்பந்தத்தில் சேர மறுத்து கிழித்துப்போட்டுவிட்டார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக பிரிட்டன் முடிவெடுத்ததைப் போல, ஆசியாவிலிருந்து அமெரிக்கா விலக நேர்ந்திருக்கிறது. அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையிலேயே மிகவும் முட்டாள் தனமான செயல் இது. டிபிபியில் சீனா இல்லை. சீனாவை நெருக்கி வழிக்குக் கொண்டுவருவதற்கான அமைப்பு இது. இதை அவ்வளவு அலட்சியமாகத் தூக்கி வீசிவிட்டார் டிரம்ப்.

புத்திசாலியான அதிபராக இருந்தால் டிபிபியில் சேர்வது மட்டுமின்றி, சீனத்துடன் ரகசிய வர்த்தக உடன்பாட்டுக்குப் பேசியிருப்பார். 'உங்களுடைய வர்த்தக விதிகள் ஆதிக்கம் செலுத்துவதால், அதையே நாங்களும் பின்பற்ற முடிவுசெய்துவிட்டோம். சீனாவில் உள்ள உங்கள் நிறுவனங்களுக்கு இவை முதலில் அமலுக்கு வரும். உங்களுடைய கார்களுக்கு 25% இறக்குமதி வரி விதிப்போம். உங்களுடைய தொழில்நுட்ப நிறுவனங்கள் அமெரிக்க நிறுவனத்தைக் கூட்டாளியாக வைத்துக்கொள்ள வேண்டும், அறிவுசார் சொத்துரிமைப்படி தொழில்நுட்பத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும், நிறுவனத் தரவுகளை அமெரிக்க 'சர்வர்'களில்தான் சேகரிக்க வேண்டும்' என்று வலியுறுத்தியிருப்பார்.




அமெரிக்கா தனது தோழமை நாடுகளுடனே வெளிப் படையாக 'வர்த்தகப் போரை' நடத்துவதால், அதன் உற்பத்தியாளர்களுக்கே உற்பத்திச் செலவு அதிகமாகிறது. அத்துடன் அமெரிக்காவின் வளரும் தொழில்களுக்கும் அது நல்லதல்ல. நாட்டின் நலனுக்கு இதுவெல்லாம் அவசியம் என்பதுடன் தடையற்ற வர்த்தகத்துக்கு மக்களின் ஆதரவும் அவசியம்; திடீர் வர்த்தக அதிர்ச்சியால் அமெரிக்கத் தொழிலாளர்கள் வேலையிழக்காமல் இருக்க, ஊதிய காப்புறுதியும் சமூக மறுமுதலீட்டுக் கொள்கைகளும் அவசியம். அதே சமயம் அமெரிக்கர்கள் தொடர்ந்து தங்களுடைய தொழில்நுட்பத் திறனை வளர்த்துக்கொள்வதற்கான சூழ்நிலைகளையும் பராமரிக்க வேண்டும். போட்டி சீனாவிடமிருந்தோ, இயந்திர மனிதரிடமிருந்தோ வந்தாலும் சமாளிக்க இது உதவும்.

1% பணக்காரர்களிடம் 99% செல்வம் குவிகிறது என்பதிலேயே அமெரிக்கர்கள் அதிகக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்கிறார் ஆட்டர். திறனை வளர்த்துக் கொண்டால் நிறைய ஈட்டலாம் என்பதிலேயே சிந்தனை போவதில்லை என்கிறார். தகுதிக்கேற்ற வருமானம் கிடைக்கவில்லை என்பதல்ல இப்போதைய பிரச்சினை. திறமையை வளர்த்துக்கொள்ள முடியாமல் மக்களிடையே ஏற்றத்தாழ்வு இருப்பதுதான் பிரச்சினை. நல்ல கல்வியும் பணித்திறனும் சேர்ந்தால் பலன் நிச்சயம். கல்வி எதைத் தருகிறது? சில திறமைகளை வளர்த்துக்கொள்வதுடன் சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொள்ளும் தன்மையையும் ஏற்படுத்துகிறது. பல்கலைக்கழகங்களைக் கொண்ட பெரிய நகரங்களும், சிறு நகரங்களும் தங்களை மீண்டும் புதுப்பித்துக்கொண்டு வலுப்படுத்த உதவுகின்றன. உயர் கல்வி என்பது கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமல்ல, கல்லூரி இருக்கும் ஊர்களுக்கும் பயன்தருவது.


'சுவர்களும் உத்தரமும் வேண்டாம் என்றால், முதலில் தரையை வலுப்படுத்துங்கள்!' — அமெரிக்காவுக்கு நான் சொல்ல விரும்புவது இதைத்தான்!

தமிழில்: சாரி, © 'தி நியூயார்க் டைம்ஸ்'



# அழிவில்லா

ஒரு மொழியின் மரணம் என்பது மிகவும் சோகமான நிகழ்வு. ஒரு மொழி இறக்கும்போது, ஒரு வாழ்க்கைமுறையே மரணிக்கிறது, ஒருவகை சிந்தனையே மறைகிறது, வார்த்தைக்கும் உலகுக்குமான தொடர்பு அறுந்துபோகிறது. இன்று நாம் ஒரு மொழியைப் பேசிய கடைசிப் பேச்சாளனின் இறப்புக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். அழிந்துகொண்டிருக்கும் மொழியைப் பேசும் மிகச் சிலரில் ஒருவர் என்று ஒருவரைப் பற்றி பத்திரிகைகளில் செய்தி படிக்கிறோம், அதற்கு முன்னால் அந்த மொழிக்காரர் களின் கலாச்சாரம் இறந்துவிட்டதைக் குறிப்பிட மறந்துவிடு கிறோம்.







அழிந்துவிட்ட அல்லது அழியும் நிலையில் உள்ள மொழி தொடர்பாக முரண்பட்ட உணர்ச்சிகளும், மிகையான உணர்ச்சி வெளிப்படுத்தல்களும்தான் நவீனத் துவத்தில் நிலவுகின்றன. ஒரு மொழியின் இறப்பு என்பது எண்ணிக்கையில் ஒன்றாகத்தான் கருதப்படுகிறதே தவிர, அதன் பின்னாலுள்ள கதைகள் உணரப் படுவதில்லை. அடுத்த பத்தாண்டுகளில் 3,000 மொழி கள் அழிந்துவிடும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். சிறுபான்மைச் சமூக மக்களின் மொழிகளும், வாய்மொழியாகப் பேசப்படும் மொழிகளும் அழியும் வரிசை யில் முதலில் நிற்கின்றன. மொழிகளைப் பற்றிய கணக்கெடுப்பு என்பதே மொழிகளுக்கு இரங்கல் தெரிவிக் கும் நடவடிக்கையாகத்தான் இருக்கிறது.

## மொழிகளை அழிக்கும் வளர்ச்சி

வளர்ச்சியும் வளர்ச்சிக்கான நிறுவனங்களும் சிறுபான்மைச் சமூகங்களின் மொழியும் எழுத்துவடிவங்களும் அழிவதற்கே காரணங்களாகிவிடுகின்றன. பள்ளிக்கூடங்களில் பெரும்பான்மையினத்தவர் மொழியில் மட்டுமே பாடங்களை நடத்துகின்றனர். ‘எழுதப் படிக்கத் தெரியாத தொழிலாளி ஐந்து அல்லது ஆறு மொழிகளில் பேசுகிறார். கான்வெண்ட்டில்



# மொழி

ஷிவ் விஸ்வநாதன்

படிக்கும் குழந்தைக்கு ஒரு மொழியில்தான் பேச முடிகிறது' என்று கன்னட எழுத்தாளர் யு.ஆர். அனந்தமூர்த்தி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்திய மக்களின் மொழிகளைக் கணக்கெடுக்கும் அமைப்பு (பிஎஸ்எல்ஐ) மட்டுமே, எல்லா மொழிகளையும் தொடர்ந்து வாழவைக்கப் போராடிக்கொண்டிருக் கிறது. இதன் தலைவரும் இலக்கிய விமர்சகருமான கணேஷ் என்.தேவி, அரசின் குமாஸ்தா பார்வையிலான விளக்கங்கள் ஏராளமான மொழிகளைச் சாகடித்துவிடும் என்று அஞ்சுகிறார். எழுத்தில் இருக்கும் மொழிகளை மட்டும் மொழியாக ஏற்க மத்திய அரசு முடிவு செய்தவுடன், வாய்மொழியாகவே மக்களால் பேசப்படும் பல மொழிகள் அழிய வழிசெய்யப்பட்டுவிட்டது என்கிறார்.




பன்மைத்துவத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க இப்போது நாம் புதிய சமூக ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும். எது பேச்சுமொழியாக மட்டும் இருக்கிறதோ அதை எழுத்தில் பதிவுசெய்வதுடன் டிஜிட்டலாகவும் மாற்றிச் சேமிக்க வேண்டும். அப்போது தான் பன்மைத்துவம் நிலைபெறும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழிதான் ஆட்சி மொழி, தொடர்பு மொழி என்று அறிவித்ததால் பழங்குடிகள் மவுனமாகிவிட்டனர். ஒரு மொழியின் மரணமும் மொழிச்சூழலின் அழிவும் ஒரே சமயத்தில் நிகழ்ந்துவருகின்றன.

இந்தியாவின் கரையோரப் பகுதிகளின் வாழ்க்கை முறைகளை அரசு தனது திட்டங்களால் மாற்றியமைத்ததால், அங்கு புழங்கிய மொழிகள் அழிந்தன. கடலோரப் பகுதிகளில் பெருநிறுவனங்கள் முதலீடுகளுடன் கால் வைத்ததும், கரையோரம் வசித்த மக்கள் இருப்பிடத்தையும் பாரம் பரியத் தொழிலையும் இழந்து இடம்பெயர்கின்றனர். புதிய இடங்களில் பழைய மொழிகள் இறந்து, அப்பகுதி மொழி அவர்களுக்குள் குடியேறுகிறது.

பெரு நிறுவனங்களின் லாபத்தில் 5%

'நிறுவனங்களின் சமூகப் பொறுப்புறுதி' (சிஎஸ்ஆர்) சட்டப்படி அப்பகுதிகளின் முன்னேற்றத்துக்குச் செலவிடப்பட வேண்டும் என்கிறது. அந்த 5% செலவை, அழியும் மொழிகளைக் காப்பாற்றச் செலவிடலாம் என்று மானிடவியலாளர் என்ற வகையில் விரும்புகிறேன். அந்தந்தப் பகுதி மொழி மட்டுமல்ல கைவினைகளும் காப்பாற்றப்பட வேண்டும்.

## அழிவது மொழி மட்டுமல்ல

ஒரு மொழியை இழப்பது பிரபஞ்சத் தோற்றத்தின் ஒரு பகுதியை இழப்பதற்குச் சமம். மொழியுடன் இணைந்த நம்பிக்கைகள், சடங்குகள், தகுதி வளர்ப்புகள் இதில் அடக்கம். ஒரு மொழி அழிவதால் சமூகத்துக்கு ஏற்படும் லாபங்கள் அல்லது இழப்புகள் குறித்துப் பெரு நிறுவனங்களின் பாணியில் யாரும் கணக்குப் பார்ப்பதில்லை. புதிய மொழி வந்ததால் பழைய மொழிகள் வழக் கொழிந்து போய்விட்டன என்றே கருதுகிறார்கள்.

உலகிலேயே அதிக மொழிகளின் பிறப்பிடம் இந்தியா. நம்முடைய வேளாண்மையிலும் மொழிக் குடும்பங்களிலும் உள்ள பாரம்பரியச் செல்வங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். 1,40,000 வகை அரிசி இனங்களும் 780 மொழிகளும் கொண்ட நாம், பன்மைத்துவத்தின் காவலர்கள். நம்முடைய மொழிகளையும் கலாச்சாரங்களையும் பாதுகாக்கும் குடித்தன்மையை நம்முடைய ஜனநாயகத்தின் அங்கமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். கலாச்சாரத்தை நுணுகி ஆராய்ந்து கண்டுபிடிக்காத நாடு சாதாரணமான, இறுகி கெட்டித்தட்டிப்போன அலகாக மாறிவிடும். மொழி என்பது பேசுவதற்கான தொடர்புச் சாதனம் மட்டுமல்ல; பல கலைகளையும் பயிற்றுவித்த மூலாதாரம்; பல கருவிகளையும் கண்டு பிடிப்புகளையும் வடித்துத் தந்த ஊற்று. மொழியே, மக்கள் குழுக்களென்று தனி அடையாளத் தையும் தனித் திறனையும் அளித்து வாழ வழிசெய்துள்ளது. இப்படி ஒரு இனத்தையே வாழ்வதை உறுதிசெய்த மொழி பேச்சுவழக் கிலிருந்தும் மறைந்துபோவது நல்லதல்ல. புதிய தலைமுறை நவீனத்துவத்தை ஏற்கும்போது பாரம்பரிய நினைவுகளையும், வாழ்க்கையை எதிர்கொள்ளும் திறன்களையும் தங்களுடைய மொழியுடன் சேர்த்தே இழக்கின்றன.




அழியும் மொழிக்காகத் தனி பிரார்த்தனை தேவைப்படுகிறது. வெகு சில மூத்த குடிமக்கள் மட்டுமே பேசும் மொழிகள் பல. மொழியைத் தெரிந்த கடைசிக் குடி மகனும் இறந்த பிறகு மார்பில் அடித்துக்கொண்டு அழுவது தொடங்குகிறது. ஆனால், இப்படி பாரம்பரிய மொழிகள் அருங்காட்சியகப்படுத்தப்பட்டு, அடையாளம் இல்லாமல் போவதற்கு நவீனக் கலாச் சாரம்தான் காரணமாக இருக்கிறது.

## மொழிப் பன்மைத்துவம்

அருங்காட்சியகம் என்றாலே இறப்பும், இறந்த உடல்களைப் பதப்படுத்தும் ஃபார்மால்டிஹைடு நெடியும்தான் நினைவுக்குவருகிறது என்றார் கலை விமர்சகர் ஆனந்த குமாரசுவாமி. இதே கண்ணோட்டத்தில்தான் சமூகமும் மறைந்த மொழிகளைப் பற்றி நினைக்கிறது. இறந்த மொழியின் ஒலி நாடா சேகரிக்கப்படுகிறது, அதன் இலக்கணம் உறையவைக்கப்படுகிறது, அந்தச் சமூகம் மரணிக்க அனுமதிக்கப்படுகிறது. வளர்ச்சியை ஆராதிக் கும் நவீனத்துவம் மொழியிறப்பு குறித்து சடங்கைக் கடைப்பிடிப்பதோடு நிறுத்திக்கொள்கிறது.

'புள்ளிவிவரங்கள் ரத்தம் சிந்துவதில்லை' என்று ஆல்பர்ட் காம்யூ கூறியிருக்கிறார். 14 நாட்களுக்கு ஒன்று என்ற வீதத்தில் மொழிகள் அழிகின்றனவாம். 'ஆபத்தில் இருக்கும் உலக மொழிகள்' என்று யுனெஸ்கோ வெளியிட்டுள்ள உலக வரைபடத்தைப் பார்த்தால் இதை உணரலாம். 1950 தொடங்கி 230 மொழிகள் வழக்கொழிந்துவிட்டனவாம். அந்த மொழிகளைப் பேசிய சமூகத்தின் அவதானிப்புகளைப் பற்றிய தகவல்கள் ஏதுமில்லாமல், வெறும் தகவலாகவே இது பதியப்படுகிறது. பல மொழிகளும் கலந்து பேசப்படுவதையும் புழங்கப்படுவதையும் கொண்டாட வேண்டும். பேச்சாளர் ஒரே மொழியில் மணிக்கணக்காகப் பேசி மனங்கவர்வது மெக்காலே கல்வித் திட்டம் உருவாக் கிய விளைவு. வெவ்வேறு மொழிகள் உலவும் இடங்களே மக்களுக்குத் தேவை. அவர்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குச் சரளமாக மாற வேண்டும்.

மொழிபெயர்ப்பும்கூட குடிமைத்துவத்தின் முக்கிய மான அம்சம். மூன்றாவது உலக நாடுகளுக்கு, மொழிபெயர்ப்புக்காகவே புதிய மாதிரியிலான யுனெஸ்கோ தேவை என்று அனந்தமூர்த்தி ஒரு முறை கூறியிருக் கிறார். உள்ளூர் மொழிகளும் மாநில மொழிகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகின்றன. தமிழி லிருப்பதை ஸ்பானிய மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்று அபூர்வமாகத்தான் யாருக்காவது தோன்றுகிறது. பன்மைத்துவக் கண்ணோட்டம் நீடிக்கப் பல மொழிகளும் ஆராதிக்கப்படுவதும் அறியப்படுவதும் அவசியம்.


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# மதமில்லா

## வள்ளுவர் காட்டுவது அறமா, மதமா?

‘பகவன் என்ற பிராமணனுக்கும் ஆதி என்ற பறைச்சிக்கும் ஔவை, திருவள்ளுவர், கபிலர், பரணர், உப்பை, உறுவை, வள்ளி என்ற குழந்தைகள் பிறந்து உபய குலத்துக்கும் நீங்காத கீர்த்தி ஏற்படுத்தியதை இக்காலத்திலும் பறையர் மறந்து போகவில்லை’ — என்று மகாகவி பாரதி ‘பஞ்சமர்’ என்ற கட்டுரையில் தெரிவிக்கிறார்.

ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்கு உவமை இல்லாதான், அற ஆழி அந்தணன் ஆகிய எட்டு பண்புகளையே எண்குணத்தான் என்கிற ஒன்பதாம் குறட்பாவினில் குறிப்பிடுவதாகவும் கருதுவர்.



இத்தகைய சொல்லாட்சிகள் ‘வள்ளுவப் பெருமான் சமண சமயத்தினர் என்று கொள்வதற்கு வலிமையான சான்றுகள்’ (திருவள்ளுவர் திருமேனி தாங்கிய தங்கக் காசு, பக்கம் 498) என்று உரைக்கிறார் அறிஞர் ஐராவதம் மகாதேவன்.

இந்த எட்டுப் பண்புகளையும் சட்டை முனிவாத காவியம் (பாடல் 13) புருவ மத்தியாகிய ஆக்ஞேயம் அல்லது வெளிப்பாழ், ஒளியின் பாழ், வெளி ஒளிப்பாழ், நிர்க்குணத்தின் பாழ், அனமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம் என்று எடுத்துக் கூறுகிறது.

‘பகவன்’ என்ற சொல்லுக்கு ‘பகவு+அன்’, அதாவது பகுத்தறிவு மிக்கவன் என்றும், வேறு சிலர் ‘பகலன்’ என்ற சொல்லாட்சி ஓலைச்சுவடியில் எழுத்தாணி இயல்பால் திரிந்து வழங்கிற்று என்றும் எல்லாம் கருதுகின்றனர்.

‘ஞாயிறு போற்றுதும்‘ என வணங்கப்படும் ஆதவனே ஆதி பகவன். இது தமிழர் மரபு. வேளாண் மக்களுக்கு அறுவடைத் திருநாள் பொங்கல் விழா — சூரிய வழிபாட்டுத் தினம் — எல்லாம் சூரிய பகவானைப் போற்றும் மங்கல வழக்காகும்.

இவ்வுலக இயக்கத்திற்கு வேண்டிய ஆற்றலை வரையறாது வாரி வழங்குகிற அமுத சுரபி சூரியன். விலங்குகள், தாவரங்கள், உயிரினங்கள் போன்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் சூரிய வெளிச்சம் இயற்கையானதோர் வரப்பிரசாதம். ஏனெனில் சூரிய ஒளி மட்டும்தான் பூமிக்கு அப்பால் வெளியிலிருந்து நமக்கு வந்து சேரும் ஆற்றல் மூலம். ஏனைய கருவறைகள் பூமிக்குள்





# வள்ளுவம்

## சு.முத்து

அல்லது புவி சார்ந்த வளிமண்டலத்தில் அடங்கி இருப்பனவே... நம் முழு முதற்கடவுள் ஞாயிறு. இவனே ஆதிபகவன். ஆதித்த பகவன்' என்று நான் 'வள்ளுவர் கண்ட அறிவியல்' என்ற நூலில் நிறுவியுள்ளேன்.

சூரிய தேவன் கோலோச்சாத இதிகாசங்கள், புராண காவியங்கள் எம்மொழியிலும் எம்மதத்திலும் இல்லை. வடமொழி வேதத்தில் அருணம் என்பது ஞாயிறு— வழிபாட்டுக்குரியது. இராமபிரானுக்கு அகத்தியர் உபதேசித்தது 'ஆதித்ய ஹிருதயம்' அல்லவா?

கிறித்தவ விவிலியமும் 'கடவுள் ஒளி உண்டாவதாக' என்றபடி பகலவனை சிருஷ்டித்த விதத்தினை ஓதுகின்றது.

கிரேக்கத்தில் சூரியக் கடவுளை 'ஹீலியோஸ்' என்கிறார்கள். 'ஸஸால்' என்று அழைக்கப்பட்ட ரோமானிய சூரியனும் பண்டைய யவனர் தம் முதல் தெய்வம்தானே!

தமது 90—ஆம் வயதில் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்திற்கு வருகை தந்த முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் திருக்குறளைப் பற்றிப் பேசும்பொழுது, 'கடவுள் வாழ்த்து என்ற முதல் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் ஏழிலும் இறைவனது திருவடித் தாளினையே வள்ளுவர் வாழ்த்துகின்றார். ஏனெனில் இறைவனது வேறெந்த உறுப்பினை எடுத்துக் கூறினாலும் அது கடவுளை உருவம் காட்டிவிடும்! உடலுறுப்புகளில் பாதம் மட்டுமே ஆண், பெண் என்று இனங்காட்ட இயலாத அங்கமாகும். அதனாலேயே இன்ன தெய்வம் என்றில்லாமல், எல்லா மதங்களுக்கும் ஏற்புடைய கடவுளை வாழ்த்தும் உலகப் பொதுமறையாகத் திருக்குறள் திகழ்கிறது' என்று கூறினார்.

மிக அண்மையில் 2017 டிசம்பரில் 'திருக்குறள் —

### திருக்குறளின் அதிசயங்கள்

- ✓ திருக்குறளில் தமிழ். என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை,
- ✓ திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42,194
- ✓ திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 - ல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை
- ✓ திருக்குறளில் இடம் பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை
- ✓ திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- ✓ திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை - குன்றிமணி
- ✓ திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ
- ✓ திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- ✓ திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி (1705)
- ✓ திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ , ஙு
- ✓ திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது
- ✓ திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது
- ✓ திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்

சாஸ்திரங்களின் சுருக்கக் கோவை' எனும் ஆங்கில நூலில் ஆய்வறிஞரும் சம்ஸ்கிருத நிபுணரும் ஆன டாக்டர் இரா. நாகசாமி முப்பாலின் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார். சம்ஸ்கிருதம் இடையிட்ட ஆங்கில உரைநூல். தர்மசாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், காம சாஸ்திரம் மற்றும் நாட்டிய சாஸ்திரம் ஆகிய இந்து வேத மரபிலான சாஸ்திரங்களின் மேற்கோள்களுடன் ஒரு புதிய பார்வையில் திருக்குறள் ஆராயப்பட்டு இருக்கிறது.

கீழடக்க வந்த அன்னிய பாஷைகள் என்பதையும் பரப்பினர்' (பக். 24) என்றும் எழுதுகிறார்.

அதிலும் திருவள்ளுவர் மனுதர்ம சாஸ்திர(ம்) கூறுகிற பிரம்மச்சர்ய, வனப்பிரஸ்த, சன்னியாச வாழ்வியல் கட்டடங்களோடு ஒத்துப்போகிறார். இது முழுக்க முழுக்க இந்து (இந்திய) வாழ்க்கை நெறி. ஜி.யு.போப்பும் மற்றவர்களும் போல வள்ளுவரைச் சித்திரிப்பவர்கள் திருக்குறளின் மொத்த வடிவமைப்பும் அறியாத அற்பர்களாமே. (பக்.14—15).

## Thirukkural

**Thirukkuṟaḷ (Tamil: திருக்குறள் also known as the Kural), is a classic of couplets or Kurals or aphorisms. It was authored by Thiruvalluvar, a celebrated Tamil poet and philosopher. Most believe he wrote Thirukkural in 30 BC. It is one of the most important works in the Tamil language.**

**Thirukkural is a collection of 1330 Tamil couplets grouped into three sections.**
**•Aram: Righteousness: 380 verses: good ethical behavior with conscience and honor ("right conduct")**
**•Porul: Wealth: 700 verses: right manner of conducting worldly affairs**
**•Inbam: Love: 250 verses: love between men and women.**

**Thirukkural preaches simplicity and truth throughout its verses.**

இந்துச் சிந்தனைகளின்படி தர்ம, அர்த்த, காம, மோட்ச நிலை ஆகிய புருஷார்த்தங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் என்று டாக்டர் நாகசாமி வள்ளுவரை மத வரையறைக்குள் குறுக்குவது மட்டும் ஏனோ தெரியவில்லை.

திருக்குறளின் உரையாசிரியரான பரிமேலழகரை காஞ்சி விஷ்ணு கோயில் பூசாரி என்றும் குறிக்கின்றார் (பக். 22). 'சில கிறித்தவ மிஷனரிகள் இந்தியாவை ஆண்ட ஐரோப்பியர்களின் துணையோடு இங்கே ஜனங்களை மதம் மாற்றுவதற்காகவே ஊதியம் பெற்று வந்தனர். 'இந்தப் பெரும்பணியில் உள்ளூர் மக்களின் மொழியே உன்னதம் என்றும், புகழ் மிக்கது என்றும் பரப்பினர். வட மொழிகள் பிராந்திய மொழிகளைக்




'வள்ளுவர் பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர் ஆகிய நால்வர்ண முறையினை ஏற்றுக்கொண்டு எழுதுகிறார். இன்றைய நவீன சுயநல அரசியல்வாதிகள் வெளிக்காட்டுவது போன்று அவற்றைக் கருதவில்லை' (பக். 26) என்று எந்த அடிப்படையில் ஆராய்ச்சி செய்கிறாரோ? 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற திருக்குறள் எதை வற்புறுத்துகிறதோ?

'சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு' என்ற குறளில் வரும் பூசனை என்பது வானோர்க்குச் செய்யப்படும் மதச்சடங்கு ஆகிய பூஜை என்பதாகக் கருதி, 'வள்ளுவர் மதங்களுக்கு எதிரானவர் அல்லர்' — பக்.70) என்று முடிவும் செய்கிறார். 4000 ஆண்டுகளுக்கு முன்னம் தமிழ்நாடு என்பது ஆரிய தேசம் என்றே வழங்கிற்று என்று அறுதியிட்டுக் கூறுகிறார். (பக்.35).

அறத்துப்பாலில் பிரம்மச்சர்யம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகிய நான்கு ஆசிரம வாழ்வு நிலைகளும் தொகுக்கப்பட்டு

உள்ளன என்கிறார். அதில் பாயிரம் காட்டும் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய அதிகாரங்களை பிரம்மச்சரியத்தின் அடிப்படைகளாகவே வகுக்கின்றார்.

பாயிரத்திற்குப் பிரம்மச்சர்ய விரதம் என்றும் தலைப்பு இட்டு, கடவுள் வாழ்த்து அதிகாரத்தினை அக்ஷர அப்பியாச(ம்) என்று விளக்குகிறார். வான்சிறப்பு என்பதனைப் பிரம்மச்சரிய சீடர்கள் அண்டை அயலாரிடம் போய் பிச்சை வாங்கி வந்து குருவிடம் காட்டி, அவர் சம்மதித்த பின்னேயே அன்னம் உண்ண வேண்டுமாம். இது ‘பிக்ஷல வந்தனம்‘ என்க. மூன்றாவது அதிகாரத்திற்கு ஒழுக்கத்து நீத்தார் பெருமை என்கிற விளக்கம் சாஸ்திரங்களின் சுருக்கக் கோவை அல்லது தழுவல் என்ற நிரூபணத்தை மறுத்து உரைக்க இயலாது என்றே பறைசாற்றுகின்றார்(பக்.38).

‘பிராகிருதம் என்னும் வழக்கு மொழியில் இருந்து தோன்றிய பைசாசம், சௌரசேனி, மஹாராஷ்ட்ரம், மாகதி, அர்த்தமாகதி (பாலி) போன்ற மொழிகளின் இலக்கியங்களையும் அவற்றில் இருந்து பிறந்த சிந்தி, ராஜஸ்தானி, குஜராத்தி, பிகாரி, ஒரியா, வங்காளி, அசாமி, லந்தா, காஷ்மீரி, கீழை இந்தி, மேலை இந்தி பஞ்சாபி ஆகிய இந்திய மொழிகள் அனைத்தும் பேச்சு வழக்கு மொழிகள். பிராகிருதத்தின் செம்மைப்படுத்தப்பட்ட இலக்கிய வழக்கு மொழியே சம்ஸ்கிருதம். ஆயின், ஆரியம் அல்லாத திராவிட மொழிக் குடும்பங்களில்

## திருக்குறள்

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** — குறள் - 1

அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** — குறள் - 2

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்** — குறள் - 3

தரப்படுகிறது.

பூனை வேடத்தில் வந்து அகலிகையுடன் கூடல் புரிந்த இந்திரனை ‘ஐந்து புலன்களையும் அவித்த ஆற்றல் உடையவனுக்கு உரிய எடுத்துகாட்டு’ என்பது தெரிந்தே இழைக்கப்படும் தவறு அல்லவா?

அதிலும் அறன் வலியுறுத்தலில் மௌரியப் பேரரசர் அசோகர் தமது அதிகாரிகளையும், ஆசான்களையும் தமது கொள்கை பரப்ப அனுப்பினார் என்று எழுதுகிறார். அசோகர், பிராந்திய மொழிகளின் முன்னேற்றம் கருதி அவரவர் தாய்மொழியில் பாலி மொழியின் புத்தக் கருத்துகளைப் பரப்பினார் என்கிற வரலாற்றினை இயல்பாகவே சீரிய ஆய்வாளர்கள் மறைப்பது கூடாதுதானே?


ஏதாயினும் டாக்டர் நாகசாமியின் கருத்துப்படி வேத தர்ம மார்க்கத்தினை தமிழர்கள் எளிதில் புரியும்படி வழங்கியதே திருக்குறள். (முகவுரை, பக். 12). இறுதியில் திருக்குறள், சம்ஸ்கிருத தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் தென்னிந்தியாவில் புழங்கியவை. ஆயினும் ஆரியத்தை அகற்றிவிட்டு தென் பிராந்தியத்தில் இந்த வழக்கு மொழிகள் முன்னிலை பெறத் தொடங்கியதற்கு எந்த ஆதாரமும் இந்திய வரலாறு முழுவதிலும் கிடைக்கவில்லை’ என்று ‘சம்ஸ்கிருத இலக்கியத்தின் சிறு வரலாறு’, முன்ஷிராம் மனோஹர்லால் வெளியீடு, புதுதில்லி, திருத்திய விரிவான இரண்டாம் பதிப்பு, 1963. பக். 11) நூலில் ஹன்ஸ்ராஜ் அகர்வால் ஆராய்ந்து உரைக்கிறாரே.

ஏதானாலும், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் முயற்சியால் சீனமொழியில் அண்மையில் மொழிபெயர்க்கப்பட்டது உள்பட, இதுவரை நாற்பதுக்கும் அதிகமான உலக மொழிகளில் அரங்கேறிய உலகப் பொது மறையாம் திருக்குறளை எந்த மதக் குடத்தினுள்ளும் அடக்கிவிட முடியாது என்பதே உண்மை!



## தென்னாசிய நாடுகளில் இந்தியாவின் செல்வாக்கு சரிவு ஏன்?

இந்தியாவை கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் அண்டை நாடுகளான பர்மா, இலங்கை, மாலத்தீவுகள் போன்றவற்றையும் தங்கள் பேரரசின் கீழ் கொண்டு வந்தார்கள். மற்றும் நேபாளம், பூடான், சிக்கிம் போன்ற மன்னராட்சி நாடுகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். இந்துமாக்கடல் ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்தியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தின் விளைவாக மேற்கண்ட நாடுகளும் விடுதலை பெற்றன. எனவே, அந்நாடுகள் இந்தியாவை சார்ந்தே இயங்கின. உலக அரங்கில் இந்தியாவின் தலைமையை யேற்றுப் பின்பற்றின. ஆனால், இதெல்லாம் பகற் கனவாக, பழங்கதையாக மறைந்துவிட்டன.







இந்தியாவிலிருந்து பிரிந்த பாகிஸ்தான், அதிலிருந்து இந்தியாவின் உதவியுடன் பிரிந்து உருவான வங்கதேசம், நேபாளம், மியான்மர், இலங்கை, மாலத்தீவு போன்ற எந்த அண்டை நாடும் இந்தியாவுடன் நட்புறவாக இல்லை என்பதோடு அவை சீனாவுடன் மிக நெருக்கமான நட்புறவு கொண்ட நாடுகளாக மாறிவிட்டன என்பது மறைக்க முடியாத அப்பட்டமான உண்மையாகும்.

ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் பல நாடுகளைக் கொண்ட நடுநிலை நாடுகள் அமைப்பின் உருவாக்கத்திற்கு இந்தியாவின் முதலாவது தலைமையமைச்சர் நேரு பெரும் காரணமாவார். அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகிய இரு வல்லரசுகளின் தலைமையில் இரு பெரும் முகாம்கள் உலகில் இயங்கிவந்தன. ஆனால், இவ்விரு முகாம்களுக்கு மாற்றாக மூன்றாவது முகாமாக நடுநிலை நாடுகள் அமைப்பு விளங்கியது. மூன்றாவது உலகப் போர் மூளவிருந்ததை இந்த அமைப்பு தவிர்த்தது. இந்த முகாமின் உருவாக்கத்தில் நேருவின் தலைமையையேற்று தென்னாசிய நாடுகள் அவருக்குத் துணை நின்றன. ஆனால், இப்போது அதே நாடுகள் இந்தியாவிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றுவிட்டன. இந்துமாக்கடலும் இந்தியாவின் கட்டுப்பாட்டில் இல்லை.

# தமிழே

**பழ. நெடுமாறன்**


தனது பாட்டனார் நேரு, தாயார் இந்திரா காந்தி ஆகியோரால் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட நடுநிலை நாடுகள் அமைப்பைப் போன்று ஓர் அமைப்பை உருவாக்கி தானும் வரலாற்றில் இடம்பெற வேண்டுமென நினைத்து பிரதமர் இராஜீவ் காந்தி உருவாக்கிய தென்னாசிய அமைப்பு முற்றிலுமாக செயலற்றுவிட்டது. மூத்த அண்ணனின் போக்கில் இந்தியா நடந்துகொண்டதே இதற்குக் காரணமாகும்.

சின்னஞ்சிறிய நாடான மாலத்தீவு தனது உள்நாட்டுப் பிரச்னையில் இந்தியா தலையிடுவதை விரும்பவில்லை. தனது அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்காக மாலத்தீவின் அதிபர் யமீன் அவசரநிலையை அறிவித்தார். அதை நீட்டிக்க வேண்டாம் என இந்திய வெளியுறவுத் துறை வற்புறுத்தியது. "ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற பழமொழிக்கேற்ப அவசரநிலையை உடனடியாக மேலும் நீட்டித்ததோடு, தன்னுடைய நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி நிற்குமாறு இந்தியாவுக்கு எச்சரிக்கையும் விடுத்தது.




அந்தமான் தீவுக்கருகே இந்தியக் கடற்படை சார்பில் 16 நாடுகளின் கடற்படை ஒத்திகையில் கலந்துகொள்ள வேண்டும் என மாலத்தீவுக்கு இந்தியா அழைப்பு விடுத்தது. ஆனால் அந்த அழைப்பையும் ஏற்க மறுத்துவிட்டது மாலத்தீவு. அதே வேளையில் சீனாவுடன் அதனுடைய நட்புறவு நாளுக்குநாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. சீனாவின் கடற்படைக் கப்பல்கள் தனது துறைமுகங்களுக்கு வந்து செல்ல மாலத்தீவு அனுமதித்துள்ளது. மாலத்தீவில் விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்காக இந்திய நிறுவனம் ஒன்றிற்கு அளித்த அனுமதியை மாலத்தீவு அதிபர் அப்துல்லா யமீன் ரத்து செய்ததோடு மட்டுமல்லாமல், அந்த அனுமதியை சீனாவுக்கு வழங்கியுள்ளார்.

சீனா திட்டமிட்டுள்ள கடல் பட்டுப்பாதைத் திட்டத்தில் மாலத்தீவும் இணைந்துள்ளது. இதன்மூலம் சீன போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் மாலத்தீவுக்கு வந்து போகும்



உரிமையைப் பெற்றிருக்கின்றன. சீனாவுடன் சுதந்திர வணிக உடன்பாட்டினையும் மாலத்தீவு செய்துள்ளது. இதன் மூலம் மாலத்தீவின் சந்தை சீனப் பொருட்களுக்குத் திறக்கப்பட்டுள்ளது. மாலத்தீவுக் கூட்டத்தில் 20 தீவுகள் வரை சீனாவுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

நம்பிக்கைக் கொண்டிருக் கிறோம். இந்தியாவும் அதையே ஏற்றுக்கொண்டிருந்தது. வங்காளத்தில் பெரும்பான்மையாக இருக்கக் கூடிய சமூகம் இந்தியாவில் சிறுபான்மையாக இருக்கிறது. அந்தச் சமூகம் மீது ஏவப்படுகிற வன்முறை வங்கத்தில் வேண்டாத ஒரு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.



அண்டை நாடான நேபாளத்தில் புதிதாகப் பதவியேற்றுள்ள இடதுசாரி அரசின் தலைமையமைச்சர் சர்மா ஒலி சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் நெருக்கமான நட்புறவுக் கொண்டிருக்கிறார். சீனாவும், நேபாளமும் அண்மையில் 10 உடன்பாடுகளை செய்துகொண்டுள்ளன. பொருளாதார ரீதி மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் இந்த உடன்பாடுகள் சீனா } நேபாள நட்புறவை மேலும் நெருக்கமாக்கி உள்ளன. நேபாளத்தில் மன்னராட்சி நிலவியபோது அங்கு நடைபெற்ற மக்களாட்சி முறைப் போராட்டத்திற்கு இந்தியா ஆதரவு அளித்தது. ஆனால், பிற்காலத்தில் இந்தியாவின் அணுகுமுறை யைத் தன் மூப்புப் போக்காக நேபாள அரசியல்வாதிகள் கருதினார்கள். இப்போது நேபாளத்தில் இடதுசாரிகள் அரசும், இந்தியாவில் இந்துத்துவா அரசும் இருப்பது என்பது இரு நாடுகளுக்கிடையேயுள்ள உறவு மேலும் சீர்கேடு அடைவதற்கும், அதை சீனா முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் உதவும் என்பதில் ஐயமில்லை.

வங்கதேச விடுதலைப் போருக்கு இந்தியா செய்த உதவியினால் உருவான நெருங்கிய நட்புறவு இப்போது குறைந்துவிட்டது.




அண்மையில் வங்க அமைச்சரான அசாநுல் ஹக் இனு பேசும்போது, “மதச் சார்பற்ற ஜனநாயகக் கொள்கையில் நாங்கள் மத அடிப்படை அரசியலில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. மத வேறுபாடுகளுக் கப்பால் மொழி அடைப்படையில் அடையாளம் காண்பதில் நாங்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளோம்‘ என்று கூறியுள்ளார்.


இரு நாடுகளுக்கிடையேயுள்ள தீஸ்தா நதிநீர் பிரச்னை மற்றும் வணிகப் பிரச்னைகள் உள்ளன. நீண்ட காலமாக இவை தீர்க்கப்படவில்லை. மாறாக, சீனாவுடனான வங்கதேச நட்புறவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது. வங்கதேசத்தில் சிட்டகாங் ஆழ்கடல் துறைமுக வளர்ச்சித் திட்டம் சீனாவின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

“இலங்கையில் நடைபெறுவது ஈழத் தமிழர்களுக்கெதிரான இன அழிப்பேயாகும்‘ என இந்திய முன்னாள் தலைமையமைச்சர் இந்திரா காந்தி 1983}ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதி டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டு இலங்கை அரசை எச்சரித்தார். அதைத் தொடர்ந்து மூத்த இராசதந்திரியான ஜி. பார்த்தசாரதியை இலங்கைக்கு அனுப்பி இலங்கை அரசுடன் பேச வைத்தார். இதன் விளைவாக ஈழத் தமிழர் தலைவர்களுக்கும், சிங்கள அரசுக்குமிடையே உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. அந்த உடன்பாட்டிலிருந்து இலங்கை அரசு பின்வாங்கத் தொடங்கியவுடன் போராளிக் குழுக்களை இந்தியாவுக்கு அழைத்து இராணுவப் பயிற்சிக் கொடுக்கச் செய்தார். அதற்கடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்வதற்கு முன் படுகொலை செய்யப்பட்டார்.

ஆனால் அவருக்குப் பின் தலைமையமைச்சரான இராஜீவ் காந்தி அதற்கு நேர் மாறான பாதையில் பின்பற்றி ஈழத்தமிழரின் விடுதலைப்

போராட்டத்தை ஒடுக்கி, இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பி இலங்கை அரசை திருப்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மன்மோகன் சிங் ஆட்சியிலும் அதுவே தொடர்ந்தது. இதன் விளைவாக இலங்கையின் அதிபராக இராஜபக்சே இருந்தபோது சீனாவுடன் நெருக்கமான நட்புறவு கொண்டார்.

“ஈழத் தமிழர்களுக்கு இந்தியா உதவாமல் இருக்க



Copyright © 2005 Pearson Prentice Hall, Inc.

வேண்டுமானால் சீனாவுடன் நெருக்கமான நட்புறவு கொள்ளவேண்டும். அப்போதுதான் இந்தியா தன்னுடைய வழிக்குவரும்‘ என்ற இராஜபக்சேயின் திட்டம் இனிதே நிறைவேறியது. அதன் விளைவாக இலங்கையின் ஹம்பன்தொட்டாவில் கடற்படைத் தளம் ஒன்றினை சீனா அமைத்துள்ளது. சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்பில் நிற்கின்றன. இலங்கையில் சீனா ஆழமாகக் காலூன்றிவிட்டது.

மேற்கு நாடுகளுக்கும், கிழக்கு நாடுகளுக்கும் இடையே நடைபெறும் கப்பல் போக்குவரத்து இந்துமாக்கடல் வழியேதான் நடைபெறுகிறது. எனவே, இந்துமாக்கடலின் ஆதிக்கம் தன்வசம் இருக்கவேண்டும் என்னும் இந்தியாவின் திட்டத்தை இலங்கையும், மாலத்தீவும், மியான்மரும், வங்கதேசமும், பாகிஸ்தானும் செயலற்றதாக்கிவிட்டன. இந்நாடுகள் அனைத்திலும் சீனாவின் கடற்படைத் தளங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இந்தியாவைச் சுற்றி இந்நாடுகளின் வழியாக சீனாவின் முற்றுகை வளையம் இறுகி வருகிறது. இதைக்கண்டு இந்திய அரசு பதற்றம் அடைந்துள்ளது.

பல்வேறு மதங்கள், பல மொழி பேசும் மக்கள், பல்வேறு பண்பாடுகள் ஆகியவற்றைக் கொண்ட தென்னாசிய நாடுகளுடன் இந்தியாவின் நட்புறவு நீடித்தால்தான் உலக அரங்கில் இந்தியா மதிக்கப்படும். இந்த உண்மையை இந்தியா உணரவேண்டும். இந்தியாவிலேயே பல்வேறு மொழி பேசும் மக்களும், பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களும், பல்வேறு பண்பாடுகளும் நிலவுவதை மதிக்காமல் ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு என்பதை நிலைநிறுத்த நடைபெறும் முயற்சி உள்நாட்டில் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதோடு அண்டை நாடுகள் அனைத்தையும் மேலும் மேலும் அந்நியப்படுத்திவிடும்.



பல்வேறு மொழிகளையும், அவற்றின் அடிப்படையில் அமைந்த பண்பாடுகளையும் கொண்ட ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றில் மேலும் மேலும் நெருக்கமான வலுவான உறவு கொண்டு தங்களின் தனித்தன்மையை இழக்காமல் ஒன்றிணைந்து வெற்றி பெற்றுள்ளது. ஆனால், தென்னாசிய நாடுகளில் அந்த முயற்சி தோல்வியடைந்திருப்பதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு?

அண்டை நாடுகளில் சீனாவை காலூன்ற வைத்ததில் காங்கிரசுக் கட்சிக்கு எவ்வளவு பங்குண்டோ, அதற்குக் கொஞ்சமும் குறையாத பங்கு பா.ஜ.க. ஆட்சிக்கும் உண்டு.

சிறுகதை



# தூதுவன்

## கொற்றவன்

“தம்பி! இதோ காட்டுப் பகுதியின் முடிவுக்கு வந்து விட்டோம்!” தேக்கு மரங்களும் பாக்கு மரங்களும் அடர்ந்திருந்த ஒரு குன்றுப் பகுதியை வந்தடைந்தபோது பெரியவர் சொன்னார்.

“இங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் வழியில் ஒரு கிராமம் இருக்கின்றது. அங்கிருந்து மேற்குப் பாதையில் சென்றால், தலைநகரை மதியத்துக்குள் அடைந்து விடலாம்.” என்றவாறு தன் குதிரையிலிருந்து இறங்கி நின்றார் பெரியவர். மரியாதையின் பொருட்டு வளவனும் தன் குதிரையிலிருந்து குதித்து நின்றான்.

“தம்பி! உங்களைப் பார்த்தது முதல் ஏற்பட்ட பாசம் இன்னதென்று என்னால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், இப்போது... உங்களைப் பிரியப் போகிறோம் என்பது... வேதனையாக இருக்கிறது. ஏன் என்று எனக்குத் தெரியவில்லை தம்பி! ஆனால் என் காலத்துக்குள் நான் செய்ய வேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. நான் இப்போது உங்களிடம் வேண்டுவது...” வளவனை நெருங்கி வந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டார் பெரியவர்.

“ஐயா, நீங்கள் ஆண்ட பரம்பரை! என்னிடம் வேண்டுவது என்ற சொல்லைப் பயன்படுத் தாதீர்கள்! ஆணையிடுவது என்று சொல்லுங்கள்.”




“இல்லை தம்பி, அந்த நிலையை என்றைக்கோ நான் கடந்துவிட்டேன். அதை நான் விரும்பவும் இல்லை! என் கவலையெல்லாம், என் மகள் வயிற்று மகளான மலர்விழியைப் பற்றித்தான்...” பெரியவர் மலர்விழியைப் பற்றிச் சொல்ல வந்ததும் வளவனுக்குள் ஒருவிதப் பரபரப்பு வந்து தொற்றிக் கொண்டது.

“ஐயா, தாங்கள் விரைவாக வீடு திரும்புங்கள்... பாவம், மலர்விழி அங்கே தனியாக...” தயக்கத்துடன் படபடத்தான் வளவன்.

“கவலை வேண்டாம் தம்பி, அவளை யாரும் எதுவும் செய்துவிட முடியாது! அவளுக்கு வாள்வீச்சு, சிலம்பம் எல்லாம் அத்துப்படி! அபாயம் அவளை நெருங்காது! அவளிடம் ஒரு அற்புதச் சக்தி இருக்கிறது. அதனால் கவலை வேண்டாம்! சரி, நீங்கள் சேரமன்னரைச் சந்திக்கும்போது, என் ஓலையை மறக்காமல் மாமன்னரிடம் சேர்த்துவிடுவீர்கள் அல்லவா?”


“நிச்சயமாக!”

“சரி, பத்திரமாகப் போய் வாருங்கள்” என வளவனுக்கு விடை கொடுத்தார்.

வளவன் இடைக்கச்சையை ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொண்டான். சிறு மூங்கில் குழல் பத்திரமாகத் தொங்கியது.

“வருகிறேன் ஐயா!” என்றவாறே வளவன் குதிரையின்மீது தாவி அமர்ந்தான். கையசைத்து விடை தந்தார் பெரியவர்.





வளவன் குதிரையைத் தட்டினான். குதிரை மெதுவாய் குதித்து ஓடத் துவங்கியது.

முதல்நாள் மாலையில் இருந்து நடைபெற்ற நிகழ்வுகள், தடாகத்தில் எழும்பும் வளையங்களாய் வளவனுக்குள் வலம் வந்தன.

மலர்விழியைக் காட்டில் தனியாகச் சந்தித்ததும், அவளது இல்லத்தில் இரவு தங்க நேர்ந்ததும், அந்த ஒரு இரவில் மலர்விழி உள்ளமும் தன் உள்ளமும் செம்புலப் பெயல்நீராய் அன்பில் கலந்து இனி ஒருவரின்றி ஒருவர் இல்லை என்ற நிலையில் வந்து நின்றதும் வளவன் நினைவில் தேனாறாய் ஓடியது.

அவனும் மலர்விழியும் தங்கள் காதலை ஒருவருக்கு ஒருவர் தெரிவித்துக் கொள்ள இயலாமல் தவிக்கையில், பெரியவர் மட்டும் இருவரது நிலையையும் எப்படி அறிந்துக் கொள்ள முடிந்தது? வளவனுக்குள் வினா எழுந்தது.

தன்னை வழியனுப்பும் போது அவர் தந்த ஓலையில், தன்மீதே ஒரு பாடலையும் வடித்துக் கொடுத்திருக்கிறாரே பெரியவர்! என எண்ணி எண்ணி வியந்த வளவன், பாட்டனும் பேத்தியும் தன்மீது காட்டும் அன்பில் நெகிழ்ந்தபடியே பயணத்தைத் தொடர்ந்தான்.

சேரமான் செங்குட்டுவனின் அரசவை நிரம்பி வழிந்தது.

ஆன்றோர் பெருமக்களும் புலவர் பெருமக்களும் மாமன்னரைக் கண்டு மகிழ்ந்து, புகழ்ந்து, பரிசில் பெற்றவண்ணம் இருந்த சூழல், வளவனின் வருகையால் சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது.

நலங்கேட்டலுக்குப் பின், அவன் வந்த விவரத்தைக் கவனமாய்ச் செவிமடுத்தார் மாமன்னர்.

"இரண்டு செய்திகளை ஏந்தி வந்திருக்கிறேன் அரசே! ஒன்று இளவரசர் வில்லவன் அனுப்பிய மடல்! இன்னொன்று தமிழ்ப் புலவர் ஒருவர் தந்தனுப்பிய மடல்!" வளவன் தன் இரு கரங்களிலும் இரண்டு மடல்களைக் காட்டியபடி சொன்னான்.

"முன்னுரிமை தமிழ்ப் புலவர் மடலுக்கே!" செங்குட்டுவர் குரல் செம்மாந்து ஒலித்தது.

அதுகேட்டு புலவர்களும், பாணர்களும் கரவொலி எழுப்பினர். முதுபுலவர் குளமுற்றத்தார் எழுந்தார்.

“பேரரசர் உள்ளம் இன்னதென்று தெரியாதா? இன்பத் தமிழா அல்லது தங்கள் புதல்வரா என்ற நிலை வந்தபோது சங்கத் தமிழைத்தான் தங்கள் உள்ளம் நாடும் என்பதை இங்குள்ளோர் யாவரும் அறிவோம்! ஆயினும் இந்த அவையில் இதனை இரண்டாம் முறையாக மெய்ப்பித்திருக்கிறீர்கள் அரசே!”

“ஆம்! அன்று பரணர் பாடிய பதிற்றுப் பத்தின் தமிழுக்காக தன் மகனைத் தானமாகக் கொடுத்தார். இன்று தமிழ்ப் புலவர் மடலுக்கு முன்னுரிமை கொடுத்து தன் மகன் மடலுக்கு இரண்டாம் இடம் கொடுத்திருக்கிறார். என்னே எம் மாமன்னரின் தமிழ் உள்ளம்!...” வியந்தார் மற்றொரு புலவர் இளங்கீரர்.

“செந்தமிழ்க்கோன் செங்குட்டுவ மாமன்னர் வாழ்க!...” குளமுற்றத்தார் முழங்க, “வாழ்க வாழ்க!” என வாழ்த்தொலி எழும்பியதில், அந்த அவை குலுங்குவது போலிருந்தது.

மாமன்னர் அவையை அமைதிப் படுத்தினார். வளவன் நீட்டிய ஓலையைப் பெற்று வந்த மெய்க்காப்பாளன் மலையன், மன்னர் கரத்தில் தந்தான்.

ஓலையை வாசித்த செங்குட்டுவர் விழிகள் வியப்பில் விரிந்தன. விரிந்த விழிகள் பொலிந்தன. இமைகள் மேலும் கீழுமாய் நெளிந்தன. மாமன்னர் இதழ்களில் முறுவல் படர்ந்தது.

“ஆகா! ஆகா! அற்புதம் வளவா! எங்கே இந்தப் பைந்தமிழ்ப் புலவர்?”

“வரும் வழியில் எதிர்பாராமல் சந்தித்தேன் வேந்தே! தங்களிடம் சேர்ப்பிக்கும்படி இவ்வோலையைத் தந்தார். இதனைத் தந்தவரே வாசித்து, அதன் பொருளைச் சொல்லி, தன் நிலையையும் சொல்லித்தான் தந்தார். எனவே இவ்வோலைச் சொல்லும் பொருளையும், அதில் ஊறும் இன்பத் தமிழ்த் தேனையும் நானறிவேன்.”

“நல்லது! இப்பாடல் தரும் செய்தியைப் பகிர்ந்து கொள் பார்க்கலாம்!”




“ஆகட்டும் அரசர்க்கரசே! பாடல் சொல்லும் பொருள் இதுவே!” என்ற வளவன், தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சபையோர் அனைவரும் கேட்கும் வண்ணம் சத்தமாய்ச் சொன்னான்.

“தோழனே! நீ யாரோடு நட்பு வைத்திருக்கிறாய்? நீ நண்பனுமில்லாமல், பகைவனுமில்லாமல் நடந்து கொள்ளும் முறை ஏன்? பகட்டான யானையும் பெருந்தேரையும் கொண்ட குட்டுவப் பேரரசர், பகைவரைக் கொன்று முரசறைவது போல, அலைகள் பெரும் ஒலிகளை எழுப்புகின்ற கடலில் விளையாடும் பெண்கள், தாங்கள் சூடிய மலரை வீசியெறிகிறார்கள். அதனைப் பசி தீரப் பசு உண்ணும்! இசை நிறைந்த மாலைநேரக் கடற்கரை எழில்நகரான ‘மாந்தை’ போன்ற மாதரசியான எம் தலைவியை நீ விரும்பாவிடில், உன்னால் இழந்த அவளது நலனை நீ திருப்பித் தந்துவிட்டுச் செல்!”

வளவன் அப்பாடலின் விளக்கம் சொன்ன மறுநொடியே, மாமன்னர் தம் அரியணையில் இருந்து எழுந்து நின்று கரவொலி எழுப்பினார்.

“பலே வளவா! பலே!... உன் தமிழ்ப் புலமையும், இதனை எழுதிய புலவரின் சொற்கட்டும், மொழி ஆளுமையும் என் நெஞ்சை அள்ளுகிறது. ‘அழகிய தமிழ் மகளை நீ விரும்பாவிடில் அவளது நலனை அழியாமல் திருப்பித் தந்துவிட்டுச் செல்’ என்பதில் எத்துணை அக்கறையையும் கவலையையும் காட்டுகிறார் இப்புலவர்! நீ நண்பனா பகைவனா எனக் கேள்வி எழுப்பித் திணறடிக்கும் இப்பாடலில், தலைவன், தலைவி, புலவர் ஆகிய மூவருக்கும் இடையில் முடியுடைய வேந்தனான என்னையும் இணைத்து முத்தமிழில் விளையாடி இருக்கிறாரே இப்புலவர்! அருமை! அருமை!” புகழ்ந்துரைத்த பேரரசர், தம் கரத்திலேந்திய ஓலை மீது மீண்டும் பார்வையைப் பதித்தார். இம்முறை அந்த வரிகளை அவர் தனக்குள் அல்லாமல், தமிழ்ச் சபை அறியச் சத்தமாய் படித்தார்.


“யாரை எலுவ? யாரே நீ எனக்கு?
யாரையும் அல்லை நொதும லாளனை!
அனைத்தாற் கொண்க எம்மிடையே நினைப்பின்
கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் குட்டுவன்
வேந்தடு களத்தின் முரசதிர்ந் தன்ன
ஓங்கல் புணரி பாய்ந்தாடு மகளிர்
அணிந்திடு பல்பூ மரீஇ ஆர்ந்த
ஆபுலம் புகுதரு பேரிசை மாலைக்
கடல்கெழு மாந்தை அன்னஎம்

வேட்டனை அல்லையால், நலந்தந்து சென்மே”

—சேர மாமன்னர் செப்பிய பாடலைக் கேட்டதும், தேனடையில் அப்பிய ஈக்களின் ரீங்காரம் போல், கூப்பிய கரங்களுடன் நின்றிருந்த ஆன்றோர் கூட்டம் ஆர்ப்பரித்தது.

வாழ்த்தொலி அடங்க வெகுநேரம் பிடித்தது!

அரங்கம் அதிரப் பொற்குவையை வளவனின்



கரம் பிடித்தது!

“இப்போது சொல் வளவா! இளவரசன் அனுப்பிய செய்தி என்ன?”

“இதோ அரசே!” பணிவுடன் தன் கரத்திலிருந்த ஓலையை எடுத்து நீட்டினான். மலையன் அவ்வோலையைப் பெற்றுச் சென்று சேரமானிடம் தந்தான்.

செங்குட்டுவர் ஓலையின் மீது பார்வையைப் பதித்தார்.

‘நானூறு வீரருடன் ஒரு நாவாய் வேண்டும்! நானும் வரலாற்றில் இடம்பெற வேண்டும்! நாற்புறமும் விற்கொடி பறக்க வேண்டும்! நான் புறப்படத் தந்தை ஆசி வேண்டும்!’ —நான்கு வரிகளில் இருந்த அந்த ஓலையைத் திரும்பத் திரும்பத் தனக்குள் வாசித்தார் மாமன்னர்.

“என் மகன் தமிழ்ப் புலமை பெறவேண்டும் என்பதற்காகத்தான் முசிறியில் தங்க வைத்தேன். ஆனால் அவன் கடல் நடுவே கண்காணாத் தொலைவுக்குப் பயணப்படத் துடிக்கிறான். என்ன காரணம் வளவா?” செங்குட்டுவர் முகத்தில் சிந்தனைக் கீற்றுகள் ஓடின.

“மன்னிக்க வேண்டும் அரசே! விவரம் இன்னதென்று இதுவரை நானும் அறியேன்!”

உடனே புலவர் இளங்கீரனார் எழுந்தார்.

“படைநிலா இலங்கு கடல் மருள் தானை மட்டவிழ் தெரியல் மறப்போர்க்




குட்டுவன்’ என்று புலவர் பரணர் தங்களைப் பாடிப் புகழ்ந்திருக்கிறார். தந்தையைப் போல் தனயன் கடலோடக் கிளம்புவதில் வியப்பென்ன வேந்தே!” தன் மனதில் தோன்றியதை முன்வைத்தார் இளங்கீரனார்.

“என் மகன் தமிழன்னைக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதுதான் என் அவா! ஆனால் அவன் இந்தச் சேர மண்ணை விட்டு ஏன் நெடுந்தொலைவு செல்லத் துடிக்கிறான் என்ற வினா எழுகிறது. அதற்கான விடையைத் தமிழன்னையே தருவாள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!” என்றவர், சில நொடிகள் கண்களை மூடி எதையோ சிந்தனையில் ஓடவிட்டார்.

வானில் நிகழும் அதிசயத்தைக் காணும் ஆர்வத்துடன் அரசரைக் கூர்ந்தன அவையோரின் விழிகள்! சில நொடிகள் கழித்து செங்குட்டுவர் கண்மலர்ந்தார்.



"சரி, வில்லவன் கேட்டுக் கொண்டபடியே நானூறு வீரர்களுடன் ஒரு நாவாய் அனுப்பி வைக்கிறேன்! வளவா, உன் கடற்திறத்தை நான் நேரில் கண்டவன்! எனவே, தூதாக வந்த உன்னை அக்கப்பலின் தலைவனாகவும் நியமிக்கிறேன். மகிழ்ச்சிதானே?" மாமன்னர் சொன்னதைக் கேட்டு அவை ஆர்ப்பரித்தது.

வளவன் வார்த்தைகளற்று மகிழ்ச்சியில் மிதந்தான்.




'வளவா, தமிழரின் மானம் காக்கும் கடமை நமக்கிருக்கிறது. கரையினில் பறக்கும் நமது விற்கொடி, கடலிலும் பறக்க வேண்டும். தமிழ்க் கடலில் நாம் பாதுகாப்பு அரண் ஏற்படுத்த வேண்டும்!' இளவரசன் வில்லவன் அன்று சொன்ன வார்த்தைகள் வளவனுக்குள் ஓடியது.

தமிழுக்காகத் தாரைவார்க்கப்பட்ட ஒரு தவப்புதல்வனின் தூதுவனாக வந்ததற்கு பரிசாய், ஒரு புலவரின் வழித்தோன்றலாய், தமிழே வடிவான கவித்தாரகை ஒருத்தி கிடைத்திருக்கிறாள்! மாமன்னரோ தூது வந்தவனையே தலைவனாகவே நியமித்திருக்கிறார்!

'ஓலை தாங்கிய தூதுவனாக வந்த தன்னை நாயகனாக்கி விட்டதே தமிழ்!' என்ற சிந்தனை வளவனுக்குத் தித்தித்தது.

"இன்றிரவு அரண்மனையில் விருந்தினராகத் தங்கு! காலையில் நீ புறப்பட ஆவன செய்யப்படும்!" செங்குட்டுவர் வார்த்தைகள் கட்டளையாக இருந்தது.

"ஆகட்டும் அரசே!" வணங்கினான் வளவன். மெய்க்காப்பாளன் மலையன் வழிகாட்டியபடி வளவனை அழைத்துச் சென்றான்.

கன்னித் தமிழ் பெண்ணொருத்தி குலுங்கிச் சிரிப்பதுபோல, பொற்குவையின் தங்கக் காசுகள் குலுங்க நடந்தான் வளவன்.

'யாரே நீ எனக்கு?' என மலர்விழியின் பாட்டனார் தந்த ஓலையின் வினாவுக்கு விடை கிடைத்தது.

'நான் தமிழின் தூதுவன்! அத்துடன் தமிழே வடிவான கன்னியின் காதலன்' என்று மடல் எழுதி மலர்விழியின் கரங்களில் தரவேண்டும் என்ற எண்ணம் உந்தித் தள்ள, களிப்பில் உள்ளம் துள்ள நடந்தான் வளவன்.

* * * *

கதைக்கு விழுந்த விதை:

அம்மூவனார் பாடிய நற்றிணைப் பாடல் —395,

பரணர் பாடிய அகப்பாடல் —212.

பதிற்றுப் பத்தில் பரணர் பாடிய ஐந்தாம் பத்து.


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
புத்தாண்டு
வாழ்த்துக்கள் !
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்து

# நளின முடிவிலி

காற்று மொழி பெயர்க்கும்..
கடல் காற்று மொழி பெயர்க்கும்..
கூந்தல் அலைந்தவிழ்ந்து..
உன் கூந்தல் முகந்தவழ்ந்து..
கூறும் வார்த்தைகளை..
கூறாத வார்த்தைகளை..

வாங்கி மனம் குதிக்கும்..
உள்வாங்கி மனம் குதிக்கும்..
ஓரக் குறுஞ்சிரிப்பால்..
விழியோரக் குறுஞ்சிரிப்பால்..
ஈர்க்கும் உனையணைக்க..
உயிரீர்க்கும் உனையணைக்க..

தாவி அடம் பிடிக்கும்..
எனதாவி அடம் பிடிக்கும்..
மை கண்ணழகின்..
இமைக் கண்ணழகின்..
இடையில் தொலைந்துவிட..
மெல்லிடையில் தொலைந்துவிட..

வைக்கும் உன் நளினம்..
தீ வைக்கும் மென் நளினம்..
நீளும் முடிவிலியாய்..
கதி நீளும் முடிவிலியாய்..
தொடரும் எதுவரையும்..
பின் தொடரும் அதுவரையும்..
பிரியத் தோடென் வரியும்..

பிரியன்

# செந்தமிழின் சிறப்பு

பண்டு முதல் இன்றுவரை
உயர்ந்த மொழி தமிழ்
கண்டுபலர் சிரம்தாழ்த்தி
விண்டுரைத்தார் புகழ்
கண்டவரும் கேட்டவரும்
மகிழ்கின்றார் காண்
பண்டவரும் பல்லவரும்
சிறப்படைந்தார் தமிழால்தான்
நித்தம் நித்தம் விண்டுரைப்போம்
தமிழின் புகழை
சித்தமதில் மகிழ்ந்திடுவோம்
அத்தமிழின் எழிலை
பசுந்தமிழ் செந்தமிழ்
பைந்தமிழ் தீந்தமிழ்
இசையுரு பொருளெல்லாம்
குறிப்பது தமிழையே
சிறந்த புலவர்களின்
எண்ணிக்கை கணக்கிலடங்கா
நிறைந்தபொருள் கொண்டவர்
தம்கவிதை வியப்பிலடங்கா
பசுந்தமிழ் உலகினில்
பலகலை உயரவே
பழியறப் படித்திடு
பாங்குடன் வாழவே
செந்தமிழ் நாட்டினில்
செயல்படு உயரவே
செழிப்புடன் வாழ்ந்திடு
சிந்தனை பெருகவே
கேளீர் கேளீர் செந்தமிழின்
சிறப்பை யெல்லாம்
வாரீர் வாரீர்
அழகுதமிழ் மொழியைக்
கற்றுணர!

சரஸ்வதி ராசேந்திரன்

# கடைக்குட்டியின் கண்ணீர்

மரத்தை கடக்கையில்
போகிற போக்கில்
ஒரு தளிர் இலையை
ஒடித்துவிட்டு போவோர்
கவனத்திற்கு

நீங்கள் ஒடித்தது
அந்த கிளையின்
கடைக்குட்டியாக இருக்கலாம்

காற்றைக் கடிக்கப் பழகும்
கிளையின் பால் பல்லாக இருக்கலாம்
அந்த மரத்தின்
ஒரு சொட்டு புன்னகையாக இருக்கலாம்
கிளையின் காதுகளின்
மரகதத் தோடாக இருக்கலாம்

கைக்கு எட்டும் உயரத்தில்
வளர்ந்த அந்த
தாழ்ந்த கிளை மீது
நீங்கள் நிகழ்த்திய
ஆணவக் கொலையாக இருக்கலாம்

அந்த மரம்,
பச்சயம் சேமிக்க
காற்றில் தோண்டிய
பச்சைக் குழியாக இருக்கலாம்

இயற்கையின் சட்டத்தில்
நீங்கள் செய்தது
வன்கொடுமைகளின்
வரிசையில் இருக்கலாம்

சரி...
மன்னிப்பு வேண்டுமாயின்,
இன்றே ஒரு மரம் நடுங்கள்
அதில் துளிர்விடும் இலை நுனியில் வழியும்
மழைத்துளிகளால்
துடைக்கப்படலாம் உங்கள் பாவ அழுக்கு

**அ.க.இராஜாராமன்**

## கனவு

நீங்காது படரும்
நினைவின் ரேகைகளில்
தெரிவது எதுவும் இன்றுமில்லை
அன்றுமிருந்திருக்காது

நிகழ்கனவே
இன்றும்
புள்ளிசை
அன்றும்
தளர்தசையே
காலத்தின்
தடயம் என்றும்

அழிதழலில்
கரையும்
பதர்நெல்லென
இருப்பின் நிழல்
இருந்திருக்கலாம்
ஒருவேளை
அந்தக் கனவும் அதனை சுமந்தவளும்

**பிரேமா ரேவதி**



## ‘சர்வம் சுரபி மயம்’ ! செம சான்ஸ்!

பாண்டிராஜ் தயாரித்திருக்கும் ‘செம’, புதுமுக இயக்குநரின் ‘அடங்காதே’, படத்தில் நாயகியாகிறார் சுரபி. மற்றும் ‘4ஜி’, ‘அய்ங்கரன்’, நடன இயக்குநர் பாபா பஸ்கர் இயக்கத்தில் உருவாகியிருக்கும் ‘குப்பத்துராஜா’ ஆகிய படங்கள் அடுத்தடுத்து வெளிவரவுள்ளன. அதேபோல் ராஜீவ் மேனன் இயக்கும் ‘சர்வம் தாள மயம்’ மற்றும் ‘100% காதல்’ போன்ற படங்களின் படப்பிடிப்பும் நடைபெற்று வருகிறது. நாச்சியார் வெற்றியால் இந்த படங்கள் நன்றாக விற்பனையாகுமென இந்தப் படங்களின் மீதும் எதிர்பார்ப்பு கூடியிருக்கிறது!

## ஆர்ய காந்த்!! அதிரும் கஜினி!

அடல்ட் காமெடி வகையில் எடுக்கப்பட்ட கவுதம் கார்த்தி நடிப்பில் வெளியாகி வெற்றியடைந்த படம் ‘ஹர ஹர மஹாதேவகி’. இந்தத் திரைப்படத்தை சந்தோஷ் ஜெயகுமார் என்ற புதுமுக இயக்குநர் டைரக்ட் செய்தார். அதே நிறுவனத்திற்கு மேலும் இரண்டு திரைப்படங்களை இயக்க ஒப்பந்தமாகியுள்ளார் சந்தோஷ். ஆர்யா நடிக்கும் படம் ‘கஜினிகாந்த்.’ இதில் ஞாபக மறதிமிக்க நபராக நடிக்கும் ஆர்யாவுக்கு, சாயிஷா ஜோடியாக நடிக்கிறார். இந்த இரண்டு படங்களையும் மிகக் குறைந்த நாட்களில் படமாக்கியுள்ள இயக்குநர், வெறும் 70 நாட்களில் இரண்டு படங்களின் ஷூட்டிங்கையும் முடித்திருக்கிறார். இந்த இரண்டு படங்களையும் 14 நாட்கள் இடைவெளியில் வெளியிட திட்டமிட்டிருக்கின்றனர்.



## கடைக்குட்டி சிங்கமாச்சு!

**“காந்த்”மான பொண்ணு!**

**விசுவாசம் வெளிப்படட்டும்!**

‘அதிகாரம் ஒன்று’ திரைப்படத்திற்குப் பிறகு, கார்த்தி நடிக்கும் படம் “கடைக்குட்டி சிங்கம்”. இப்படத்தை இயக்குநர் பாண்டிராஜ் டைரக்ட் செய்கிறார். முதல்முறையாக தம்பி நடிக்கும் திரைப்படத்தை தன்னுடைய 2டி நிறுவனம் மூலமாக தயாரிக்கிறார் சூர்யா. விவசாயத்தை மையமாக வைத்து உருவாகியிருக்கும் இந்தப் படம் பலரை விவசாயத்தின் பக்கமாக ஈர்க்கும் என்கிறார்கள் படக்குழுவினர். இந்தப் படத்தில் கார்த்தியின் அப்பாவாக சத்யராஜும் கதாநாயகிகளாக சாய்ஷா, பிரியா பவானி சங்கர் ஆகியோரும் நடிக்கின்றனர்.




## மண்ணும் மனிதனும் சார்ந்த பதிவுகளை

### 43. நிறைவான பயணம் !

நாள்: மே 10, 2004 . மதியம் 1 மணி.

இடம்: குடியரசுத்தலைவர் மாளிகை, புது தில்லி.

“ஊரணிக்கு உயிர் கொடுப்போம்!”



அந்த ஒரு வரியைச் சொல்லிவிட்டு “இதை அப்படியே எழுதுங்க சார்!” என்கிறார் மேதகு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்.




அவர் கூறிய அந்த ஒற்றைவரியை அப்படியே ஒருதாளில் எழுதுகிறேன்.

“இந்த அடிப்படையில் உங்களால் முடிந்தளவு ஏதாவது செய்யுங்கள்! அது ஒரு குளத்தையோ ஊரணியையோ நீங்களே இறங்கி சுத்தப்படுத்துவதாகவோ அல்லது அதற்கு தூண்டுகோலாகும் பிரசாரமாகவோ இருக்கலாம். செய்வீர்களா?” என்கிறார்.

“நிச்சயமாக செய்கிறேன்! என்னால் முடிந்தளவுக்கு செய்கிறேன் ஐயா!” என்கிறேன் நான்.

நான் அவருக்கு வழங்கிய கவிதைக்குப் பதில் கவிதை தந்து பெருமைப் படுத்திய அந்தப் பெருமகனார் விடைபெறும் போது, மறக்காமல் அதை மீண்டும் நினைவுப்படுத்தும் விதமாக “செய்வீர்கள் தானே?” எனப் புன்னகையுடன் வினவுகிறார்.

“நிச்சயமாக!” என மீண்டும் வாக்கு கொடுக்கிறேன்.

# நினைவு...

## 43 கொற்றவன்

### பகிர்வுகளாய் முன்வைக்கும் பயணத் தொடர்!

அன்று கொடுத்த வாக்கை என்னால் முடிந்தளவுக்கேனும் செய்தாக வேண்டுமே என்ற எண்ணம் அவ்வப்போது உந்தித் தள்ளிக் கொண்டேயிருந்ததன் விளைவுதான்... தமிழகம் தழுவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடைப்பயணம்!

61 நாட்கள்... 2005 கி.மீ தூரம்... என நீண்டு நிறைவுற்றிருக்கிறது இப்பயணம்!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புது அனுபவம்தான்! எவ்வித பொருளாதாரப் பின்புலமும் இல்லாமல் தங்குவதற்கான இடம்,



மேதகு குடியரசுத் தலைவர் அவர்களை சந்தித்தபோது...

உணவு, முன்திட்டமிடப்பட்ட கூட்டங்கள் என எதுவும் இல்லாமல் துவங்கப்பட்டது இப்பயணம்!

ஆனால் இப்பயணத்தை துவங்கியது முதற்கொண்டு நிறைவு செய்தது வரை 'நல்லோர் வட்டம்' திரு. பாரதி பாலு ஐயா அவர்கள் காட்டிய ஆர்வமும் உதவியும் போற்றுதலுக்குரியது! என் மனத்தோடு இப்பயணத்தில் நெருங்கியிருந்து அவ்வப்போது உரையாடி, ஊக்கமளித்ததோடு மட்டுமல்லாமல், நாங்கள் சென்னை வந்து சேர்ந்ததை 'அதிரடி சேவை' விழாவோடு சேர்த்து எங்களையும் பெருமைப்படுத்தியிருக்கிறார்.

'இம்மண்ணுக்கு ஏதேனும் ஒருவகையில்

தொண்டாற்றுபவர்களை மக்கள் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டும்! இவ்விதமான சக்திதான் இந்த பாரத தேசத்தை உயரத்துக்கும் உன்னதமான இடத்துக்கும் கொண்டு செல்லும்!' என்று தொடர்ந்து முழங்கியபடியும் இருக்கிறார் திரு. பாரதி பாலு ஐயா அவர்கள்.



எனவே என் மட்டில் நான்கு பேரை இப்பயணத்தின் வேராகவும் என் நன்றிக்குரியோர்களாகவும் குறிப்பிட வேண்டுமானால், இப்பயணத்துக்கு வித்திட்ட மேதகு கலாம் அவர்களையும் 'நல்லோர் வட்டம்' பாரதிபாலு அவர்களையும், என்னுடன் இணைந்து இப்பயணத்தை உயிர்ப்புடன் வைத்திருந்த நண்பர்கள் பழனிச்சாமி மற்றும் இராஜன் போன்றோர்களையும்தான் குறிப்பிட வேண்டும்!

இந்த நேரத்தில் என் ஒவ்வொரு மணித்துளியிலும் இப்பயணம் முழுவதும் ஏதோவொரு வகையில் இணைந்து இடமும், பொருளும், உணவும், இன்னும்பிற வகையிலான உதவிகளுடன் இணைந்து, இப்பயணத்துக்கு முன் நான் சந்தித்திராத, இப்பயணத்தில் மட்டுமே சந்தித்த அற்புத மனிதர்கள் ஒவ்வொருவரையும் நான் நன்றியுடன் பாதம் தொட்டு வணங்கக் கடமைப்பட்டவனாகிறேன்.




கையில் காசில்லாமல் ஒரு வேலை உணவு கிடைக்காதா என்று ஏங்கிய நேரத்தில் எதிர்பாராத வகையில் வந்துதவியவர்கள்...

தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைக்காதா என ஏங்கிய நேரத்தில் தாகம் தீர்க்க நீண்ட கைகள்...

இன்று இரவு எங்கே தங்குவது என்ற குழப்பத்துடன் நடந்து களைத்த எங்களுக்கு 'இங்கே தங்கிக் கொள்ளுங்கள்!...' என இடமளித்த விரிந்த இதயங்கள்.....

வழிநெடுக நாங்கள் சந்தித்த வாஞ்சைமிகு உள்ளங்கள்...

இவையாவும் இறைவனின் திருவுருவங்கள் அன்றி வேறென்னவாக இருக்கமுடியும்?

அழைத்தவர் குரலுக்கு வருவதும், பார்ப்பவர் கண்களுக்குத் தெரிவதும் இறைவடிவம் என்கிறார்கள் ஞானிகள். அவ்விதமாக, ஏதேனும் வகையில் உதவியவர்களையும் அந்தத் தருணத்தில் எங்கள் முன் தோன்றிய கடவுளாகத்தான் கருதுகிறேன்!

இந்த நடைப்பயணத்தின் மூலம் மிகமுக்கியமான விழிப்புணர்வுச் செய்தியினைத் தமிழகம் முழுவதும் கொண்டு சென்றோம் என்றால், இப்பயணத்தின் மூலம் எங்களுக்கு கிட்டிய விழிப்புணர்வுச் செய்தியும் அதுவாகவே இருந்தது.

அதாவது நமது நீர்நிலைகளான ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஊரணிகள் எல்லாம் சரிவரப் பராமரிக்கப் படுமாயின், பருவமழை பொய்த்தாலும் கூட வளமான விவசாய பூமியாகவே தமிழகம் இருக்கும் என்பதையும், அண்டை மாநிலங்களிடத்தில் தண்ணீருக்காக நாம் கையேந்தும் நிலை வராது என்பதையும் உரக்கச் சொல்ல முடியும்.

காரணம் நம்மிடையே அவ்வளவு

ஏரிகள், குளங்கள் இருக்கின்றன. கொடுமை என்னவென்றால், இவை ஆண்டுதோறும் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. மேலும் அவை சரிவரப் பராமரிக்கப்படாமல் பாழ்பட்டும், ஆக்கிரமிப்புக்குள்ளாகியும் வருகின்றன. தமிழகம் முழுவதும் இந்தநிலையைக் காணமுடிகிறது.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின்.

அதாவது, 'மழை பெய்யாது போனால், இந்த உலகத்தில் பிறர்க்கு செய்யும் தானமும், நாம் செய்யும் தவமும் இல்லாது போகும்.' என்கிறார்.



நம் முன்னோர்கள் மிக நீண்ட தொலைநோக்குப் பார்வையுடன் தோற்றுவித்த ஏரி, குளம், ஆறுகள் இன்றைய சூழலில் சுயநலப்போக்குடனும் அறிவின்மையுடனும் நடந்துக்கொள்ளும் சிலரது நடவடிக்கையால், நம் எதிர்கால சந்ததியினரின் வாழ்வாதாரம் பெருத்த கேள்விக்குறியாகும் அபாயம் இருக்கிறது.

இக்காட்சியினை மிகுந்த வேதனையுடன் நாங்கள் ஆங்காங்கே காண நேரிட்டது.

அரசியல்வாதிகளில் சிலரும் பெரும்புள்ளிகள் சிலரும் அரசு அதிகாரிகளில் சிலரும் கூட்டாகச் சேர்ந்து நம் அன்னை பூமியை மலடாக்கும் வேலைகளைத் தீவிரமாகச் செய்து வருகிறார்கள்!

மன்னராட்சிக் காலத்தில் நமது நீராதாரங்களைச் சேதப்படுத்துவோருக்கு கடுமையான தண்டனைகள் தருவதற்கு சட்டம் இயற்றி வைத்திருந்தனைக் கல்வெட்டுகள் பல காட்டுகின்றன.

ஆனால் மக்களாட்சி நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் அரசியல்வாதிகள், நமது நீராதாரங்களைக் காக்கும் பணியிலிருந்து வழுவி ஏரி, குளங்களைக் கபளீகரம் செய்து விடுகிறார்கள்.

உலகப் பொது மறையாம் நம் தமிழ்மறை வள்ளுவம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு செப்புகிறது.




அப்படிப்பட்ட வான்மழையைச் சேகரிக்கும் ஏரி, குளம், ஆறுகளைக் காக்க வேண்டிய பொறுப்பு நம் கையில் அல்லவா இருக்கிறது.

ஆனால் இன்றையச் சூழலில் தமிழக நீராதாரங்கள் மீது சுயநலவாதிகள் மிகப் பேரும் சுரண்டல் போரை நிகழ்த்தி வருகிறார்கள். இதே நிலை நீடிக்குமாயின் இன்னும் 50, 60, ஆண்டுகளில் தமிழகம் கடும் வறட்சி நிலைக்குச் சென்றுவிடும்! தமிழகத்தின் உணவுத் தேவை மட்டுமல்ல உணர்வுத் தேவைகளுமே கூட தறிகெட்டுப் போகும்!

ஊருக்கு அறிவுரை செய்த தமிழன் அறிவு பிறழ்ந்து அல்லாடுகிற ஒரு இழிவு நிலை நமக்கு தண்ணீரால் ஏற்படும்! தமிழகத்தின் எதிர்காலத்தைக் கண்ணீரால் எழுதும் நிலை ஏற்படும்!

தமிழ்ப்பெரும் மூதாட்டி ஔவை பிராட்டி அழகாகச் சொல்லிய ஒற்றை வார்த்தை....

'வரப்புயர...'

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட



அந்த ஒற்றை வார்த்தையின் விரிபொருள், நீரின் அடிப்படையில்தான் மனித வாழ்வே இருக்கிறது என்பதாகும்!

வான்புகழ் வள்ளுவமும் 'நீரின்றி அமையாது உலகு!' என்று நம் பொட்டிலறைகிறது.

எதிர்காலத் தலைமுறையைக் கருத்தில் கொண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட தமிழரின் காலபெட்டகமான அந்த வார்த்தைகளை எல்லாம் ஏட்டளவில் தான் இன்றைய தமிழன் வைத்துக் கொண்டிருக்கிறானா? இயல்பு வாழ்வில் அவற்றைச் செயல்படுத்த ஏன் மறந்து போகிறான்?

காசு பணம் மட்டும் போதுமென்று காடு வயல்களை விற்றுவிட்டு, கடல் தாண்டி ஓடுகின்ற நிலை ஒருபுறம் என்றால்... தண்ணீர்த் தேவையை சமாளிக்க வழிவகை இருந்தும் தடுமாறி, தடம்மாறி இந்தத் தமிழ்ச் சமூகம் எங்கு சென்று கொண்டிருக்கிறது? இதுபோன்று இன்னும் பலப்பல கேள்விகள் தோன்றி ஆட்டுவித்த கொடுமையையும் முதுகில் சுமந்தபடிதான் இப்பயணம் தொடங்கியது.

நடைப்பயணம் நிறைவடைந்த பின்னும் இதுபோன்ற கேள்விகள்தான் என்னைத் துரத்துகிறது...




தன்னார்வத் தொண்டர்களும், தொலைநோக்குப் பார்வையுடன் நீராதாரம் காக்கப் புறப்படும் சமூக ஆர்வலர்களையும்தான் இதற்கானத் தீர்வை முன்னெடுக்க வேண்டும்!

இதையெல்லாம் செய்ய வேண்டியது அரசாங்கம்தானே என்று பந்தை அரசு எந்திரம் நோக்கி நாம் தட்டிவிடுவோமானால், சுவரில் பட்ட பந்தாகத் திரும்பி வந்து அது நம்மையே தாக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!

இழந்துவிட்ட நமது நீர்வளங்கள் போக இனி இருக்கின்ற நீர்நிலைகளாவது நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நெருக்கடியான காலகட்டத்தில் வந்து நிற்கிறோம் என்பதைத் தமிழர்கள் மட்டுமல்லாது, உலகெங்கும் தண்ணீர்த் தட்டுபாட்டில் இருக்கின்ற மக்கள் உணர்ந்து செயல்படவேண்டும்!

'என்னவளம் இல்லை இந்தத் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?' என்று 'விவசாயி' படத்தில் மக்கள்திலகம் பாடுவார்.

அது அன்றைக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் பொருந்தும்! நாம் நம் அண்டை மாநிலங்களிடம் தண்ணீருக்காக கையேந்தும் நிலையில் இருக்கிறோம். நமக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இந்நிலையில், இருக்கும் நீராதாரங்களைச் சரிவர பராமரித்து வந்தாலே போதும்! எதிர்காலச் சந்ததி நம்மை நன்றியோடு நினைவுக் கூறும்! தமிழ் மண் வளம் பெறும்! தமிழர் நிலையும் உயர்வு பெறும்!

'நாடென்ன செய்தது நமக்கு? என்ற கேள்விகள் கேட்பது எதற்கு?

நீயென்ன செய்தாய் அதற்கு? என நினைத்தால் நன்மை உனக்கு?" —இது மக்கள்திலகம் எம்.ஜி.ஆர்



படப்பாடல்! இப்பாடலை ஒவ்வொருவரும் நமக்குள் பாடிக் கொள்ளவேண்டும்!

நம் செயல்களை அலசி ஆராய்ந்தால் சிந்தை தெளிவுறும்!

நம் சிந்தை தெளிந்தால் செயல்கள் துணிவு பெறும்!

தெளிந்த சிந்தனையும் துணிந்த செயல்களும் வாழ்வுக்குப் பொலிவு தரும்!

இந்த நடைப்பயணம் என் மட்டில் எவ்வளவோ தெளிவும், துணிவும் தந்திருக்கிறது.

இந்தச் சமூகத்துக்கு நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாய் இருக்கிறது என்ற எண்ணத்தை விதைத்திருக்கிறது.

நாம் விரும்பியவற்றைச் செய்வதற்கு காலமும், இடமும், சூழலும் கைகொடுக்க வேண்டும்! என்றாலும் கூட நமது தொய்விலாத முயற்சியும் உழைப்பும், எல்லாவற்றையும் சாத்தியமாக்கி விடும் என்பதை இந்த நடைப்பயணம் எனக்கு அனுபவப் பாடமாகத் தந்திருக்கிறது.

எப்படி எனில், சிலநேரங்களில் காலையில் எழுந்து அமர்வதே தேகச்சிரமமாய் இருக்கும்போது, இன்றைய தினம் 30 முதல் 40 கி.மீ கடும் வெயிலில் நடக்கத்தான் போகிறோம் என்ற நினைப்பு பெரும் மன அயற்சியை தந்தாலும், அன்றைய நாளின் இரவு நான் நினைத்தபடியே அவ்வளவு தூரத்தைக் கடந்துதான் இருப்பேன்.

இது எதனடிப்படையில்? தொடர்ந்த பயணம்... தொய்வில்லாது நடை... இதன் காரணமாகத்தான் தொலைவுகள் சாத்தியமானது!

இப்பயணம் தண்ணீருக்காகத் துவங்கப்பட்டது என்றாலும், இதனை நான் ஊருக்காகவோ, மக்களுக்காகவோ நடந்தேன் என்று சொல்லி பிறரையும், என்னை நானேயும் ஏமாற்றிக் கொள்ள மாட்டேன்!

சொல்லும் சொல்லும் புகழ் மணக்கும் நிலமிது!

வெல்லும் தமிழ் மறவர் படை கடந்த நிலமிது!

என் தாய்த்திரு தமிழ் மண்ணில் நடந்ததையும், மக்களோடு கலந்துறவாடியதையும் இறைவன் எனக்கு அளித்த கொடையாகக் கருதுகிறேன்!




மனித வாழ்வை இனிமையானதாகவும், இன்னல்மயமானதாகவும் ஆக்கவல்ல மகத்தான சக்தி அவனது நினைவுகளுக்கு உண்டு!

தமிழகத்து நீர்வளங்கள் மீது நாம் செலுத்த வேண்டிய அக்கறையினையும், என் பாதையில் நான் கண்ட காட்சிகள் மற்றும் சம்பவங்களையும், நான் சந்தித்த நல்லுள்ளங்களையும் இத்தொடரில் பதிவு செய்ய வாய்ப்புக் கிட்டியதைக் காலம் எனக்குத் தந்த கொடையாக எண்ணுகிறேன்! இந்த நினைப்பில் பேருவகை எய்துகிறேன்!

நிறைவடைந்த இப்பயணத்தைப் பற்றி நினைக்க நினைக்க பக்கம் பக்கமாக எண்ணங்கள் எழுத்துகளாகி ஓடிக் கொண்டிருகிறது. கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கிறது.

இறுதியாக, உறுதியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ளவேண்டும்!

இப்பயணத்தில் எங்களுக்கு எதிர்பாராத வகையில் எதிர்ப்பட்டு உதவிய மனித தெய்வங்களுக்கு



மீண்டும் மீண்டும் எங்கள் பயணக்குழுவின் சார்பில் எனது சிரம்தாழ்ந்த வணக்கங்களையும் நன்றியையும் அவர்களது பாதத்தில் வைக்கிறேன்.

இப்பயணத்தில் நான் பார்த்த முகங்களை மீண்டும் என்வாழ்வில் என்று காண்பேன் என்று தெரியாது! மனிதநேயம் கொண்ட அந்தத் தெய்வங்களை மீண்டும் நான் காண்பேனா என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது!

எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் எங்களிடம் அன்பு காட்டி, ஆதரவு தந்த அந்த நல்லுள்ளங்களைப் போன்ற எத்துனையோ மனித தெய்வங்கள் இவ்வுலகத்தின் எல்லா மூலைகளிலும் உலவிக் கொண்டிருக்கின்றனர். அவர்களால்தான் இந்த பூமிப் பந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஆம்! நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு பெய்யும் மழை அல்லவா!

என் வாழ்வில் நடந்து போனதும், கடந்துபோனதுமான நாட்கள் அல்ல இவை. என் இறுதி மூச்சுவரை அந்த நாட்கள் ஏதேனும் பொழுதில் திடீரென மலையென உயர்ந்து எழும்! அப்போதெல்லாம் அங்கே இந்த அனுபவங்கள் அன்றலர்ந்த புதுமலராய் மணம் தரும்!




அம்மலர்களைத்தான் இதுகாறும் எழுத்து வடிவில் உங்கள் முன் வைத்திருக்கிறேன்.


இதனைக் கண்ணுறுவோரும் கையிலெடுப்போரும் தமிழகத்தின் நீர்... நிலம்... நினைவுகள்... குறித்து தங்கள் பங்குக்கு எள்முனை அளவேனும் அக்கறை கொள்வார்களானால் அதுவே இப்பயணத்தின் வெற்றியாகும்!

நீங்கா நினைவாக இருப்பது மட்டுமல்ல வாழ்தலின் அடையாளம்!

நீடித்த பயனை இம்மண்ணுக்கு வழங்குதலே வாழ்வின் பொருளாகும்!

வாழ்க வையகம்! வாழிய நற்றமிழர்!

(நிறைந்தது)



# புத்தக விமர்சனம்

## காலப் பெருவெளி (கவிதை தொகுப்பு)

**விலை : ரூ. *180***




**வெளியீடு:**

**தங்கமீன் பதிப்பகம்**

B1K 325B, #14-655


Sengkang East Way

Singapore - 542325

*மரபு மயங்கி நிற்க புதுக்கவிதை, நவீனக்கவிதை, பின் நவீனக் கவிதை எனக் கவிதையின் குழப்படிகள் வேறு, வேறு ஓசைகளை எழுப்பியபடியே வேகம் கொள்ளும் இத்தருணத்தில் வாசிப்பாளனோடு படைப்பவனும் தன்னுடைய படைப்பை அந்தந்தத் தளத்தில் கொண்டு நிறுத்த வேண்டியது இன்றைக்கு அவசியமாகிறது.*

*”காலப்பெருவெளி” என்ற இந்தத் தொகுப்பில் முப்பது கவிஞர்களின் எழுபது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. மாதந்தோறும் வாசகர் வட்டத்தில் கொடுக்கப்படும் கருவைக் கொண்டு எழுதப்பட்டு பரிசுக்குரியவைகளாகத் தேர்வான கவிதைகளின் தொகுப்பு தான் இந்நூல். புதிர்களை உள் நிறுத்துவதாய் காட்டி புரியாத் தன்மையோடு வாசகனை நகர்ந்து போகச் செய்யும் நவீனம் சாராமல் வரி விளையாட்டு, வார்த்தைத் திருகல் எதுவுமின்றி எளிமையான மொழியில் சம்பவங்களையும், காட்சிகளையும், நிகழ்வுகளையும் நேரடியாக விரித்துச் செல்லும் இக்கவிதைகள் ஒரு கருவை மட்டுமே மையமிட்டு எழுதியதால் அந்த மையத்திற்குள்ளேயே குவிந்து கிடந்தாலும் ஒட்டுமொத்தமாகத் தொகுப்பை வாசிக்கும் போது சில கவிதைகள் அந்த மையத்தைத் தாண்டியும் சமகால நிகழ்வுகளையும், சூழலையும் பேசுவதைக் காண முடிகிறது. ஈழம் சார்ந்த கவிஞர் யாழிசை மணிவண்ணனின் ”புலம் பெயர்தல்” என்ற கவிதையை உதாரணமாகச் சொல்லலாம்.*

*இத்தொகுப்பின் ஆக்கத்திலும், வடிவமைப்பிலும் சமரசமற்றிருந்த போதும் ஊர் கூடி தேர் இழுப்பதைப் போல படைத்தவர்களே பங்களிப்புச் செய்து இத்தொகுப்பை கொண்டு வந்திருப்பதால் ஒரு தொகுப்பு நூலுக்கான அத்தனை சமரசங்களையும் உள்ளடக்கிய தொகுப்பாய் மிளிர்கிறது.*




# கண்ணால் கண்டதும்...

சாந்தி நாதன்

"வசந்தி, என்ன வாசல் லைட் எரியலையே ராமு சாருக்கு போன் போட்டு சொன்னியா இல்லையா?" அலுவலகத்திலிருந்து வந்து காலணிகளைக் கழற்றிக் கொண்டே கேட்கும் கணவனை நோக்கி சலிப்பான குரலில், "சமையல் அறை குழாயில் தண்ணீர் லீக் ஆயிண்டேயிருக்கு, குழந்தைங்க அறை ஃபேன் சரியா ஓடாம சத்தம் போடறது. உங்களை அநாவசியமா தொல்லை பண்ண வேண்டாம்னு நானும் நாலு நாளா ராமு மாமாவுக்கு போன் செய்யறேன். இரண்டு தடவை அவர் மனைவி தான் எடுத்து, அவர் தூங்கறார்னு சொல்லி உடனே கட் பண்றா. காலை பத்து மணிக்கு என்ன தூக்கமோதெரியலை. மத்தியானத்துக்கு மேல பண்ணினா போன் சுவிட்ச் ஆப்னு வரது" என்றாள் வசந்தி.

"உடம்பு சரியில்லையோ என்னமோ, நாளைக்கு நானே அவர் கூட பேசறேன். இந்த வீட்டிற்கு வந்த புதுசில அப்பா வாக்கிங் போய் கீழே விழுந்த போது தவி□ச்சு நின்ன அம்மாவையும் அப்பாவையும் ஆட்டோவில் ஏத்தி பின்னாடியே தன் ஸ்கூட்டரில் வீடு வரை கொண்டு விட்டுட்டுப்போன அன்னையிலிருந்து இப்ப வரைக்கும் நாம எப்ப கூப்பிட்டாலும் கரெக்டா வந்து வேலையை கச்சிதமா முடிச்சு கொடுத்துண்டு இருக்கார். நீயும் குழந்தைகளும் தனியா இருக்கும் போது புது ஆளெல்லாம் கூப்பிடறது ரிஸ்க். சின்னச்சின்ன வேலைக்கெல்லாம் நம்பகமான ஆள் கிடைக்கிறதும் சிரமம்" சொல்லியவாறே சாப்பிட அமர்ந்தான் சீனிவாசன்.




"நானென்ன சொல்லிட்டேன்னு இவ்வளவு படபடக்கறீங்க? எனக்கும் அவர் அருமை தெரியாமலில்லை" சொன்னபடியே சாப்பாட்டு மேசையைச் சுத்தம் செய்தவள் தன் அபிமான சீரியலை பார்க்கத் தொலைக்காட்சியை உயிர்ப்பித்தாள்.

முதல் நாள் சொன்னது போல் மறுநாள் காலை ஆபீஸ் கிளம்பும் முன்னும் அங்கு சென்று வேலையைத் துவங்கும் முன்னும் பலமுறை ராமுவை தொடர்பு கொள்ள முயன்றும் இயலாத நிலையில் தன் பணிகளைப் பார்க்கத் துவங்கிய சீனிவாசன் வேலை மும்முரத்தில் அதை மறந்துவிட்டான்.

மாலை வீட்டிற்குள் நுழைந்தவன் போர்ட்டிகோவில் எரியும் விளக்கைப் பார்த்து ஆசுவாச மூச்சை விட்டவனாய், "என்னம்மா, சார் வந்து வேலையெல்லாம் பார்த்திருக்கார் போலிருக்கே" என்றான்.

“ஆமாம் வந்தார். வரும்போதே மணி பதினொண்ணு இருக்கும். கலைஞ்ச தலையும் சிவந்த கண்ணுமா ஆளே அடையாளம் தெரியாத மாதிரியிருக்கார். காபி வேணுமான்னு கேட்டதுக்கு பதிலா வேண்டாம்னு தலையாட்டியவர் மளமளன்னு குழாய் வேலைகளைப் பார்த்தார். நாலு மணிவாக்கில் அதை முடிச்சவர்,”எனக்கு நாழியாறது எலெக்டிரிக் வேலையெல்லாம் நாளைக்குதான்” அப்படீன்னார். கூடவே “இன்னி வேலைக்கு பேமெண்ட் கொடுத்துடுங்கன்னு தொகையை கேட்டு வாங்கிண்டார். அப்ப ஸ்கூல் விட்டு வந்த ரஞ்சித், ரம்யா ஹலோ சொன்னதைக்கூட கவனிக்காத மாதிரி வண்டிய கிளப்பிண்டு வேகமா போயிட்டார்.இதையெல்லாம் பார்க்கும் போது அவருக்கு எதாவது வேண்டாத பழக்கம் வந்திருக்குமோன்னு தோணறது”.மூச்சு விடாமல் பேசுபவளை முறைத்தான் சீனிவாசன்.

“போதும். சீரியல் பார்த்துப் பார்த்து உனக்கு கற்பனை கொடி கட்டிபறக்கறது போல. முதல்ல குடிக்க கொஞ்சம் தண்ணி கொடு” என்றான் வெறுப்போடு. மனைவியின் வார்த்தைகளை நம்பாத மாதிரி பேசினாலும் சீனிவாசனுக்கு மனதில் வசந்தி எல்லாவற்றையும் பெரிதுபடுத்திச் சொல்வாளே தவிர இல்லாததை சொல்லமாட்டாள் என்பது தெரிந்துதானிருந்தது. ஞாயிற்றுக் கிழமை அவரை நேரில் சென்று பார்த்துவிடவேண்டும் என்று முடிவெடுத்தான்.

சனிக்கிழமை வசந்தி குழந்தைகளுடன் ஷாப்பிங் சென்றுவிட்டு இரவு எட்டு மணிவாக்கில் திரும்பி வரும் போது சிக்னலுக்கு கார் நிற்கும் போது எதேச்சையாக எதிர்ப்புறம் பார்க்க, அங்கிருந்த ஒரு வணிக வளாகத்தில் இருந்த







பார்கடை வாசலில் இரு நபர்களோடு பேசிக்கொண்டு நிற்கும் ராமுவைப் பார்த்த சீனிவாசன் திடுக்கிட்டான். மற்றமூவரும் அவரைப் பார்க்கும் முன் வண்டியை கிளப்பியவன் ஐம்பது வயதுக்கு மேல் மனிதருக்கு புத்தி இப்படியா போகவேண்டும்? திருமணவயதில் பெண்ணை வைத்துக்கொண்டு இதென்ன புதுப்பழக்கம்? நாளைக்கு அவரைக்

கண்டிப்பாக பார்த்தே ஆகவேண்டும் எனத் தீர்மானித்தான்.

மறுநாள் காலை ராமுவின் வீட்டு வாசலில் காரை நிறுத்தியவன், அவர் வண்டி நிறுத்தியிருப்பதைக் கண்டு அவர் வீட்டில் இருப்பதைப் புரிந்து கொண்டு வாயிற்கதவை தட்டினான். சிறிது நேரந்தில் அவர் மனைவி கதவைத் திறந்து ஒரு நிமிட தயக்கத்துக்குப் பின் “வாங்கோ” என வரவேற்று ஹாலில் அமரவைத்தாள்.

அங்கே படித்துக்கொண்டிருந்த இளம்பெண்ணிடம் “என்ன சுதா பரிட்சை நெருங்கறது போலிருக்கே?” என்றான்.

“ஆமாம் இது ஃபனல் இயர் கொஞ்சம் பயமா இருக்கு. நான் போய் அப்பாவை எழுப்பிட்டு வரேன்” என்றபடியே சுதா உள்ளே நகர்ந்தாள்.



‘மனுசனுக்கு மணி பத்து ஆகியும் பொழுது விடியலை போலிருக்கு’ மனதில் பொருமிக் கொண்டே திரும்பியவன் உள்ளிருந்து “வாங்க சார், சொன்ன மாதிரி உங்க வீட்டுக்கு மறுநாள் வர முடியலை. நாளைக்கு கண்டிப்பா வந்து வேலையை முடிச்சுக் கொடுத்துடறேன்” சொன்னபடியே அருகில் அமரும் ராமுவைப் பார்த்து அதிர்ந்தான்.

இருவருக்கும் காபி கொண்டு வந்த அவர் மனைவியிடம் “என்னாச்சு இவருக்கு? ஆளே உருத்தெரியாமல் இருக்கார்? நீங்களும் ரொம்ப இளைச்சுப் போயிருக்கீங்க. உடம்புக்கு ஏதாவது முடியலையா” என்றான் சீனிவாசன்.

மனைவியை பதில் சொல்லவிடாமல் “உடம்பெல்லாம் நல்லாத்தானிருக்கு. கொஞ்சம் அலைச்சல் ஜாஸ்தி அவ்வளவுதான். உங்க அப்பா அம்மா எப்படியிருக்கா? தம்பி வீட்டிலிருந்து எப்ப வரா? காபி ஆறிப் போறது குடிங்க”




இருவரும் காபி குடித்து முடிக்கும் வரை நிலவிய மௌனத்தை கலைத்தான். “அப்படி என்ன சார் அலைச்சல்? ஏதாவது பெரிய காண்ட்ராக்ட் கிடைச்சிருக்கா?”

“என்னை நம்பி எவன் சார் பெரிய வேலையெல்லாம் தருவான்?” விரக்தியாக பதில் கொடுத்தவர் கண நேர தயக்கத்துக்குப் பின் “உங்ககிட்ட சொல்றதுக்கென்ன? எனக்கு மூத்தது ஒரு பையன். நம்ப மாதிரியில்லாம படிச்சு உயர்ந்த நிலைக்கு அவன் வரணும்னு ஹாஸ்டலோடு இருக்கற பெரிய பள்ளிக்கூடத்துல சேர்த்து படிக்க வைச்சேன். நல்லா படிச்சு எம்.சி.ஏ. முடிச்சான். வேலையும் நல்லபடியா கிடைச்சுது. ஏதோ தனியார் நிறுவனத்துல சுமார் சம்பளத்துல வேலைபார்த்து ரிடையரான நான், ஓய்வூதியத் தொகையோடு உங்களை மாதிரி தெரிஞ்சவங்க வீட்டுலயும் வேலை பார்த்து சம்பாதித்தாலும் சமாளிக்க முடியாம கடன் வாங்க வேண்டியதாச்சு. எங்க அம்மா வேற கீழ விழுந்து வைத்திய செலவும் அதிகப்படியா ஆயிடுத்து. பையன் நம்ப கஷ்டத்துல கைகொடுப்பான்னு நினைச்சதுக்கு மாறா வேலையில சேர்ந்த மறு மாசமே மாலையும் கழுத்துமா ஒரு பெண்ணோட வந்து நின்னான். ஏதோ அவனுக்கு பிடிச்சிருக்குன்னு நாங்க மனசை தேத்திண்டாலும் வந்தவ எங்ககூட இருக்கப் பிரியப்படாம பையனைக் கூட்டிண்டு போயிட்டா. வேலையை கூட வேற ஊருக்கு



மாத்திண்டு போயிட்டதா கேள்வி. இந்த நிலைமையில இருந்த சொற்ப நகைநட்டெல்லாம் வித்து முக்கால்வாசி கடனை கட்டிட்டேன். மீதிக்கடன், வீட்டுச் செலவு, நடமாட்டம் இல்லாம படுத்துக் கிடக்கற அம்மாவுக்கு மருத்துவம் எல்லாத்துக்கும் பணம் வேணுமே... அதுக்காக மெயின் ரோடுல இருக்கற ஷாப்பிங் செண்டர்ல நைட் செக்யூரிட்டியா வேலைக்குப் போறேன்."

"என்ன சார் இது? இந்த வயசில ராத்திரி நேர வேலையா?" அதிர்ச்சியாக கேட்பவனுக்கு பதிலாக, "ராத்திரி ட்யூட்டிக்கு சம்பளம் அதிகம். மாலை 7 மணியிலிருந்து காலை 7 மணி வரை வேலை பார்த்துட்டு வந்து கொஞ்ச நேரம் தூங்கி எழுந்து உங்களை மாதிரி பழகிய வீட்டு வேலைகளுக்குப் போக முடியறது." பேசி முடித்தவரை பார்த்து பிரமித்து அமர்ந்தவன் சிறிய மௌனத்துக்குப் பின் பேசினான்.

"சார் நான் வேணா உங்களுக்கு ஒரு எலெக்டிரிக் ஷாப் மாதிரி ஒண்ணு வைக்க உதவறேனே," சீனிவாசன் சொல்ல வந்ததை முடிப்பதற்குள், அவசரமாக மறுப்பது போல் தலையை ஆட்டியபடியே, "நீங்க இப்படிக் கேக்கறதே ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனா அதெல்லாம் இந்த வயசுக்கு மேல சரிவராது. என் மனைவிகூட ஏதாவது சமையல் வேலைக்குப் போறேங்கறா. ஆனா எங்க அம்மாவை விட்டுட்டு அதெல்லாம் முடியாதுன்னு சொல்லிட்டேன். இந்த வருடம் சுதாவோட படிப்பு முடிஞ்சுடும். ஏதாவது வேலைக்குப் போயிண்டே மேல படிக்கப் போறதா சொல்றா. இப்படியே நாலைஞ்சு வருடம் சமாளிச்சு பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிடணும். பார்ப்போம்".

மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாதவனாய் எழுந்த சீனிவாசன்,"சரி சார்! நான் கிளம்பறேன். என்னை




உங்க கூடப்பிறந்தவனா நினைச்சு எந்த சமயத்துல என்ன உதவி வேணுமுனாலும் தயங்காம கேளுங்க" என்றவன் வாயிலைநோக்கி நகர்ந்தான்.

கூடவே வந்த ராமு,"இப்போதைக்கு நான் ஒரு உதவி தான் கேட்பேன். நான் இரவுநேர வேலைக்குப் போறது அக்கம்பக்கம் யாருக்கும் தெரியாது. வாடகை கம்மி என்பதால ஒதுக்குப்புறமா அருகில் வீடுகள் இல்லாத இந்த இடத்தில மூணு பெண்களை பாதுகாப்பில்லாம விட்டுட்டு போகவேண்டியிருக்கு..."

"நீங்க சொல்லவரது புரியறது. நான் இதை யாருக்கும் சொல்லமாட்டேன்.

"காரை கிளப்பியவனுக்கு கையசைத்து விடை கொடுத்தவரை "நேற்று ஒரு நிமிடம் பார்த்த காட்சியை வைத்து இந்த நல்ல மனிதரை தவறாக எடை போட்ட தன் எண்ணத்தை நினைத்து அவரிடம் மானசீகமாக மன்னிப்பு வேண்டினான்.

# அறிவோம் தமிழர்


## நூற்றாண்டு காணும் தாகூரின் தமிழகப் பயணம்

மகாகவி பாரதி இறப்பதற்குச் சில நாட்கள் முன் 'ஸ்ரீரவீந்திர திக்விஜயம்' என்னும் கட்டுரையைச் 'சுதேசமித்திரன்' நாளிதழில் எழுதியிருந்தார். ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்ற தாகூர் அங்கெல் லாம் பெற்ற பெருவரவேற்பைக் கொண்டாடி எழுதிய எழுத்தோவியம் அது. கண்காணா நாடுகளுக்கு விஜயம் செய்து வெற்றிக்கொடி நாட்டிய தாகூரின் பயணங்களைப் பற்றி எழுதிய பாரதி, தன் கண்காண நடந்த பயணத்தைப் பற்றி ஏதும் எழுதியதாகத் தெரியவில்லை.

அந்தப் பயணம், பாரதி கைதாகி விடுதலை பெற்ற பிறகு முதன்முறையாகச் சென்னை வந்து தங்கியிருந்த 1919 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடந்த தாகூரின் தமிழகப் பயணமாகும். இது, பாரதியின் தாய்மண்ணில் அவன் அறிந்து நிகழ்ந்த 'ரவீந்திர திக்விஜயம்' ஆகும். இந்தப் பயணத்தைப் பற்றி 'சுதேசமித்திரன்' இதழில் தொடர்ச்சி யாகச் செய்திகள் வெளிவந்தன.

### இலையுதிர் காலத்தின் பாடல்கள்


1919 பிப்ரவரியில் தமிழகம் வந்த தாகூர், திருச்சி, தஞ்சை, கும்பகோணம், மதுரை, சென்னை முதலிய நகரங்களுக்குப் பயணம் செய்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கூடிய கூட்டங்களிலும், மாணவர்கள் கூடிய கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றினார். அவருடைய இந்தப் பயணங்களின் முக்கிய நோக்கம் 'சாந்தி நிகேத'னுக்கு நிதி திரட்டுதல். அந்த நோக்கம் மிகச் சிறப்பாகவே நிறைவேறியது. ஒவ்வொரு நிகழ்ச்சியின் நிறைவிலும் தாகூருக்கு அவர் மகிழும்வண்ணம் பணப்பை கொடுக்கப்பட்டது.






# பெருமை

ய.மணிகண்டன்





திருச்சியில் செயின்ட் ஜோசப் கல்லூரியின் 'லாலி ஹாலில்' பிப்ரவரி 10—ம் தேதி ஆயிரக்கணக்கான மாணவர்கள், நகரவாசிகள் முன்னிலையில் 'இந்திய வனங்கள் ஒரு படிப்பினை' என்னும் பொருளில் உரையாற்றினார். பிப்ர வரி 13—ல் 'லாலி ஹா'லில் மாணவர்கள் முன் இலையுதிர் கால வைபவத்தைப் பற்றியும், தேசியக் கல்வியைப் பற்றி யும் பேசினார். இலையுதிர்கால வைபவம் பற்றிப் பேசுகையில் தான் எழுதிய நாடகத்தை, பாடல்களை அவர் வாசித்துக் காட்டினார். தாகூரோடு பயணம் செய்துவந்த சி.எஃப்.ஆண்ட்ரூஸ் 'சாந்தி நிகேத'னைப் பற்றிய சொற்பொழிவுகளை திருச்சி, மதுரை முதலிய இடங்களில் ஆற்றினார்.

ஸ்ரீரங்கத்துக்கு வருகைதந்த தாகூர் அங்கு நடந்த தெப்ப உற்சவத்தைக் கண்டு மகிழ்ந்தார். கோயிலையும், வாணிவிலாச அச்சுக்கூடத்தையும் பார்வையிட்டார். 'இந்திய வனங்கள் ஒரு படிப்பினை' என்னும் பொருளில் அங்கே பேசினார். அவரின் வருகையை ஒட்டி 'ஹிந்து மெஸேஜ்' என்ற பத்திரிகை தாகூரின் படத்துடன் சிறப்பு வெளியீடு ஒன்றைப் பிரசுரம் செய்திருந்தது.

இடையில் பிப்ரவரி 12—ல் தஞ்சைக்கு வந்த தாகூர், ஆண்ட்ரூஸ் முதலியவர்களை ரயில் நிலையத்தில் தஞ்சைவாசிகள் வரவேற்றனர். வடவாற்றங்கரையில் இருந்த 'ஸ்வீட்ஹோம்' என்னும் வி.ஏ.வாண்டையாரின் பங்களாவில் அவர் தங்கினார். அரசாங்க போதனாமுறைப் பள்ளிக்குச் சென்றார். அங்கே அவரது 'சித்ரா' என்ற நாடகம் நடிக்கப்பட்டதைப் பார்வையிட்டார். பெசன்ட் லாட்ஜ் சென்ற அவரை 'பிரகன் நாயகி ஸ்திரீகள் சங்க' த்தின் உறுப்பினர்கள் வரவேற்றனர். ஸ்ரீகிருஷ்ண லீலா தியேட்டரில் 'காடுகளிலிருந்து படிப்பினை' என்னும் பொருளில் பேசினார். அதைக் கேட்க மூவாயிரம் பேர் வந்திருந்தனராம்.

பிப்ரவரி 14—ம் தேதி மதுரைக்குத் தாகூர்





வந்திறங்கினார். மாணவர்களும் ஜார்ஜ் ஜோசப் உள்ளிட்ட நகரப் பிரமுகர்களும் வரவேற்றனர். மாலையில் அமெரிக்கன் கல்லூரி அரங்கில் ‘காடுகளிலிருந்து நாம் தெரிந்துகொள்வது’ என்னும் பொருளில் பேசினார். கல்லூரி முதல்வர் ரெவரண்ட் ஸம்பூரூ, ராமநாதபுரம் ராஜா முதலிய பெருமக்களும் கூடியிருந்தனர்.

சென்னையில் தாகூர்

திருச்சி, மதுரைப் பயணங்களை அடுத்து சென்னைக்கு வந்த அவர், மயிலாப்பூர் வக்கீல் டி.எஸ்.இராமசாமி இல்லத்தில் தங்கினார். இதனை அன்னி பெசன்ட்டின் ‘நியூ இந்தியா’ உள்ளிட்ட பத்திரிகைகள் பதிவுசெய்துள்ளன. மார்ச் 10, 11, 12 ஆகிய தேதிகளில் ‘கோகலே அரங்’கில் பேசத் திட்டமிட்டார். 10—ம் தேதி ‘கல்வியின் லட்சியங்கள்’ என்னும் தலைப்பில் கோகலே அரங்கில் தமது உரையஒன்றை வாசித்தார்.


ஜஸ்டிஸ் டி.வி.சேஷகிரி ஐயர், ஜஸ்டிஸ் டி. சதாசிவய்யர், ஸர் பி.எஸ்.சிவஸ்வாமி ஐயர், பி.வி. நரஸிம்மய்யர், டாக்டர் லாஸரஸ், மிஸஸ் லாஸரஸ், ‘தி இந்து’ஆசிரியர் கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலிய பிரமுகர் களெல்லாம் அந்நிகழ்ச்சிக்கு வருகைதந்திருந்தனர். அந்த உரையில், நம்முடைய கல்விமுறையில் உள்ள குறையையும், தாய்மொழிக் கல்வியின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.




11—ம் தேதி ‘வனங்கள் நமக்கு அளிக்கும் போதனை’ என்ற பொருள் பற்றிப் பேசினார். காடுகள் குறித்து ராமாயணம், காளிதாசனின் நாடகங்கள் முதலியவற்றில் உள்ள செய்திகளை எடுத்துக்காட்டினார். நமது இலக்கியங்களில் வர்ணிக்கப்பட்டிருப்பதைப் போல மேனாட்டுக் கவிகளின் நூல்களில்கூடக் காணப்படவில்லை என்றார். உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் சமத்துவம் என்ற லட்சியமே இந்தியாவுக்குக் கதி மோட்சத்தை அளிக்கும் என்று குறிப்பிட்டார். இந்தச் சொற்பொழிவுக்கும் சென்னை நகரின் பிரபல உத்யோகஸ்தர்களும் கல்விமான்களும் அநேக பெண்களும் வருகைதந்திருந்தனராம்.

தாகூரின் சொற்பொழிவுகள் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு நடந்தன. பெரும்பாலும் அவரது சொற்பொழிவுகள் தேசியக் கல்வி, காடுகள் தரும் படிப்பினை என்னும் பொருளிலேயே நிகழ்ந்தன. சென்னையில் ஆரிய கான சபையாரும், சுகுணவிலாச சபையாரும் தங்கள் நாடகங்களைத் தாகூரின் முன்னிலையில் நடத்தி, வசூலா கும் பணத்தைத் தாகூருக்குச் சமர்ப்பித்தனர். ஆரியகான சபையார் ‘லலிதாங்கி’ என்ற நாடகத்தை நடத்தியபோது, தாகூர் அந்த நிகழ்ச்சிக்கு வருகைதந்திருந்தார்.

சென்னையில் மாணவர்களும் பொதுமக்களும் கேட்டுக்கொண்டதன் பேரில், சில தினங்கள் கூடுதலாகத் தங்க தாகூர் திட்டமிட்டார். ‘வனங்கள் நமக்கு அளிக்கும் போதனை’ என்னும் பொருளில் சென்னை மாநிலக் கல்லூரியில் 13—ம் தேதியும், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் 14—ம் தேதியும், பச்சையப்பன் கல்லூரியில் 15—ம் தேதியும் பேசுவதாக அறிவிக்கப்பட்டது. 16—ம் தேதி ஒரு பொது உபந்யாசத்துக்கும் ஏற்பாடு



செய்யப்பட்டிருந்தது. 14—ம் தேதி கிறித்தவக் கல்லூரி, சட்டக் கல்லூரி களுக்கு தாகூர் விஜயம் செய்தார். அக்கல்லூரிகளின் மாணவர்கள் பாராட்டு மடல்களைச் சமர்ப்பித்தனர்.

இந்நிலையில், மார்ச் 14—ம் தேதி சுதேசமித்திரன் பத்திரிகையில் ஓர் அறிவிப்பு வந்தது. மதுரை முதலிய இடங்களுக்குச் சென்றுவந்ததால் தாகூருக்கு இன்புளூயன்ஸா காய்ச்சல் கடுமையாய்க் கண்டிருப்பதாகவும் அறையைவிட்டு வெளியே செல்லக்கூடாதென மருத்துவர் கள் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டதாகவும் அதனால் சில நாட்கள் அவர் சொற்பொழிவு ஏதும் செய்ய மாட்டார் எனவும் அந்த அறிவிப்பு தெரிவித்தது.

தாகூரும் பாரதியும்

தாகூர் சென்னையிலிருந்த காலங்களில், பரலி சு.நெல்லையப்பரால் 'தமிழ்நாட்டு ரவீந்திரநாதர்' என்று குறிப்பிடப்பட்ட பாரதியும் சென்னையில்தான் இருந்தார். அதே நாட்களில் நுழைவுக் கட்டணம் வைத்தும் வைக்காமலும் பாரதியும் வேறு கூட்டங்களில் பேசினார். அதே காலகட்டத்தில் சென்னை வந்த காந்தியைச் சந்திக்க ஆசைப்பட்டுச் சந்தித்த பாரதி, தாகூரைச் சந்தித்ததாக எந்த வரலாற்றுக் குறிப்பும் கிடைக்கவில்லை.

தன்னை ஒத்த நவயுகக் கவியும் தன் படைப்புகளை மொழிபெயர்த்தவருமான பாரதியைச் சந்திக்கத் தாகூரோ, தான் மிகவும் கொண்டாடிய தாகூரைச் சந்திக்க பாரதியோ முயன்றதாகத் தெரியவில்லை.

ஆனால், தாகூரைச் சந்திக்க ஒரு மாபெரும் தமிழ் ஆளுமை விரும்பி, அவர் தங்கியிருந்த மயிலாப்பூர் இல்லத்துக்குச் சென்றார். சந்திக்கச் சென்றவர் சேகரித்து வைத்திருந்த பழங்காலச் சுவடிகளைக் காண்பதற்காக அன்று மாலையே திருவல்லிக்கேணியில் இருந்த அவரது இல்லத்துக்குத் தாகூர் வருகைதந்தார். அவரைப் போற்றி ஒரு பாடலும் புனைந்தார். 'முந்தைய யுக இருளில் பனையோலைச் சுவடிகளில் மறைந்து கிடந்த திராவிட நாட்டின் கீர்த்தி உன்னாலன்றோ வெளிப்பட்டது' என்று பாராட்டினார். தமிழக விஜயத்தின்போது தாகூரைச் சந்திக்க விரும்பிய, தாகூர் வந்து சந்தித்த தமிழ் ஆளுமை பழந் தமிழின் மகத்தான பிரதிநிதி உ.வே.சா.




ஓர் ஆறுதலான செய்தி. தாகூரும் பாரதியும் நேரில் சந்திக்கவில்லையாயினும், ஓர் இடத்தில் மட்டும் ஒன்றா கத் தலைகாட்டியுள்ளனர். அது மார்ச் 11—ம் தேதி சுதேசமித்திரன் இதழ்ப் பதிவு. அதில் ஒரே பக்கத்தில் 10—ம் தேதி பேசிய தாகூரின் சொற்பொழிவும், ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதியால் மொழிபெயர்க்கப்பட்ட தாகூரின் 'பஞ்ச வியாசங்கள்' நூலின் விளம்பரமும் இடம்பெற்றிருந்தன. தமிழகப் பயணத்தின்போது தாகூரிடத்தில் எவரேனும் சொல்லியிருப்பார்களா அவரது பஞ்ச வியாசங்களை மொழிபெயர்த்தவர் என்ற அளவிலேனும் பாரதியைப் பற்றி? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.






## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# பிரயாணம் 18

கார்த்திகை மாதத்தில் ஒருநாள் மாலை நேரத்தில் காஞ்சியிலிருந்து சிதம்பரம் போகும் சாலையில் கூண்டு இல்லாத இரட்டை மாட்டு வண்டி ஒன்று போய்க் கொண்டிருந்தது. அதில் சிவகாமியும் அவளுடைய அத்தையும் உட்கார்ந்திருந்தார்கள். வண்டிக்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் ரதி துள்ளி விளையாடிக் கொண்டும் ஆங்காங்கே சாலைக்குப் பக்கங்களிலே முளைத்திருந்த புல்லை மேய்ந்து கொண்டும் வந்தது. சுகப்பிரம்ம ரிஷி ஒவ்வொரு சமயம் ரதியின் முதுகின் மேல் உட்கார்ந்தும், சில சமயம் சிவகாமியின் தோளின் மேல் உட்கார்ந்தும், சில சமயம் வண்டிக்கு மேலாகப் பறந்தும் ஆனந்தமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பின்னால் இன்னும் சற்றுத் தூரத்தில் புத்த பிக்ஷுவும் ஆயனச் சிற்பியாரும் பேசிக் கொண்டு நடந்து வந்தார்கள்.




அந்த வருஷம் ஐப்பசி மாதத்திலேயே மழை பிடித்துக் கொண்டு பதினைந்து நாட்கள் வரையில் விடாமல் பொழிந்தது. அதன் காரணமாக, ஏரிகள், குளங்கள் எல்லாம் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்தன. சாலை ஓரத்தில் ஓடைகளில் தண்ணீர் அலைகள் மோதிக் கொண்டிருந்தன. ஆறுகள் வாய்க்கால்களில் இரு கரையையும் தொட்டுக்கொண்டு பிரவாகம் ஓடிக் கொண்டிருந்தது.




நன்செய் வயல்களில் இரண்டாம் போகத்து வேளாண்மை அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தது. புன்செய்க் காடுகளில் கம்பும் கேழ்வரகும் செழித்து வளர்ந்திருந்தன. சாலையின் இரு புறத்திலும் வளர்ந்திருந்த மரங்களும் ஆங்காங்கே வயல்களுக்கிடையே காணப்பட்ட தென்னந்தோப்பும் வாழைத் தோட்டங்களும் கண்ணைக் குளிர்விக்கும் காட்சியளித்தன. பெரு மழை விட்டுப் பல நாள் ஆகிவிட்டதாயினும், வானத்தில் இப்போதும் மேகத்திரள்கள் காணப்பட்டன. இவை இடையில் தங்குவதற்கு நேரமில்லாத நெடுந்தூரப் பிரயாணிகளைப்போல் ஆகாயத்தில் அதிவேகமாகப் பிரயாணம் செய்தன. சில சமயம் நீர்த்துளிகளை அள்ளித் தெளித்துவிட்டுச் சிதறி மறைந்தன.

நீர் நிலைகளின்மீது தவழ்ந்தும், பசுமையான தோப்புக்களில் புகுந்தும், மழைத்துளிகளை அளாவியும் வந்துகொண்டிருந்த குளிர்ந்த வாடைக் காற்று உடம்பின்மீது பட்டபோது, துணியை இழுத்துப் போர்த்திக்கொள்ளத் தோன்றியது. ஆயினும் அது அபூர்வமான சுகத்தை அளித்தது. அந்தக் குளிர்ந்த வாடைக் காற்றில் அடிபட்டதனால் பட்சிகளுக்குக்கூடத் தொண்டை கட்டிக்கொண்டது போல் தோன்றியது. சாதாரணமாய், 'கலகல' என்றும் 'கிளுகிளு' என்றும் கேட்கும் புள்ளினங்களின் குரல் ஒலியில் இப்போது 'கரகரப்பு'ச் சத்தம் கலந்திருந்தது.

வண்டியில் அத்தைக்கும் மருமகளுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

“இன்றைக்கு மழை பெய்யுமா சிவகாமி?” என்று அத்தை கேட்டாள்.




"மலையா? எங்கே இருக்கிறது?" என்றாள் சிவகாமி.

"ஆமாம்; மழையைக் கண்டால் மயிலுக்குக் கொண்டாட்டந்தான்!" என்றாள் அத்தை.

"மாலையில் வெயில் அடித்தால் கொண்டாட்டத்துக்கு என்ன குறைவு?" என்றாள் சிவகாமி.

"என்ன சொன்னாய்?" என்றாள் அத்தை.

"என்ன கேட்டீர்கள்?" என்றாள் சிவகாமி.

கொஞ்சம் செவிமந்தமுள்ள அத்தைக்குப் பேசுவதிலே அதிகப் பிரியம். எனவே, அவ்வப்போது சிவகாமியிடம் ஏதாவது கேட்டுக்கொண்டும் சொல்லிக்கொண்டும் வருவாள். கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சிவகாமி அத்தையின் பேச்சுக்களை மனத்தில் வாங்கிக் கொள்ளாமலேயே ஏதாவது பொருத்தமில்லாத மறுமொழி சொல்லுவாள். அது காதில் நன்றாய் விழாமல் அத்தை வேறு ஒன்றைக் கூறுவாள். இதே ரீதியில் அவர்களுடைய பிரயாணம் நடந்து கொண்டிருந்தது. காஞ்சியிலிருந்து ஏறக்குறைய ஆறு காத தூரம் அவர்கள் பிரயாணம் செய்திருந்தார்கள்.



மாரிக் காலத்து மாலைப் பொழுதில் வெளி உலகமானது எவ்வளவுக்குக் குளிர்ந்திருந்ததோ அவ்வளவுக்குச் சிவகாமியின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. அதில் எரிமலை நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தது. கொழுந்து விட்டெரியும் ஜ்வாலைகளுடனே அக்கினி ஆறு பிரவகித்துக் கொண்டிருந்தது. மாமல்லரைப்பற்றி நாகநந்தி பிக்ஷு கூறிய விஷயங்கள் அவளுடைய மனத்தில் அத்தகைய பிரளயக் குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தன.

நம் அன்புக்குரியவர்களைப் பற்றி சாதாரணமாக ஏதேனும் கெடுதலான விஷயத்தைக் கேள்விப்பட்டால் நம் உள்ளம் சுலபத்தில் நம்புவதில்லை. 'அப்படியெல்லாம் இராது' என்று மனத்தைத் திருப்தி செய்து கொள்கிறோம். அவதூறு சொல்கிறவர்களிடம் சண்டை பிடிக்கவும் ஆயத்தமாயிருக்கிறோம்.

ஆனால், எக்காரணத்தினாலாவது நமக்கு வேண்டியவர்களிடம் குற்றம் இருக்கிறதென்று நம்பும்படி நேர்ந்துவிட்டால் உள்ளத்தில் கோபம் கொழுந்துவிட்டெரியத் தொடங்குகிறது. வேண்டியவர்கள் மீது மட்டுமல்ல; உலகத்தின் மேலேயே கோபம் கொள்ளுகிறோம். இந்த மனித இயற்கை, காதலர்களின் விஷயத்தில் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகிறது.




காதலன் எவனும் தன்னுடைய காதலியைச் சாதாரண மானிடப் பெண்ணாகக் கருதுவதில்லை. தெய்வப் பிறவி என்றே கருதுகிறான். தேவலோகத்தில் அமிர்தபானம் செய்து கொண்டு ஆனந்த அமர வாழ்க்கை நடத்த வேண்டியவள் தன் பேரில் கொண்ட அன்பினாலேயே இந்தப் பூலோகத்திலே வாழ்ந்து வருவதாகக் கருதுகிறான்.

காதலியோ, குழந்தைப் பிராயத்திலிருந்து தன் மனத்தில் தானே சிருஷ்டி செய்து கொண்டிருந்த இலட்சிய புருஷனுக்குரிய சகல உத்தம குணங்களையும் காதலன் மீது ஏற்றி அவனைக் குற்றங்குறையில்லாத தெய்வீகப் புருஷனாகவே எண்ணிக்கொள்கிறாள்.






ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்படும்போது மகத்தான ஏமாற்றம் உண்டாகி விடுகிறது. மலையின் சிகரத்திலிருந்து திடீரென்று அதல பாதாளத்தில் விழுகிறவர்களைப்போல் ஆகிவிடுகிறார்கள்.

சிவகாமி தன் இருதயத்தில் ஓர் அற்புதமான திருக்கோயிலை அமைத்து, அதிலே மாமல்ல நரசிம்மரைத் தெய்வங்களுக்கெல்லாம் மேலான பரதெய்வமாகப் பிரதிஷ்டை செய்திருந்தாள். நாகநந்தி கூறிய நஞ்சு தோய்ந்த வார்த்தைகளினால் அந்தத் திருக்கோயில் ஒரு நொடியில் இடிந்து தகர்ந்து விழுந்துவிட்டது! அதிலே பிரதிஷ்டை செய்திருந்த தெய்வச் சிலையும் விழுந்து நொறுங்கிப் பொடிப் பொடியாய்ப் போய் விட்டது.

குமார சக்கரவர்த்தியைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறு அவ்வளவு சாமர்த்தியமாகவும் நம்பும்படியாகவும் அமைந்திருந்தது. சிவகாமி அவர் கூறியது அவ்வளவையும் அப்படியே நம்பி விட்டாள். இராஜ்யத்திலே அவ்வளவு பெரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது, மாமல்லர் காஞ்சிக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருப்பதற்கு வேறு காரணம் என்ன இருக்க முடியும்?

போர்க்களத்திலே பரஞ்சோதியின் வீரதீரச் செயல்களைப் பற்றிய வரலாறுகள் காற்றிலே மிதந்து ஆயனரும் சிவகாமியும் வசித்த காட்டுக்குள்ளேகூட எட்டியிருந்தன. அதெல்லாம் உண்மை என்பதைப் பரஞ்சோதியை நேரிலே பார்த்த சிவகாமி தெரிந்துகொண்டிருந்தாள். தமிழ் படிக்கவும் சிற்பம் கற்கவும் வந்த பட்டிக்காட்டுப் பிள்ளை இப்போது பெரிய தளபதி ஆகிவிட்டான். அரங்கேற்றத்தன்று அவன் யானைமீது வேல் எறிந்து தங்களைக் காப்பாற்றிய சம்பவமும் சிவகாமியின் உள்ளத்தில் அழியாதபடி பதிந்திருந்தது. பரஞ்சோதியின் வீர வாழ்க்கையோடு மாமல்லர் கோட்டைக்குள்ளே ஒளிந்திருந்ததை ஒப்பிட்டுப் பார்த்து மாமல்லரைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்று நாடு நகரமெல்லாம் அழைப்பதில் வியப்பில்லை என்று சிவகாமி எண்ணினாள். இதனால், நாகநந்தியின்

(சபதம் தொடரும்)




வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

ஒரு விஷயத்தில் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு, அதையொட்டிய இன்னொன்றிலும் நம்பிக்கை பிறப்பது இயல்பேயல்லவா? எனவே, மாமல்லரை 'ஸ்திரீ லோலன்' என்று நாகநந்தி கூறியதிலும் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. வீர மன்னர்களுக்குப் பிறந்த தூர்த்தர்களான இராஜ குமாரர்களைப் பற்றி அவள் கதைகளிலே கேள்விப்பட்டதுண்டு. மாமல்லர் அவர்களிலே ஒருவர் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை. ஆனால், அதுவும் உண்மையாகத் தான் இருக்கவேண்டும் என்று இப்போது தோன்றியது. ஆகா! மாய வார்த்தை பேசி ஏழைப் பெண்ணைக் கெடுப்பதிலே அவர் கைதேர்ந்தவராயிருக்க வேண்டும்! கள்ளங் கபடமறியாத தன்னிடம் என்னவெல்லாம் சொல்லி ஏமாற்றினார்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்திலேயே தன்னை ஏற்றிவைத்து விடுகிறவர்போல் அல்லவா பசப்பினார்! புருஷர்கள்தான் எவ்வளவு நயவஞ்சகர்கள்! அதிலும் இராஜகுலத்தவர் எப்பேர்ப்பட்ட ஈவிரக்கமில்லாத கிராதகர்கள்!

வ ழி பிரயாணத்தின்போது இந்த மாதிரி எண்ணங்கள் சிவகாமியின் உள்ளத்தில் அடிக்கடி தோன்றி நரகவேதனையளித்தன. சில சமயம் அவளுக்குத் தன்னுடைய மனோராஜ்யத்தில் ஆசையுடன் நிர்மாணித்து வந்த இன்ப வாழ்க்கையாகிய கோட்டை இடிந்து தூளாகிவிட்டபடியால், இனிமேல் தன் வாழ்க்கை என்றென்றைக்கும் சோகமயமாகவே இருக்கும் என்று தோன்றியது.

மாரிக்காலத்தின் முடிவில் வானத்தில் சிதறி ஓடிய மேகங்கள் சில மழைத்துளிகளை உதிர்த்துவிட்டுப் போகும் போது தன்னுடைய கதிக்காக உலகமே கண்ணீர் வடிப்பதாக அவள் எண்ணினாள். இந்த ஒரு வாழ்க்கை மட்டுமல்ல; இதற்கு முன்னர் எத்தனை எத்தனையோ ஜன்ம ஜன்மாந்திரங்களிலும் தன்னுடைய வாழ்க்கை இப்படியே சோகமயமாயிருந்ததாகத் தோன்றியது.

ஆனால், இரவில் எங்கேயாவது தங்கியிருந்து விட்டுக் காலையில் மறுபடியும் பிரயாணம்



தொடங்கும் போது ஜகஜ்ஜோதியாகச் சூரியன் உதயமாகி மரக்கிளையில் தங்கியிருக்கும் நீர்த்துளிகளை வைரமணிகளாக ஒளி வீசச் செய்யும் காட்சியைப் பார்த்துவிட்டுச் சிவகாமி சிறிது உற்சாகம் கொள்வாள்.

மாமல்ல நரசிம்மர் பயங்கொள்ளி, தூர்த்தர் என்று ஏற்பட்டதன் பொருட்டுத் தன் வாழ்க்கையை எதற்காகப் பாழாக்கிக் கொள்ளவேண்டும் என்று கருதுவாள். உலகம் எவ்வளவோ விஸ்தாரமானது. பல்லவ இராஜ்யத்துக்கு அப்பாலும் உலகம் இருக்கத்தானே செய்கிறது? தன்னிடம் அற்புதமான நாட்டியக் கலையும் இருக்கிறதல்லவா? அந்தக் கலையைப் பார்த்து அனுபவித்து ஆனந்தமடைய நாகநந்தி சொல்வதுபோல், உலகம் காத்திருக்கிறதல்லவா? எதற்காகத் தன் வாழ்க்கை பாழாகிவிட்டதாக எண்ணிக் கொள்ள வேண்டும்?... இவ்விதம் எண்ணிச் சிவகாமி உற்சாகம் அடையப் பார்ப்பாள். தூர தூர தேசங்களிலே, பெரிய பெரிய சபைகளிலே தான் நாட்டியம் ஆடுவதுபோலவும், கணக்கற்ற ஜனங்கள் கண்டு களித்துத் தன்னைப் பாராட்டி உபசரிப்பது போலவும் கற்பனை செய்துகொண்டு களிப்புறுவாள்.




இத்தகைய மனோபாவத்துடனேயே சிவகாமி தன் தந்தையைப் பெரிதும் வற்புறுத்தி நாகநந்தி பிக்ஷுவின் யோசனையை ஒப்புக்கொள்ளச் செய்தாள். அதன் பேரிலே தான் இந்தப் பிரயாணம் அவர்கள் தொடங்கினார்கள்.

ஆனால், என்னதான் மனத்தை வேறு விஷயங்களில் செலுத்திப் பார்த்தாலும், எவ்வளவுதான் பிரயத்தனம் செய்து உற்சாகம் கொள்ளப் பார்த்தாலும், சாத்தியமாயில்லை. அவ்வப்போது குமுறிக் கொண்டுவந்த வேதனை உணர்ச்சியை மாற்ற முடியவில்லை. பொங்கியெழுந்த ஆத்திரத் தீயை அணைக்க முடியவில்லை. முக்கியமாக, அந்தி மயங்கி நாற்புறமும் இருள் சூழ்ந்து வந்த நேரங்களில் சிவகாமியினுடைய உள்ளத்தில் வேதனையும் துயரமும் பெருகி அவளைச் சோகக் கடலில் மூழ்கச் செய்தன.

அன்று சாயங்காலம் அவ்வாறு சோகத்தில் ஆழ்ந்த உள்ளத்துடன் சிவகாமி கட்டை வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, அவளுடைய நினைவை வேறு பக்கம் திருப்பும்படியான சம்பவம் ஒன்று நேர்ந்தது.

சாலையில் அவர்களுக்கெதிரே ஒரு பெரும்படை வந்து கொண்டிருக்கிறதென்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன. சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை, பேரிகை, எக்காளம், சமுத்திரகோஷம் முதலிய வாத்தியங்களில் பேரொலியும், அநேக குதிரைகளும் மனிதர்களும் நடந்துவரும் காலடிச் சத்தமும், போர் வீரர்களுடைய பேச்சுச் சத்தமும், போர் முழக்கங்களின் கோஷமும் கலந்த பேரிரைச்சல் நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் சைனியத்தின் முன்னணிப் படைவீரர்கள் அவர்களின் கண்ணுக்குத் தென்படலாயினர்.

(சபதம் தொடரும்)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
புத்தாண்டு
வாழ்த்துக்கள் !
புத்தாண்டில் புதுமைகள்
தொடரட்டும்
மாற்றங்கள் மலரட்டும்
இன்னிசை முழங்கட்டும்
எல்லோர் வாழ்விலும்
மகிழ்ச்சி நிலைக்கட்டும்

கட்டுரை


# பிரவகிக்கும்

வெள்ளமாகப் பெருகப்போகும் தண்ணீர்ப் பிரச்சினை!

குன்றா வளர்ச்சிக்குத் தண்ணீர் இன்றியமையாதது என்பதற்காக, இயற்கையைச் சார்ந்த தீர்வுகள் பல 2030—ம் ஆண்டுக்கான செயல்திட்டமாக உருவாக்கப்படுகின்றன. தண்ணீர் தொடர்பான நம்முடைய பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் இதில் கொள்கைகளும் இலக்குகளும் இடம்பெறும். இப்போதைக்குப் பிரச்சினையைக் கவனிப்போம், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற அணுகுமுறை இனியும் பலன் தராது.

தொடர் உணவுதானிய உற்பத்தி, மனிதர்களின் புறந்தள்ள முடியாதவை. 2017—ல் 760 கோடியாக உள்ள மக்கள்தொகை 2050—ல் 940 கோடி முதல் 1,020 கோடியாக உயர வாய்ப்பிருக்கிறது. இதில் மூன்றில் இரண்டு பங்கினர் நகர்ப்புறங்களில் வசிக்கப்போகின்றனர். இந்த வளர்ச்சியில் பாதிக்கும் மேல் ஆப்பிரிக்கா (130 கோடி) ஆசியா (75 கோடி) கண்டங்களில் இருக்கும். வளரும் நாடுகளிலும் வளரும் பொருளாதாரங்களிலும்தான் தண்ணீர் தேவை அதிகரிக்கப் போகிறது.

பருவநிலை மாறுதலால் உலக தண்ணீர் சுழற்சியும் மாறுகிறது. மழை அதிகம் பெய்யும் பகுதிகளில் மேலும் அதிகமாகவும், மழை குறைவாகப் பெய்யும் பகுதிகளில் மேலும்




குடியிருப்புகளில் மேம்பாடு, எட்டும் தொலைவில் குடிநீர் —சுகாதார வசதிகள், தண்ணீர் தொடர்பான இடர்கள் ஏற்படாமல் தவிர்த்தல், பருவநிலை மாற்றத்தால் நீராதாரங்களில் ஏற்படும் மாற்றங்களைச் சீரமைத்தல் ஆகியவைதான் தீர்வுகளாக இருக்கும்.




தண்ணீர் தொடர்பான சவால்கள் குறைவாகவும் பெய்யப்போகிறது. ஆண்டில் ஒரு மாதம் தண்ணீரே கிடைக்காத பகுதிகளில் 360 கோடிப் பேர் வாழ்கின்றனர். 2050—ல் இந்த எண்ணிக்கை 480 கோடி முதல் 570 கோடி வரை அதிகரிக்கும். இப்போது அன்றாடம் 680 பில்லியன் கன மீட்டராக இருக்கும் தண்ணீர்த் தேவை 2025—ல் 833 பில்லியன் கன மீட்டராகவும் 2050—ல் 900 பில்லியன் கன மீட்டராகவும் உயரும். ஏற்கெனவே தண்ணீர்ப் பற்றாக்குறையால் தவிக்கும் நாடுகள், 2050—ல் மேலும் நெருக்கடியில் சிக்கும். ஆசியாவில் இந்தியா அதிக நெருக்கடியைச் சந்திக்கப்போகிறது. பெரும்பாலான நீர்நிலை கள் பெரு நகரங்கள், சிறு நகரங்களுக்கு அருகில் —




# பிரச்சனை


ஜெயகுமார் ராமசாமி

அதிலும் மாசடைந்த நிலையில் — உள்ளன. மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர்ப் பிரச்சினைகள் எண்ணிக்கையில் அதிகமாகவும் தீவிரமாகவும் பெருகிவருகின்றன.

தண்ணீர்ப் பற்றாக்குறை மட்டும் பிரச்சினையல்ல, கிடைக்கும் தண்ணீரும் தரமற்றதாக உள்ளது. 1990—கள் தொடங்கி ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களில் பெரும்பாலான ஆறுகளில் நகரங்களின் சாக்கடைகள், ஆலைகளின் ரசாயனக் கழிவு கள் கலந்து மாசுபட்டுவருகின்றன. நகரக் கழிவுகளும் ஆலைக் கழிவுகளும் சுத்திகரிக்கப்படாமலேயே 80% அளவுக்கு ஆறுகளில் கலக்க விடப்படுகிறது. இந்த நீரைக் குடிக்கும் மனிதர்களை மட்டுமல்லாமல் சுற்றுப்புறச் சூழல்களை யும் மாசடைந்த நீர் கெடுத்துக்கொண்டிருக் கிறது. நதிகள் மாநிலங்களுக்கிடையே பாய்வதால், நதியைத் தூய்மைப்படுத்த பிராந்திய அளவில் ஒத்துழைப்பு அவசியப்படுகிறது.

இந்தியாவில் மாநிலங்களுக்கு இடையே பாயும் ஆறுகளில் பாதிக்கும் மேல் மாசடைந்துவிட்டன என்று மத்திய சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவிக்கிறது. சிறியதும், பெரியதுமான 650 நகரங்களின் கழிவுநீர், 302 ஆறுகளைப் பாழாக்கிக்கொண்டிருக்கிறது. 2009—ல் ஒரு நாளைக்கு 3,80,000 லட்சம் லிட்டர் என்ற அளவில் கலந்த சாக்கடை நீர் 2015—ல் 6,20,000 லட்சம் லிட்டர் என்று உயர்ந்திருக்கிறது. மாநிலங்களுக்கிடையில் பாயும் 40 ஆறுகளில் 16 இவற்றால் மாசடைந்திருக்கிறது. இயற்கையிலான வழிமுறைகளில்தான் நதிகளைத் தூய்மைப்படுத்த முடியும். சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் முறைகள் இதில் முக்கியம். இது பயிர்வாரி முறை, பருப்பு சாகுபடி, உயிரி பூச்சிக் கொல்லிகளை மட்டும் பயன்படுத்துவது போன்றவற்றால் மட்டுமே சாத்தியம். இயற்கை சார்ந்த விவசாயத்தில் நில






அரிமானம், தண்ணீர் மாசுபடுதல், தண்ணீர் வீணாகுதல் அனைத்தும் கட்டுப்படும்.

தண்ணீரைச் சுத்தப்படுத்த வடிநிலங்களை அதிகப்படுத்துவதும் பலன் தரும். கழிவுநீரைச் சுத்தப்படுத்தி மறு பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தால், நகரங்களைச் சுற்றி தோட்டங்களை யும் மரங்களையும் வளர்த்து சூழலைப் பசுமையாக்கலாம், காற்றையும் தூய்மைப்படுத்தலாம். நீர் மேலாண்மைத் திட்டம் இதில் முக்கியமானது. இது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், வேலைவாய்ப்பையும் பெருக்கும், பல்லுயிர்ப் பெருக்கத்தையும் அதிகரிக்கும். வெப்பம் அதிகமாக பருவநிலை மாறுவதையும் குறைக்க உதவும். இயற்கையான தீர்வுகள் என்பவை பாரம் பரியமானவை, உள்ளூர் தொழில்நுட்பத்தை, உள்ளூர் மக்களின் அனுபவ அறிவைக் கொண்டே எளிதில் செயல்படுத்தக் கூடியவை. ஆறுகள் பாயும் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், பழங்குடிகள், மீனவர்கள் இதில் முக்கியப் பங்காற்ற முடியும்.

இயற்கை எப்படிப் புறக்கணிக்கப்பட்டு, தண்ணீர் மேலாண்மைச் சீர்கேடு அடைந்தது என்பதற்கு தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை நல்ல உதாரணம். திட்டமிடப்படாத நகர்ப்புற வளர்ச்சியும்,நீர் நிர்வாகத்திட்டம்எதுவும்கையாளப் படாததும் நகரைத் தண்ணீர் பற்றாக் குறையின்போதும், தண்ணீர் (மழை நீர்) உபரியின்போதும் கடுமையாகப் பாதித்துவருகிறது. சென்னை மாநகரம் திட்டமிடப்படாத வகையில் வளர அனுமதிக்கப்படுவதற்கு முன்னால், நகருக்குள்ளும் நகரைச் சுற்றியும் குளங்கள், குட்டைகள், ஏரிகள், வாய்க்கால்கள், சதுப்பு நிலங்கள், ஆறுகள் ஏராளமாக இருந்தன. நீர்ப்பெருக்கு அதிகரித்தாலும் அது குளங்கள், குட்டைகள், ஏரிகளை நிறைத்துவிட்டு, வாய்க்கால்கள் வழியாக வடிந்து உபரிநீர் மட்டும் கடலில் கலந்துவிடும்.




இதில் பெரும்பாலான நீர்நிலைகள் பராமரிக்கப்படாமல் தூர்ந்துபோனதாலும், நீர்வழிகளை மறித்து வீடுகளையும் கட்டுமானங்களையும் கட்டியதாலும், மழை நீர் பெருக்கெடுத்தபோது ஓட இடம் இல்லாமல் ஆங்காங்கே ஆக்கிரமிப்பாக முளைத்த குடியிருப்புகளைச் சூழ்ந்து தேங்கத் தொடங்கியது. இதுதான் சென்னையின் வரலாறு காணாத வெள்ளத்துக்கு முக்கியக் காரணம். சென்னையில் கூவம், அடையாறு, பக்கிங்காம், கொற்றலையாறு என்று ஆறுகள் இருந்தாலும், அவற்றின் கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டு, வண்டல் படியவிடப்பட்டது. எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும் வாங்கும் திறன் படைத்த பள்ளிக்கரணை சதுப்பு நிலம் அடையாளம் தெரியாமல் சுருங்கிவிட்டது.

இயற்கைப் பேரிடர்களுக்குக் காரணம், இயற்கையின் வழிகளைச் செயற்கையாக நாம் அடைப்பதுதான். திட்டமிடப்படாத நகர்ப்புற வளர்ச்சி, நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, நீர்நிலைகளை முறையாகப் பராமரிக்கத் தவறியமை போன்ற காரணங்களால் வெள்ளம் ஏற்பட்டது. வறட்சிக் காலத்தில் நிலத்தடி நீரும் ஆழத்துக் குச் சென்றுவிட்டதால், கடல்நீர் உட்புகுந்து குடிநீரின் சுவையும் தரமும் குறைந்துவிட்டது.


தமிழில்: ஜூரி

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.




*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!




தொடர்புகளுக்கு

editor@ithamil.com




## அயோடின் பற்றாக்குறை எனும் அபாயம் !

உணவில் அயோடின் சத்து குறைந்தால் அது நரம்புகளைப் பாதிக்கும், உளவியல்ரீதியிலான வளர்ச்சியும் பாதிக்கப்படும். எனவே, கருவுறும் தாய்மார்களும் கர்ப்பிணிகளும் உணவில் அயோடினைத் தவறாமல் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். அயோடின் சத்துக் குறைவால் ஆண்டுதோறும் 1.9 கோடிக் குழந்தைகள் (14%) மூளை வளர்ச்சிக் குறைவால் நிரந்தரமாகப் பாதிக்கப்படுகின்றனர். இது முற்றிலும் தவிர்க்கக்கூடிய குறைபாடே என்றும் விஞ் ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அயோடின் குறைவால் குழந்தைகளின் அறிவுத்திறன் (ஐக்யூ) 8 முதல் 10 புள்ளிகள் வரை குறையவும் வாய்ப்பு ஏற்படுகிறது.




1990 முதலே உலக அளவில் அயோடின் பற்றாக்குறை குறித்த விழிப்புணர்ச்சி ஊட்டப்பட்டுவருகிறது. சாப்பாட்டு உப்பில் அயோடினைக் கலப்பதைக் கட்டாயமாக்கிச் சில வளரும் நாடு கள் உத்தரவிட்டுள்ளன. ஆனால், கடந்த வாரம் கிடைத்த ஆய்வு முடிவுகள் இதில் மேலும் முயற்சி கள் எடுக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. ஐ.நா. சபையின் குழந்தைகள் நலனுக் கான 'யுனிசெஃப்' முகமையும், 'மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்துக்கான உலகக் கூட்டணி' (கெயின்) அமைப்பும் இணைந்து கடந்த பத்தாண்டுகளாக அயோடின் சத்துக்குறைவைப் போக்க இணைந்து செயல்படுகின்றன. அயோடின் சேர்க்கப்பட்ட உப்பை உட்கொண்ட பிறகு 13 நாடுகளில் ஏற்பட்டுள்ள வெற்றிகரமான மாற்றங்கள் குறித்து சார்ட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பகாலத்தில் குழந்தைகளுக்குக் கிடைக் கும் உணவில் உள்ள அயோடின் அளவைப் பொறுத்தே அதன் உடல், மூளை வளர்ச்சி அமைகிறது. குழந்தை கருவுறும் நாள் தொடங்கி இரண்டு வயது ஆகும் வரையில் அதாவது சுமார் 1,000 நாட்களுக்கு உட்கொள்ளும் சத்தான உணவுதான் குழந்தையின் உடல், மூளை வளர்ச்சி, நோயெதிர்ப்பு சக்தி ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றன. நல்ல சத்துள்ள உணவை உண்ணும் குழந்தைகளால் விரைவாகப்







பேச, செயல்பட, புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது. அப்போது கிடைக்கும் மூளை வளர்ச்சி குழந்தையின் ஆயுள் காலத்துக்கும் அடித்தள மாகிறது.

அயோடின் பற்றாக்குறையால் வளர்ச்சிக் குறைவு என்பது ஏழை நாடுகளில், பின்தங்கியுள்ள சமூகங்களில் மட்டும் ஏற்படுவதல்ல. வளர்ந்த நாடுகளில் பெரிய பணக்காரக் குடும்பங்களின் பிள்ளைகள்கூட மூளை வளர்ச்சியில்லாமல் இருக்கின்றனர்.

நிலத்திலும் நீரிலும் கலந்திருக்கும் அயோடின் உலகின் எல்லா பகுதிகளிலும் ஒரே சீரான அளவில் இருப்பதில்லை. ஒரு நாட்டின் புவியமைப்பியலும் இதைத் தீர்மானிக்கிறது. அதற்கேற்ப உணவுச் சங்கிலியில் அயோடின் சேர்கிறது. ஆனால், பெரும்பாலும் உப்புடன் சிறிது அயோடினைச் சேர்த்து உண்ணும் நிலைதான் நிலவுகிறது.






ஹன்னா சம்மர்ஸ்


ஒரு நாளைக்கு ஒரு நபர் அதிகபட்சம் 5 கிராம் அளவு மட்டுமே உப்பு சேர்த்துக்கொள்ளலாம். அந்த உப்பு அனைத்துமே அயோடின் கலந்ததாக இருத்தல் அவசியம். அயோடின் கலந்த உப்பு இப்போது உலகின் 86% வீடுகளால் உண்ணப்படுகிறது. பிஸ்கெட், ரொட்டி, ஊறுகாய், இதர தின்பண்டங்கள் தயாரிக்கும் நிறுவனங்களும் இப்போது அயோடின் கலந்த உப்பைத்தான் கையாள்கின்றன. சிறிய அளவில் உப்பு தயாரிப்பவர்களைக் கொண்டுள்ள நாடுகளில்தான் இது குறைவாக இருக்கிறது.

புருண்டி, மாலி, மடகாஸ்கர், மொசாம்பிக், தெற்கு சூடான், சூடான் ஆகிய நாடுகளில் அயோடின் பற்றாக்குறை அதிகம். தெற்காசியாவில் பரவாயில்லை. சில ஐரோப்பிய நாடுகள் உட்பட மொத்தம் 20 நாடுகளில் அயோடின் பற்றாக்குறை




இப்போதும் நிலவுகிறது. பிரிட்டனிலேயே கர்ப்பிணிகளுக்கு அயோடின் குறைவு காணப்படுகிறது.

அயோடின் கலந்த உணவில் முதலிடம் பெறுவது பால். ஆனால், பிரிட்டன் உட்பட பல நாடுகளில் மக்கள் இப்போது பால் அருந்துவதை நிறுத்திவருகிறார்கள். புன்செய் தானியங்கள், முட்டை, கடல்வாழ் பிராணிகளாலான உணவு ஆகியவற்றில் வெவ்வேறு அளவில் அயோடின் இருக்கிறது. குழந்தைகளுக்கான ஊட்டச் சத்துணவில் அயோடின் கலந்த உப்பையும் இனி சேர்க்க வேண்டும்.

கர்பகாலத்தில் அயோடின் குறைபாடு இருந்தால், அது பிறக்கப் போகும் குழந்தையின் மன வளர்ச்சியை பாதிக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பிரிட்டனில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், கர்பகாலத்தில் தாய்மார்கள் அயோடின் சத்து நிறைந்த மீன் மற்றும் பால் பொருட்களை போன்ற உணவுகளை போதுமான அளவில் உட்கொள்ளா விட்டால் பிறக்கப் போகும் குழந்தையின் அறிவுத்திறன் மற்றும் வாசிப்புத்திறன் ஆகியவை ஒப்பீட்டளவில் மற்ற குழந்தைகளைவிட குறைவாக இருந்ததாக அந்த ஆய்வில் கணடறியப்பட்டுள்ளது.




ஆரம்பப் பள்ளி சிறார்களிடையே நடத்தப்பட்ட ஆய்விலேயே இந்த முடிவுகள் தெரிய வந்ததாகவும் இதில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே போல அயோடின் சத்து அதிக அளவிலுள்ள கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்பட்ட கூடுதல் ஊட்டச்சத்து அளிக்கக்கூடிய உணவு வகையையும் கர்பிணித் தாய்மார்கள் தவிர்க்க வேண்டும் எனவும் அந்த ஆய்வு கூறுகிறது.

அயோடின் சத்து மிக அதிக அளவில் உள்ள கடற்பாசி சார்ந்த உணவுகளை கர்பிணிகள் உட்கொள்ளும் போது, தேவையான அளவுக்கு கூடுதலாக அது உடலில் சேரும் போது அதுவும் நல்லத்தல்ல என்று அந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகளவில் தவிர்க்கப்படக் கூடிய மூளை பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு கடுமையான அயோடின் பற்றாக்குறை ஒரு முக்கிய காரணமாக உள்ளது என்று கருதப்படுகிறது.

உணவில் உப்பை அதிகம் சேர்ப்பதையும் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏழைகள் உள்ளிட்ட நலிவுற்ற பிரிவினரிடத்தில் அயோடின் பற்றாக்குறை இருக்கிறதா என்று தொடர்ந்து பரிசோதிக்க வேண்டும். உப்பில் அயோடினைச் சேர்ப்பதைக் கட்டாயமாக்கும் சட்டம் முறையாக அமல்படுத்தப்படுகின்றனவா என்றும் கண்காணிக்க வேண்டும்.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY


306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648



# மாற்றம் !

## மாற்றங்களுக்குத் தயாராகட்டும் மனம்

இன்றைய உலகம் ஓர் ஓட்டப் பந்தயக் களம் ஆகிவிட்டது என்றால் அது மிகைச் சொல்ல அல்ல. இங்கு ஓர் அறிவிக்கப்படாத போட்டி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவரவர் துறையில் முதலிடத்தை தேடி ஓடுதலும், பொருள் தேடல், உயர்ந்த இடத்தைப் பிடிப்பது என்ற போட்டியில்




கற்றோர் —கல்லாதவர், ஏழை — பணக்காரர், தனி நபர்— நிறுவனங்கள் என அனைவரும் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

இப்போட்டியின் வேடிக்கையான அம்சம், இதன் களவிதிகளும் நாள்தோறும் மாறுவதுதான். நேற்றைய விதிகளுக்கேற்ப இன்று தம்மை தயார் செய்து கொள்பவர், நாளைய பந்தயத்தில் கலந்து கொள்ளவே முடியாது என்னுமளவுக்கு மாறுதல்கள் நிகழ்கின்றன.




பெரும் தொழில் மற்றும் சேவை நிறுவனங்களைப் பொருத்தவரை, தொழில்நுட்ப மாறுதல்கள், மாறிவரும் நுகர்வோர் தேவைகள், சேவையில் புது நோக்கு, நூதன சேவை அல்லது பொருட்கள் என பல மாறுதல்களுக்கு ஈடு கொடுப்பவர்கள் மட்டுமே களத்தில் நிற்க முடியும் .

வெற்றிகரமான நிறுவனங்கள் எல்லாவற்றிலும் ஒரே பொது அம்சம், அவை மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பதுதான். நூறு ஆண்டுகளை கடந்த பல பெரிய நிறுவனங்கள் கூட தங்களது நிர்வாகத்திலும் நோக்கிலும் மாறுதல்களை வேகமாக செயல் படுத்தாததால் காணாமல் போவதைப் பார்க்கிறோம்.

இன்னொருபுறம், தொழில்நுட்ப ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்துவதும், சந்தையில் நுகர்வோர் மனங்களில் அந்த மாற்றங்களை ஏற்புடையதாகச் செய்யும் நிறுவனங்களே




# நிரந்தரம்!

இரா. கதிரவன்

நீண்ட காலம் நிலைத்து, பிற நிறுவனங்களுக்கு முன்னோடியாக நிற்க முடிகிறது.

நிறுவனங்களுக்குப் பொருந்தும் இவ்விதிகள் அங்கு பணிபுரிவோருக்கும் பொருந்தும். தனது நிறுவனத்தில் மாறிவரும் சூழலுக்கேற்ப அதில் பணிபுரிபவர்கள் தம்மை செம்மைப்படுத்திக்




கொள்வர். நிறுவனங்களும் அவர்களுக்குரிய பயிற்சி வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்துகின்றன. இவர்கள் தமது பலம் — பலவீனம் ஆகியனவற்றை தொடர்ந்து பரிசீலித்து, பலத்தினைப் பெருக்கியும், பலவீனங்களை பலமாக மாற்றுவதனையும் ஒரு நடைமுறையாக கொள்வதனைக் காணலாம்.


இப்படி நிறுவனத்தின் நோக்கத்துக்கும் தேவைகளுக்கும் ஏற்ப தனது திறமையை வளர்த்துக் கொள்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்; அதிகார படிக்கட்டுக்களில் ஏறி மேற்செல்கிறார்கள். மாறுதல்களுக்கு தங்களை தயார் செய்யாதவர்கள்




தேங்குகிறார்கள்.

தனியார் — மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இவ்வாறிருக்க, அரசுத் துறை ஆமை வேகத்தில்தான் மாற்றங்களை எதிர்கொள்கிறது. பெரும்பாலான தனியார் அல்லது பன்னாட்டு நிறுவனங்களில் கருத்துப் பரிமாற்றத்துக்கு ஒருவரது பதவி அல்லது வயது தடைக்கல்லாக இருக்க முடியாது. தனது மூத்த அதிகாரியின் தவறுகளைக் கூட ஒருவரால் துணிச்சலோடு சுட்டிக்காட்ட முடியும். அவரது கருத்துகளைவிட நல்ல, புதிய, மாற்றுக் கருத்துகளை முன்வைத்து அதன் சாதக பாதகங்களை வாதிட முடியும்.

ஆனால், ஒரு தாசில்தார் அலுவலகத்திலோ




அல்லது ஒரு மாவட்ட போலீஸ் அதிகாரி அலுவலகத்திலோ இப்படி ஒரு ஊழியர், தனது அதிகாரிக்கு ஆலோசனையை உரிமையோடு கூற முடியுமா? இன்னும் நாம் பிரிட்டிஷார் காலத்தில் இருந்த அதே மனோபாவத்தோடு, மாற்றங்களுக்கு இடங்கொடுக்காமல் இருக்கிறோம். பல நிர்வாக சீரமைப்பு ஆணைய சிபாரிசுகள் வந்தாலும், மாற்றங்களை ஏற்காமல் இன்னமும் நம்மை பிரிட்டிஷ் காலத்தில் வைத்திருக்கும் கள நிலவரத்தை மறுக்க முடியாது.

நிறுவனங்கள், அரசுத்துறை என்பவற்றைத் தாண்டி, மாற்றம் குறித்துப் பேசும்போது மிக முக்கியமாக கவனிக்கப் பட வேண்டியவர்கள் இன்றைய இளைஞர்கள்தான். பெற்றோரை சார்ந்திருப்பவர் என்ற நிலையிலிருந்து, தனித்து நிற்பவர் என்ற நிலைக்கு மாற வேண்டிய இளைஞர்களை அத்தகைய மாறுதல்களுக்குத் தயார் செய்ய வேண்டிய பொறுப்பு, பெருமளவு பெற்றோருக்கும், ஓரளவு ஆசிரியர்களுக்கும் உள்ளது.

இளைஞர்கள் அவர்களது எதிர்காலத்தை தாமே உருவாக்கிக் கொள்ள, பெற்றோர் கிரியா ஊக்கியாக செயல்பட்டு, அவர்களுக்கு சவால்களை எதிர்கொள்ளும் பழக்கத்தினை ஏற்படுத்தவும், சோதனை முயற்சிகளில் ஈடுபட அனுமதிக்கவும் வேண்டும்.





மாறுதல் என்பது ஒருவழிப் பாதை அல்ல. இங்கு பெற்றோரும் மாற்றங்களுக்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்; இளைஞர்கள் வளரும்போது அவர்களுக்குரிய இடத்தை தந்து, பல விஷயங்களில் தங்களது உரிமையை விட்டுத்தர பெரியவர்கள் முன்வர வேண்டும்.

பதின்பருவம் தாண்டி இருபதுகளை எட்டும் தங்களது பிள்ளைகளுக்கு பெற்றோர் சில முக்கிய கேள்விகளை முன்வைக்கலாம். பல புதிய சூழல்களை கற்பனையாக உருவாக்கி, அதற்குத் தீவிரமாக பதில் தேட கற்றுத் தருதல் பெரும் பயனளிக்கும்.

நாளைக்கே நான் வேலையை இழந்தால்?... அல்லது, உடனடியாக தொலைதூர நகருக்கு பணிமாற்றம் செய்யப்பட்டால்? அடுத்த மாதம் நமக்கு சில லட்சம் பணம் கிடைத்தால்? ஒரு தொழிலில் பங்குதாரராக இருக்கும் வாய்ப்பு வந்தால்? ஒரு குடியிருப்பு வளாகத்துக்கு தலைவராகப் பொறுப்பேற்றால்? ஒரு விழாவினை நடத்தும் பொறுப்பு தரப்பட்டால்? மொழி தெரியாத வெளியூரில் வேலை கிடைத்தால்...என்ற பல கேள்விகளை எழுப்பி, அவற்றை எதிர்கொள்ளும் திட்டங்களை தீட்டச் செய்யலாம். இவை புது சூழலை கற்பனை செய்யவும் அதற்கேற்ப சிந்தனையை விரிவுபடுத்தவும் செய்யும்.

சில சவாலான வேலைகளை சுதந்திரமாக மேற்கொள்ள வைக்கும்போதும், இன்னும் ஐந்தாண்டுகள் — பத்தாண்டுகளுக்குப் பிறகு எந்த இலக்கினை அடையப் போகிறார்கள், அதற்கான தயாரிப்புகள், திட்டங்கள் எவை என்பன போன்ற கேள்விகளை சந்திக்கும்போதும் இளைஞர்கள்




மாறுதல்களை எதிர்கொள்ளத் தயாராவார்கள்.

பழகிய பாதையில் பயணிப்பது இளைஞர்களுக்கு எளிதாக, பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால் அது மாறுதல்களை சந்திப்பதற்கு அவர்களைத் தயார்ப்படுத்தாது.

இரவு பகலாகிறது; பகல் இரவாகிறது. கோடை போய் குளிர் வருகிறது; வறட்சி போய் வெள்ளம் வருகிறது. பூ காயாகிறது; காய் கனியாகிறது; கனி செடியாகிறது. குழந்தை பெண்ணாகிறாள்; பெண் தாயாகிறாள். இளமை மாறி முதுமை ஆட்சி செய்கிறது. இதைத்தான் மாற்றம் ஒன்றே மாறாதது என்கிறோம். மாற்றம் மட்டும்தான் நிரந்தரம். அனைத்து உயிரினங்களும், அவற்றுக்கே உரித்தான குணங்கள் மற்றும் பண்புகளை உள்ளடக்கியிருக்கின்றன. அவை நிலையானது என, நம்பப்படுகிறது.

ஆனால், அனுபவத்தில் என்ன காண்கிறோம்? அன்பு வெறுப்பாகிறது; வெறுப்பு பாசமாகிறது; கோபம், சாந்தமாகிறது; சாந்தத்தை கோபம் காலி செய்கிறது. அதாவது மனிதனின் குணம் மாறி கொண்டே இருக்கிறது. ஏன்? தேவை, வசதி, வாய்ப்பு, சூழ்நிலைக்கு ஏற்ப, ஆபத்தை தவிர்த்து, நன்மை கருதி, குணம் மாறுபடுகிறது; மாற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறது. இதைத்தான் மாற்றம் ஒன்றே மாறாதது; மாற்றம் மட்டும்தான் நிலைத்திருக்கும் என்கிறோம்.

மாற்றம் வரும்போது, அதை மனிதன் ஏற்றுக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். இதை புரிந்து கொண்டால், மாற்றத்தை சந்திக்கும் போது, ஏமாற்றம் அடைய வேண்டி இருக்காது.




”மாற்றம் ஒன்றே மாறாதது” என்ற இந்த பொன்மொழியைச் சொன்னவர் ஹெராகிளிடஸ் (HERACLITUS) என்ற கிரேக்க அறிஞர். (இவர் கிரேக்கத்தில் சொன்னதை ஆங்கிலத்தில் “மாற்றம் ஒன்றே மாறாதது (Change is the only immutable)” மற்றும் “மாற்றம் ஒன்றே நிலையானது (Change is the only constant)” என்று இரண்டு விதமாக மொழிபெயர்த்தனர். இன்னும் சிலர் “There is nothing permanent, except Change” என்றும் எழுதினர்

மாறாதது மாற்றம் ஒன்றே என்ற பழஞ் சொல்லுக்கேற்ப அவர்கள் மனதைத் தயார் செய்ய வேண்டும். இளைஞர்களை மாற்றங்களுக்குத் தயார்ப்படுத்துவது மட்டுமல்ல, மாற்றங்களை ஏற்படுத்த தயார்ப்படுத்துவதும் மேலும் சிறந்ததாகும்.

# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018


### JANUARY




### FEBRUARY




### MARCH




### APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |


### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा